DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1367
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 17, 2022

# ஓட்டாவாவில் இடம்பெற்ற லிபரல் ஒன்று கூடலில் கன்சர்வேடிவ் தலைமை வேட்பாளரான பியர் பொய்லிவ்ரேயை கடுமையாக விமர்சித்த துணைப் பிரதமர் கிறிஸ்டினா



கடந்த திங்கட்கிழமையன்று ஓட்டாவாவில் இடம்பெற்ற லிபரல் கட்சியின் ஒன்றுகூடலில் பிரதான உரையாற்றிய கனடாவின் தற்போதைய நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், மத்திய கன்சர்வேடிவ் கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரான பியர் பொய்லிவ்ரேயை கடுமையாகத் விமர்சித்துப் பேசினார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பான எந்தவித அறிவும் இல்லாத அவர் தான் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பெற்றால் தற்போதைய கனடாவின் மத்திய வங்கியின் ஆளுனரை பதவியிலிருந்து அகற்றுவேன்' என்று சில நாட்களுக்கு முன்னர் பேசியது தொடர்பாகவே துணைப்பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், இவ்வாறு அவரை கடுமையாக கண்டித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி ம் பக்கத்தில்)

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

# 26-05-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் நடைபெறவுள்ள Miss Tamil Universe-2022 போட்டி நிகழ்வுக்காக இலங்கையிலிருந்து வந்துள்ள இளம் பெண் போட்டியாளர்கள்




எதிர்வரும் 26-05-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான **Hilton Toronto/ Markham Suites Conference Centre** இல் நடைபெறவுள்ள **Miss Tamil Universe-2022** போட்டி நிகழ்வுக்காக இலங்கையிலிருந்து வந்துள்ள பத்துக்கு மேற்பட்ட இளம் பெண் போட்டியாளர்கள் தற்போது போட்டி தொடர்பான பயிற்சிகளிலும் சந்திப்புகளிலும் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

இங்கே காணப்படும் படத்தில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் **AGA Beauty Academy** நிறுவனத்தின் அதிபர் திருமதி சசிகலா நரேன் மற்றும் பிரதான அனுசரணையாளர்கள் உதவியாளர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் நோர்த் யோர்க் நகரில் இடம் பெற்ற சந்திப்பு நிகழ்ச்சியொன்றில் ஒன்றாக எடுத்துக்கொண்ட படம் இங்கு காணப்படுகின்றது. (படம்: ஐயா4யூ)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

**Manufacturing Workers and General Labour Needed for Full-time Morning Shifts**
**Looking for Workers to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for long-term positions.**
**Located in Scarborough near Markham and Ellesmere.**
**Salary starting from $16.00 + with benefits.**

Contact - Essan : 647-993-2872

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

**We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.**

**Responsibilities:**
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

**Qualifications:**
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

**Benefits:**
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

Contact - Essan : 647-993-2872

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் கௌரவமான குடும்பத்தில் பிறந்தவரும் தற்போது அவுஸ்த்திரேலியாவில் Civil Engineer ஆக பணியாற்றுகின்றவரும் Australia நிரந்தரப் பிரஜையும் 1976ம் ஆண்டு பிறந்தவருமான மணமகனுக்கு மணப்பெண் ஒருவரை அவருடைய உறவினர்கள் தேடுகின்றனர். எந்த நாட்டிலிருந்தும் விண்ணப்பிக்கலாம். மணமகன் விவாகரத்து பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் விபரங்களுக்கு 647-667-8176 என்னும் தொலைபேசி இலக்கத்திலோ அன்றி layanthan24@yahoo.ca என்னும் மின்னஞ்சல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

### Help Wanted

**Part time kitchen helper and dishwasher wanted.**

**Canadian cook wanted part time and South Indian cook for take out. Part time Indian cook wanted for curry and tandoori.**

**Markham (Woodbine & Steeles)**
**Call Amar : 416-988-9518**

### Restaurant வேலை வாய்ப்புக்கள்

Yonge and Eglinton சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் கனடிய உணவகம் ஒன்றுக்கு: Full Time அல்லது Part Time Line Cooks மற்றும் Dish Washers உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

அனுபவம் விரும்பத்தக்கது. ஆர்வமுடையோர் 416-627-6452 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# பிரதமராகப் பதவியேற்று அதன் சுகத்தை மட்டுமே அனுபவிக்கின்றாரா ரணில்?

ராஜபக்ச சகோதரர்களுக்கு எதிரான 'மக்கள் புரட்சி' ஏற்படத் தொடங்கவே, நாட்டின் ஜனாதிபதியாக உள்ளவரின் வேண்டுகோளை ஏற்று இலங்கையின் 'திடீர்' பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க பதவியின் சுகத்தை மட்டுமே அனுபவிக்கின்றாரா என்ற கேள்வியை நாட்டின் புத்திஜீவிகள் பலர் எழுப்பிய வண்ணம் உள்ளார்கள் என எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளமையை நாம் எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளில் 'அதிஸ்டம;' மிக்க ஒரு தலைவராக விளங்கும் ரணில் அவர்கள் கடந்த மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் கூட எத்தனையோ அழிவுகளும் அடக்கு முறைகளும் அந்த மண்ணில்இடம் பெற்றாலும் அந்தப் பக்கம் பார்க்கமலேயே நாட்களைக் கடத்திய வண்ணம் நாட்டு மக்களை ஏமாற்றியவர் தான் இந்த ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

தற்போது அவர் வகிக்கும் பிரதமர் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பெற்ற பின்னர் அவர் சாதித்தது என்ன என்பதை நாட்டு மக்களும் ஏனைய தலைவர்களும் தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டிய நிலை உள்ளதாகத் தெரியவருகின்றுத.

நாட்டின் பொருளாதாரத்தை படிப்படியாகச் சீரழித்த அவரும் அவரது சகாக்களும் எத்தனை கோடிகள் ரூபாய்களாய் 'ஏப்பம்' விட்டார்கள் என்பதை புலம் பெயர் தமிழர் சமூகத்தினர் நன்குந அறிந்த விடயமாகும். அவர் பிரதமராக பதவியேற்ற பின்னர் வெறுமனே 'கோசங்களாக' பர அறிக்கைகளாக வெளியிட்ட வண்ணம் இருந்தாரே என்பதைத் தவிர நாட்டு மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முயன்றாரா என்பதே கேள்விகளாக உள்ளதாக தென்னிலங்கையில் அவர்களின் கட்சியில் உள்ளவர்களே குற்றஞ்சாட்டும் நிலை தோன்றியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் சந்திப்பபு ஒன்றின் போது கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்

"2019 ஆம் ஆண்டில் இருந்த பொருட்களின் விலைகளை மீண்டும் அதே மட்டத்திற்கு கொண்டு வர முடியாது ஆனால் படிப்படியாக ஒவ்வொரு நாட்டுப் பிரஜையினதும் வருமானத்தை அதிகரிப்பதே செய்ய கூடிய ஒரே வழிமுறை எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ள விடயத்திற்கு ஆரம்பத்தை அவர் காட்டுவாரா என்பதையே பல ஆய்வாளர்கள் பல இடங்களில் கேட்டு வருகின்றனர்

இளம் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் சூம் தொழிற்நுட்பம் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை கூறியுள்ளார்.

2022 ம் ஆண்டு நாம் எதிர்பார்த்த வண்ணம் எமக்குத் தேவையான சகல பொருட்களின் பழைய விலையை நாம் கனவிலும் எட்ட முடியாது என்ற நாட்டின் உண்மையை நிலையை அவர் வெளிப்படையாகத் தெரிவித்தாலும் கூட, அது கூட உணர்ச்சி வசப்பட்ட நிலையே என்றும் கருத வேண்டியுள்ளது. நாம் சரியான வழியில் செல்ல வேண்டுமாயின் இந்த வருடம் சிரமமானதாக இருக்கும் என்றும் எனவே 2023 ஆம் ஆண்டில் இந்த ஆண்டை விட சிறிய முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளமை ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இயலாமையையே என்பது நன்கு புலனாகின்றது.

# வவுனியா மற்றும் திருகோணமலையை சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்



இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ள நிலையில் மக்கள் இலங்கையில் இருந்து சட்ட விரோதமான முறையில் இ தமிழகத்திற்கு செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் தனு'கோடி அடுத்த ஒன்றாம் தீடை பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை (17ம் திகதி) இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒரு ஆண், இரண்டு பெண், 4 குழந்தை உட்பட 7 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தீடை பகுதியில் இலங்கை தமிழர்கள் அகதிகளாக சென்று அவர்கள் தஞ்சம் அடைந்துள்ளதாக மரைன் போலீசார் கிடைத்த தகவல் அடிப்படையில் விரைந்து சென்ற போலீசார் அவர்களை மீட்டு விசாரணைக்காக மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதையடுத்து விசாரணை முடிந்த பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் அவரது தங்க வைக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந் துள்ளவர்கள் வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 குடும்பங்களை சேர்ந்த 7 பேர் என தெரிய வந்துள்ளது.

ACCOUNTING ASSISTANT WANTED

Busy accounting firm in Scarborough, requires Accounting Assistant. Fluent in English and Tamil and computer literacy.
Required Accounting Graduates only, Experience not required, we will train
Interested applicants resume to acctgtrainee@gmail.com

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: 416-894-6244

தொழிற்சாலையில் உடனடி வேலை வாய்ப்பு



ஸ்காபுறோவில்
Markham & Finch சந்திப்பிற்கு அருகில் இயங்கிவரும் அலுமாரி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

அனுபவம் விரும்பத்தக்கது.

-> Cabinet Maker - அலுமாரி செய்பவர்
-> Saw Operator - பலகை வெட்டுபவர்
-> Cabinet Installer - அலுமாரி பூட்டுபவர்
-> Spray Painter - பெயின்ட் அடிப்பவர்

தொடர்புகளுக்கு: (416) 994-7776

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கொல்லங்கலட்டியில் நடைபெற்றது



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி ஞாயிறுக்கிழமை (09-06-2022) தெல்லிப்பளை கொல்லங்கலட்டியில் நடைபெற்றுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்கோடும் அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கோடும் கிராமங்கள் தோறும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே கொல்லங்கலட்டியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

பா. நவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சி. சிவகஜன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்கள். அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்ற இந்நிகழ்ச்சியின் முடிவில் மாணவர்கள் அனைவருக்கும் மரநடுகை மேற்கோள்கள் அடங்கிய அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டன. இவ்வப்பியாசக்கொப்பிகள் ரொறன்ரோவின் மனித நேயக்குரல் என்னும் அமைப்பின் அனுசரணையுடன் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# மன்னாரில் அதிக விலையில் அரிசி விற்ற விற்பனையாளர்கள் மீது வழக்குப்பதிவு



அரசாங்கத்தினால் அரிசிக்கு அதி உச்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்ட நிலையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை மேற்கொண்ட வியாபாரிகள் மீது திங்கட்கிழமை (13) வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது அரிசியின் நிர்ணய விலை காட்சிப் படுத்தாது, அரிசி விற்பனையில் ஈடு பட்டமை, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்தவர்கள் மற்றும் அரிசியை பதுக்கி வைத்த சில வர்த்தகர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளை நாடு 220 ரூபாய்க்கும், சிவப்புபச்சை 210 ரூபாய்க்கும், சம்பா 230 ரூபாய்க்கும், வெள்ளைப்பச்சை 220 ரூபாய்க்கும், விற்பனை செய்யும்படி அரசாங்கத்தினால் விலை நிர்ணயிக்க பட்டுள்ள நிலையில் குறித்த விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது ஒரு லட்சம் தொடக்கம் ஐந்து லட்சம் வரை அபராதமும் மொத்த வியாபார நிலையங்களுக்கு ஐந்து லட்சம் தொடக்கம் ஐம்பது லட்சம் வரை அபராதமும் விதிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த விசேட ரோந்து நடவடிக்கை மன்னார் மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தப்பட உள்ளதுடன் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்பவர்கள் மற்றும் பொருட்களை பதுக்கி வைப்பவர்கள் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு சபையில் பொதுமக்கள் நேரடியாக முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அரசாங்க அதிபருக்கு அவசர கடிதம்



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் செவ்வாய்க்கிழமை (14) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் இல்மனைட் கனிம வள மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் இல்மனைட் மணல் அகழ்வுக்கு பாரிய எதிர்ப்புகள் இருந்தும் கூட அதற்கு எந்தத் தடையும் இன்றி கனிம வள மணல் அகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது.

எனவே கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும், குறித்த கலந்துரையாடல் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னார் நிருபர்




# வழக்கத்தை விட உள்வாங்கிய ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் கடல்: மீனவர்கள் மத்தியில் அச்ச நிலை



ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுக கடல் பகுதி வழக்கத்தை விட புதன்கிழமை (15) காலை உள் வாங்கி உள்ளதால் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாட்டுப்படகுகள் தரைதட்டி உள்ளதோடு, அடிக்கடி கடல் உள்வாங்கியதால் மீனவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுத்தியுள்ளது.

தமிழக அரசால் அறிவித்துள்ள மீன்பிடி தடை காலம் நள்ளிரவுடன் முடிவடைந்த நிலையில் ராமேஸ்வரம் மீனவர்கள் செவ்வாய்கிழமை (14) மாலை மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். மீன் பிடிக்க சென்ற ஒரு சில மீன்பிடி விசைப் படகுகள் மீன் பிடித்து விட்டு புதன்கிழமை (15) காலை மீன்களை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திற்கு எடுத்து வந்தனர்.

இந்நிலையில் மீன் பிடித்து வந்த மீன்பிடி படகுகள் கடல் உள்வாங்கியதால் தரை தட்டி படகு சேதமடையும் என்ற அச்சத்தில் படகை மீனவர்கள் துறைமுகம் கொண்டு வந்தனர்.

எனவே தமிழக அரசு பழமையான ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தை உடனடியாக தூர்வாரி பேரிடர் காலங்களில் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வழி வகை செய்து தர வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மேலும் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து கடல் உள்வாங்கி வந்த நிலையில் கடந்த வாரம் கடல் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியது ஆனால் தற்போது இன்று காலை முதல் தொடர்ந்து கடல் உள்வாங்கியதால் மீனவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் வழக்கத்திற்கு மாறாக கடல் உள் வாங்கியுள்ளதால் கடற்கரை ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாட்டுப் படகுகள் தரை தட்டி நிற்கிறது.

- மன்னார் நிருபர்

# மத வெறுப்பைப் பரப்புபவர்களைக் கைது செய்க

## தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை

இந்தியா செய்திகள் India News



நபிகள் நாயகம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்ட பா.ச.க. செய்தி தொடர்பாளர்கள் மீதும், மத வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் பேசிய ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் மற்றும் பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினர் பர்வேஷ் வர்மா ஆகியோர் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடுத்து அவர்களை கைது செய்ய மறுக்கும் இந்திய அரசின் போக்கினை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நபிகள் நாயகம் குறித்து அவதூறு செய்தவர்களை எதிர்த்து நாடெங்கும் அமைதியான முறையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கு அரசு முயற்சியினை மேற்கொண்டுள்ளது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் எதிர்த்து போராடுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது இந்த அரசின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கவே இத்தகைய போக்கு உதவும். சனநாயக சக்திகள் அனைத்தும் இணைந்து இதற்கு எதிராகக் குரல் கொடுக்க முன்வருமாறு வேண்டுகிறேன்.

அன்புள்ள,

(பழ.நெடுமாறன்)
தலைவர்

# சிங்கப்பூரில் தமிழ்ப்பெண்ணை இரண்டாவதாக மணந்த தமிழர், மூன்றாவது திருமணத்துக்கும் முயன்றதால் 37 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார்

உலக செய்திகள் World News

சிங்கப்பூரில் தமிழ்ப்பெண்ணை திருமணம் செய்த நபர் செய்த மோசடி வேலைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ள நிலையில் மொத்த குடும்பமும் வசமாக சிக்கியுள்ளது.

தமிழகத்தின் புதுக்கோட்டையை சேர்ந்தவர் சோலை கணேசன் (38). இவர் சிங்கப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அப்போது அங்கு ஆரோக்கிய மேரி (36) என்பவருடன் முகநூலில் பழகி அறிமுகமாகி உள்ளார். பின்னர் இருவரும் கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி சிங்கப்பூரில் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தின் போது ரூ.72 லட்சத்து 85 ஆயிரத்தை வரதட்சணையாக ஆரோக்கியமேரி கொடுத்துள்ளதாக தெரிகிறது.

இந்த சூழலில் சோலை கணேசன் சொந்த ஊருக்கு வந்தார். அப்போது அவருக்கு 17 வயது சிறுமியுடன் திருமண ஏற்பாடுகள் நடந்தது. இந்த நிலையில் சிங்கப்பூரில் இருந்த ஆரோக்கியமேரிக்கு கணவரின் திருமண ஏற்பாடு குறித்த விவரம் தெரியவந்தது. அப்போது அவர் விசாரித்ததில் சோலை கணேசனுக்கு ஏற்கனவே திருமணமாகி மனைவி பிரிந்திருந்ததும், அந்த திருமணத்தை மறைத்து தன்னை ஏமாற்றி 2-வது திருமணம் செய்ததும் தெரிந்தது.

மேலும் தற்போது 3-வது திருமணத்திற்கு முயன்று வருவதும் தெரிந்தது.



இதையடுத்து அதிர்ச்சியடைந்த மேரி இந்த மோசடி தொடர்பில் பொலிசில் புகார் அளித்தார். இதில் சோலை கணேசனை பொலிசார் கைது செய்தனர். இவ்வழக்கு விசாரணை புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன்படி சோலை கணேசனுக்கு 37 ஆண்டு சிறை தண்டனை, 2.80 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. உடந்தையாக இருந்த தாய் ராஜம்மாளுக்கு 15 ஆண்டு சிறை, 1 லட்சம் ரூபாய் அபராதம், தங்கை கமலஜோதிக்கு 15 ஆண்டு சிறை, 1.80 லட்சம் ரூபாய் அபராதம், தம்பி முருகேசனுக்கு 16 ஆண்டு சிறை, 1.60 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் சோலை கணேசனின் சித்தப்பா நாராயணசாமிக்கு 15 ஆண்டு சிறை, 1.90 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இந்தியா செய்திகள்
India News

# உலகின் மிகச்சிறந்த பாடசாலைகளுக்கான விருதில் முதல் 10 இடங்களில் 5 இந்திய பாடசாலைகள் தேர்வாகின



உலகின் சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்குவது இங்கிலாந்தில் உள்ள டிஜிட்டல் மீடியா தளமான டி4 கல்வி அமைப்பால் பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

சமூக ஒத்துழைப்பு, சுற்றுச்சூழல் நடவடிக்கை, புதுமை, இன்னல்களை சமாளித்தல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஆதரவு ஆகிய ஐந்து பிரிவுகளில் பரிசுகள் வழங்கப்படும். பொது வாக்கெடுப்புக்கு பின் உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற தலைவர்களை கொண்ட நடுவர் குழு வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும். இந்த ஆண்டு அக்டோபரில் வரும் உலக கல்வி வாரத்தில் இந்த ஆண்டுக்கான சிறந்த பள்ளி போட்டியின் வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட உள்ளனர்.

இந்நிலையில், பரிசுக்கான முதல் 10 இடங்களில் 5 இந்திய பாடசாசாலைகள் இடம்பெற்றுள்ளன. மும்பையை சேர்ந்த எஸ்விகேஎம்மின் சிஎன்எம் பள்ளி, டெல்லி லாஜ்பாட் நகரில் உள்ள எஸ்டிஎம்சி பாடசாலை ஆகியவை புதுமைக்கான பிரிவில் முதல் 10 இடங்களில் இடம்பெற்றுள்ளன. மும்பை கோஜ் பாடசாலை, புனேவில் உள்ள பிசிஎம்சி ஆங்கில வழி பாடசாலை ஆகியவை சமூக ஒத்துழைப்பு பிரிவில் தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் 10 பாடசாலைகளில் இடம்பெற்றுள்ளன. சிரமங்களை சமாளிப்பதற்கான உலகின் சிறந்த பாடசாலைகளுக்கான விருது பிரிவில் ஹவுராவில் உள்ள சமாரிட்டன் மிஷன் பாடசாலை இறுதி பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

# இணையதள சூதாட்ட தடைக்கு புதிய சட்டம்: கே.சந்துரு குழு 2 வாரங்களில் பரிந்துரைகளை அளிக்க தமிழக முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



இணையதள சூதாட்ட விளையாட்டு (ஆன்லைன் ரம்மி விளையாட்டு) குறித்த அவசரச் சட்டம் தொடர்பான பரிந்துரைகளை அளிக்க ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இணையதள சூதாட்ட விளயாட்டில் பணத்தை இழந்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே உள்ளது. எனவே, அந்த விளையாட்டை தடை செய்ய வேண்டும் என்று பல அரசியல் கட்சி தலைவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இந்நிலையில், ஈஅணையதள சூதாட்டவிளையாட்டு.

குறித்த அவசரச் சட்டம் தொடர்பான பரிந்துரைகளை அளிக்க ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சந்துரு தலைமையில் குழு அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "இணையதள சேவைகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாள்தோறும் பன்மடங்கு அதிகரித்து வரும் நிலையில், சூதாட்ட விளையாட்டில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. முந்தைய ஆட்சியாளர்களால் கடந்த 25-2-2021 அன்று சூதாட்ட விளையாட்டிற்கு எதிராகச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி சில நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு, கடந்த 3-8-2021 அன்று வழங்கிய தீர்ப்பில், இச்சட்டம் போதுமான காரணங்கள் மற்றும் ஆதாரங்களின்றி பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதனை ரத்து செய்தது. மேலும், இச்சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தபோது, அச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கான அறிவியல்பூர்வமான தரவுகளை விளக்கத் தவறியதாகவும் கருத்து தெரிவித்திருந்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் 13-11-2021 அன்று தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனு இதுவரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேலும், கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இணையதள சூதாட்ட விளையாட்டிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களும் அந்தந்த மாநில உயர் நீதிமன்றங்களால் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இணையதள சூதாட்ட விளையாட்டின்பால் ஈர்க்கப்பட்டு, அதில் பணத்தை இழந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் துயரமான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணையதள சூதாட்ட விளையாட்டினால் ஏற்படக்கூடிய நிதியிழப்பு மற்றும் தற்கொலை உள்ளிட்ட பெரும் ஆபத்தை விளைவிக்கும் தன்மையைக் கண்டறியவும், இவ்விளையாட்டுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உரிய தரவுகளுடன் ஆராயவும், இவ்விளையாட்டுகளை விளையாடத் தூண்டும் விளம்பரங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை கூர்ந்தாய்வு செய்து, அவற்றை உரிய முறையில் கட்டுப்படுத்தவும், இரண்டு வாரங்களுக்குள் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு, தலைமையில், ஐஐடி தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் சங்கரராமன், ஸ்நேஹா அமைப்பின் நிறுவனரும் உளவியலாளருமான டாக்டர் லட்சுமி விஜயகுமார், காவல்துறை கூடுதல் இயக்குநர் வினித் தேவ் வான்கடே ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் இச்சமூகப் பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காண வேண்டிய அவசியம் கருதி, அவசரச் சட்டம் விரைவில் இயற்றப்படும். இதன் மூலம் இச்சட்டம் பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டிடும் வகையில் முன்மாதிரிச் சட்டமாக அமையும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதச்சார்பின்மைக்கு எதிராக தமிழக ஆளுநர் தொடர்ந்து பேசுவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல: திமுக கண்டனம்



சனாதனத்துக்கு ஆதரவாகவும், மதச்சார்பின்மைக்கு எதிராகவும் ஆளுநர் தொடர்ந்து பேசுவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல என திமுக பொருளாளரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சனாதன தர்மம் குறித்தும், வெடிகுண்டுத் தாக்குதல்களை நியாயப்படுத்தும் வகையிலும் பேசிய பேச்சுக்களுக்கு திமுக சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநரின் தனிப்பட்ட ஆன்மீக எண்ணங்கள் என்பவை அவரது தனிப்பட்ட விருப்பங்கள் ஆகும். அவற்றை விமர்சிக்க விரும்பவில்லை. அதேநேரத்தில் அரசியல் சட்டத்தின் நீதிநெறிமுறைகளுக்கு உட்பட்ட ஒரு பதவி நிலையில் இருக்கும் ஒருவர் தெரிவிக்கும் கருத்தானது அத்தகைய சட்டத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டதாகத்தான் அமைய வேண்டும். சட்டத்தை மீறியதாகவோ, சட்டத்தை மீறுவதாகவோ அமையக் கூடாது. இதனை ஆளுநர் நன்கு அறிவார் என நினைக்கிறேன்.

சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, "வேற்றுமையில் ஒற்றுமை என நாட்டைப் பற்றி கூறுகிறோம். சனாதன தர்மமும் அதையேதான் கூறுகிறது. இந்தியாவில் ராணுவம், பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைப்போல ஆன்மிகத்திலும் வளர்ச்சி அவசியம். ஆன்மிகத்தில் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சியாக அமையும்" என்று பேசி இருக்கிறார். இத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்த சனாதன தர்மத்தை நிலைநாட்டும் வன்முறைப் பாதையை நியாயப்படுத்தியும் பேசி இருக்கிறார். "சோமநாதர் கோயில் சொத்துகளை அழித்து கந்தகார், பெ'ாவர் நகரங்களை கஜினி முகமது உருவாக்கினார். அந்த நகரங்கள் அமெரிக்க குண்டுகளால் தகர்க்கப்பட்டதில் இருந்து சனாதன தர்மத்தின் வலிமையை அறியலாம். ரிஷிகளாலும் முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியினாலும் இந்த நாடு உருவாக்கப்பட்டது" என்றும் பேசி இருக்கிறார் ஆளுநர். இவை அவர் வகிக்கும் அரசியல் சட்டப் பதவிக்கு அழகல்ல. வெடிகுண்டு பாதையே சரி என்கிறாரா ஆளுநர்? யாருக்கு அவர் வழிகாட்டுகிறார்?

"இந்தியா என்பது இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு நாடாக உள்ளது" என்கிறது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை. ஆளுநரின் உரை என்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையைக் கிழித்தெறிவதாக அமைந்துள்ளது. சமயச்சார்பற்ற தன்மையைப் பிரதிபலிக்க வேண்டிய ஒருவர், ஒரு சமயத்தின் சார்பாளராகக் காட்டிக் கொள்வதையும் தாண்டி - மாற்று மதத்தினர் மீது மனவேறும் மாறுபாடும் கொள்ளக் கூடிய கருத்துக்களையும் - அதனை வன்முறைப்பாதையில் எதிர்கொள்ளலாம் என்ற தூண்டுதலையும் பொதுவெளியில் பேசுவது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது ஆகும். அமெரிக்கக் குண்டுகளால் இவை தகர்க்கப்பட்டதை நியாயப்படுத்தி கருத்துச் சொல்லி இருப்பது நாட்டில் உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தும் சிந்தனை ஆகும். அமைதி தவழும் தமிழகத்தில் இத்தகைய கருத்துகளை ஆளுநர் என்ற பொறுப்புள்ள பதவியில் இருக்கும் போது ஒருவர் சொல்வதன் பின்னணி பலத்த சந்தேகங்களையும் அச்சத்தையும் விதைப்பதாக உள்ளது. சிலரின் சதிச்சிந்தனைகளுக்கு ஆளுநரின் இந்தக் கருத்துகள் தூபம் போடுவதாகவும் உள்ளது. இந்திய சமுதாயம் வேற்றுமை மிகுந்தது ஆகும். பல்வேறு இனம், மொழி, மதம், பண்பாடு, உணவுப்பழக்க வழக்கம், உடைகள், எண்ணங்கள் கொண்ட மக்கள் வாழும் நாடு இந்தியா. இத்தகைய வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். இதில் பிரிவினை எண்ணத்தை உருவாக்கி, இந்தியாவை நிலைகுலைய வைக்க பல்வேறு சீர்குலைவுச் சக்திகள் முயன்று வருகின்றன. சமீப காலமாகச் சீர்குலைவு சக்திகள் அதிகமாக தலை தூக்கி வருகின்றன. அத்தகைய சக்திகளுக்கு வழிகாட்டுவதாக ஆளுநரின் இந்தப் பேச்சு அமைந்திருப்பது வருத்தமளிப்பதாக உள்ளது. எனவே அதனைக் கண்டிக்க வேண்டியதாக உள்ளது. இந்தியாவை வழிநடத்துவது இந்திய அரசியலமைப்புச் சட்டம்தானே தவிர, சனாதன தர்மம் அல்ல என்பதை ஆளுநருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். மனுதர்மத்தின் ஆட்சி நடக்கவில்லை, மக்களாட்சியே நடக்கிறது.

சனாதன தர்மம் என்பது சாதிக்கொரு நீதி சொல்வது ஆகும். ஆனால் இப்போது நடப்பது சட்டத்தின் ஆட்சி. சட்டத்தின் முன் அனைவரும் சமமே தவிர, வேறுபாடுகள் இல்லை. மனிதனை நான்கு வர்ணமாகப் பிரித்து, அதில் உயர்வு தாழ்வு கற்பித்து - சலுகையிலும் தண்டனையிலும் கூட சாதி வேற்றுமையை நிலை நிறுத்திய சனாதன காலத்தின் மேல் "பிரிட்டிஷ் ஆட்சியின் சட்டக் குண்டுகள்" வீசப்பட்டு 200 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதை எல்லாம் மறந்து விட்டு ஆளுநர் ரவி இன்னும் சனாதனம் பேசுகிறார். அமெரிக்க வெடிகுண்டுகளைப் பற்றி படித்திருக்கும் அவர், இந்தியாவின் உருவாக்கப்பட்ட சட்டங்களின் வரலாற்றை அறியாமல் இன்னமும் சனாதனம் பற்றிப் பேசிக் கொண்டு இருப்பது அவரது காலாவதியாகிப் போன சிந்தனையையே காட்டுகிறது. புதிய கல்விக் கொள்கையை ஆதரித்து தினமும் பேசிவரும் ஆளுநர், இந்தியச் சமூக - சட்ட அமைப்புகளில் கடந்த 200 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கற்றுக் கொண்டு, அதனைப் படித்துப் பார்த்து, உள்வாங்கிக் கொண்டு கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்கும். யாருக்குச் சார்பாகத் தன்னைக் காட்டிக் கொள்ள நினைக்கிறாரோ, அவர்களாலேயே மீண்டும் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாதவை சனாதனக் கொள்கைகள் என்பதை அவர் மறந்துவிட வேண்டாம்.

90 விழுக்காடு மக்களுக்கு எதிரானது சனாதனம். சமூகத்தின் சரிபாதியான பெண் இனத்துக்கு எதிரானது சனாதனம். எனவே, அதனை நியாயப்படுத்தி கருத்துகளை உதிர்ப்பது, இந்தியாவின் பெரும்பான்மை மக்களுக்கே எதிரானது ஆகும்.

சனாதனத்துக்கு ஆதரவாகவும், மதச்சார்பின்மைக்கு எதிராகவும் ஆளுநர் தொடர்ந்து பேசுவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. அரசியலமைப்புச் சட்டமும், உச்சநீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளும் மாநில அரசின் கொள்கை முடிவுகளுக்கு கட்டுப்பட்டவர்களே ஆளுநர்கள் என்றுதான் சொல்கிறது. அத்தகைய எல்லையை மறந்தும், மீறியும் ஆளுநர் தனது கருத்தளிக்கும் உரிமையைப் பயன்படுத்துவது சரியல்ல. மதவாத, சனாதன, வர்ணாசிரம, வன்முறைக் கருத்துகளை ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு தெரிவிப்பது முறையுமல்ல, சட்டமீறல் ஆகும். அவர் ஏற்றுக் கொண்ட பதவியேற்பு உறுதிமொழிக்கு முற்றிலும் முரணானது ஆகும். எனவே, இப்போது சொல்லிய கருத்தை திரும்பப் பெற்று, இனிச் சொல்லாமல் இருக்கவும் உறுதி எடுக்க ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டிலிருந்து கனடாவிற்கு வருகை தந்துள்ள Detective International நிறுவனத்தின் அதிபரும் Detective Director General வுமாகிய V. Kulothunga Cholan அவர்கள்

தமிழ்நாட்டிலிருந்து கனடாவிற்கு வருகை தரும் பல துறை சார்ந்த அறிஞர்கள் பேச்சாளப் பெருமக்கள் மற்றும் கல்வியாளர் அரசியல் தலைவர்கள் என பலரும் எமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு நட்புக் கொள்ளும் வழக்கம் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வரும் ஒன்றாகும்.

அந்த வகையில் அண்மையில் கனடாவிற்கு வருகை தந்துள்ள **Detective International** நிறுவனத்தின் அதிபரும் **Detective Director General** வுமாகிய **V. Kulothunga Cholan** அவர்கள் எமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்துடன் தொடர்பை மேற்கொண்டு தனது வுருகை பற்றியும் இந்தியாவிலும் பல உலக நாடுகளிலும் தான் ஆற்றிவரும் பணிகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

எனவே அவரை கனடா உதயன் பத்திரிகைக்காகவும் "ரூபம்" இணைய வானொலி மற்றும் இணைய வழி தொலைக்ககாட்சிக்காகவும் நேர்காணல் செய்வதற்காக டீரசடபைெவழெ நகரத்தில் உள்ள அவரது புதல்வர் கார்த்திக் அவர்களின் இல்லத்திற்கு ஒரு குழுவாக பயணித்தோம்.

எமது குழுவின் "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களும் "ரூபம்" இணைய வானொலி மற்றும் இணைய வழி தொலைக்ககாட்சி நிலையங்களின் நிறுவனர் ராம் சங்கர் சிவநாதன் மற்றும் அவரது உதவியாளர்கள்.







அத்துடன் வர்த்தகப் பிரமுகர் ரஜீவ் செபராசா அவர்கள் சமூக சேவையா-ளர் விசு கணபதிப்பிள்ளை அவர்கள் ஆகியோர் சென்றிருந்தோம்.

ஏ. **Kulothunga Cholan** அவர்களின் புதல்வரான கார்த்திக் அவர்களின் இல்லத்தில் திருமதி. குலோத்துங்க சோழன் மற்றும் மக்கள் மருமக்கள் ஆகியோர் எம்மை வரவேற்றனர்.

தொடர்ந்து சில மணிநேரங்கள் உரையாடி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட பின்னர் அவரை கனடா உதயன் பத்திரிகைக்காகவும் "ரூபம்" இணைய வானொலி மற்றும் இணைய வழி தொலைக்ககாட்சிக்காகவும் நேர்காணல் செய்து பதிவு செய்து கொண்டோம்.

மேற்படி நேர்காணலுக்ககான சந்திப்பின் போது. அவருடன் பல விடயங்ககளை கேட்டறிந்து கொண்டோம்.

ஒரு தனியான புலனாய்வாளர் என்றவகையில் (னுநவநஉவளைந) என்ற வகையில் அவரது பணிகளில் அவர் இதுவரை சந்தித்த சவால்கள் வெற்றிகள் மற்றும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் முன்னாள் பாரதப் பிரதமர்கள் ஆகியோருக்காக தாமும தமது நிறுவனமும் ஆற்றிய பணிகள் பற்றிய விபரங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்லுர்ரிகள் ஆகியவைக்கு தாமும் தமது புலனாய்வு நிறுவனமும் ஆற்றிய பணிகள் தொடர்பாகவும் பதிலளிக்கும் போது எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

இந்த விபரங்கள் அடங்கிய நேர்காணல்களை "கனடா உதயன்" பத்திரிகையிலும் "ரூபம்" இணைய வானொலி மற்றும் இணைய வழி தொலைக்ககாட்சி ஆகியவற்றிலும் பார்த்தும் கேட்டும் மகிழலாம்.


- கனடா உதயன் ஆசிரிய பீடம்

# யாழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களுக்கு கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" பிரதியை உதயன் தொடர் எழுத்தாளர் "வீணைமைந்தன்" சண்முகராஜா வழங்கினார்



கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய நண்பர்கள் வர்த்தகத்துறை நண்பர்கள் மற்றும் அபிமானிகள் அகியோர்க்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்கள் "இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளித்து வருகின்றார்.

அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் யாழ்ப்பாணத்தில் யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கலை இலக்கியவாதியுமாகிய பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களுக்கு கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" பிர-தியை அவரது இலலத்தில் உதயன் தொடர் எழுத்தாளரும் கலை இலக்கியவாதியுமாகிய "வீணைமைந்தன்" சண்முகராஜா வழங்குவதைக் காணலாம்.



அத்துடன் இலங்கையிலும் சில இடங்களிலும் கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" அறிமுக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**(படங்கள் லம்பேர்ட் - அமலன் யாழ்ப்பாணம்)**


**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




**MOBILE CONSULAR SERVICES - 2022**
**SRI LANKA CONSULATE GENERAL, TORONTO**

25TH JUNE (SATURDAY)
FROM - 09.30 A.M.
TO - 04.30 P.M.

VENUE: INTER-CITI LOGISTIC
10 THORNMOUNT DRIVE
TORONTO ON M1B 3J4

YOU CAN OBTAIN THE FOLLOWING CONSULAR SERVICES

1. Apply for New Passport
2. Translation of Driving License
3. Attestation of Documents to Obtain Dual Citizenship
4. Handing over Dual Citizenship Applications
5. Attestation of Power-of-Attorney
6. Attestation of Affidavit/Notice of Marriage/Parental Consent/Docs. for Opening Second Bank Account
7. Apply for Registration of Births & Deaths
8. Any Other Consular Assistance

For Instructions And Documents Needed For The Service You Require Please Visit The Consulate Website - **www.torontoslcg.org**

Kindly Bring Originals and a Set of Photo Copies

Payments for Services to be Paid in Cash Only.

Inquiries : Phone - 416 323 9133 or E-Mail : srilanka@bellnet.ca

Thushara Rodrigo
Consul General
Sri Lanka Consulate General

இந்தியா செய்திகள்
India News

# உலகில் மிகப்பெரிய தந்தம் கொண்ட போகேஸ்வர் யானை சாவைத் தழுவியது




மைசூரு நாகரஹொளே மற்றும் பண்டிப்பூர் புலிகள் காப்பகம் கர்நாடகாவில் மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளமாகும். இப்பகுதியில் சுற்றித்திரியும் பெரும்பாலான காட்டு யானைகள் கபினி அணைக்கு தண்ணீர் குடிக்க வருவது வழக்கம். அப்படி வரும் காட்டு யானை கூட்டத்தில் போகேஸ்வரருக்கு தனி சிறப்பும் மதிப்பும் உண்டு. 69 வயதை கடந்த ஆண் யானை போகேஸ்வரருக்கு 2.58 மீட்டர் நீளத்துக்கு தந்தம் கொண்டது. ஆசியாவில் மிகப்பெரிய தந்தம் கொண்ட யானைகளில் போகேஸ்வர் யானையும் ஒன்று. கம்பீரமான தோற்றம் அழகான தந்தம் என போகேஸ்வரரை வர்ணித்துக்கொண்டே போகலாம்.

இந்நிலையில் ஜூன்13 ஆம் தேதி காலை வனத்துறையினர் காட்டுப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, பண்டிப்பூர் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட குண்டாரே பகுதியில், போகேஸ்வர் மண்ணில் சரிந்து கிடப்பதை பார்த்தனர். அருகே சென்று பார்த்த போது இறந்து கிடந்ததை பார்த்தனர். இது குறித்து, உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கால்நடை மருத்துவர்களுடன் வந்து சேர்ந்தனர். சம்பவ இடத்திலேயே போகேஸ்வருக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அதில், யானைக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. இயற்கையாக இறந்தது தெரிய வந்தது.

பின்னர் சுற்றுச்சூழல், வனம் மற்றும் வானிலை மாற்றம் துறை விதிகள் படி போகேஸ்வர் யானையின் தந்தம் அகற்றப்பட்டு ஆய்வுக்கு மைசூருக்கு கொண்டு செல்லப்பட்டது. வனத்துறையின் விதிமுறைகள் படி வனப்பகுதியில் இறந்த யானையின் உடல் அதே பகுதியில் உள்ள கழுகுகளுக்கு உணவுக்காக விடப்பட்டுள்ளது. இந்த யானை குறித்து வனத்துறையும் தனியார் சங்கங்களும் பல ஆவணப் படங்கள் எடுத்துள்ளன. கபினிக்கு வரும் சுற்றுலா பயணியர் புலிகளை பார்க்கவில்லை என்றாலும் கூட, போகேஸ்வர் யானையை பார்த்தால் பரவசமடைவர் என வனத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

# அதிமுக கூட்டத்தில் "ஒற்றைத் தலைமை" குறித்து விவாதிக்கப்பட்டதாக ஜெயக்குமார் ஒப்புதல்



"அதிமுகவில் ஒற்றைத் தலைமை குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த விவாதம் ஓர் ஆரோக்கியமான முறையில் இருந்தது" என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

வரும் ஜூன் 23-ம் தேதியன்று நடைபெறவுள்ள அதிமுக செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் தொடர்பாக தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்களுடன், கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தலைமையில் ஜூன் 14 அன்று சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பின்னர் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: "பொதுக்குழுவுக்கு முன்பாக தற்போது நடைபெற்ற கூட்டத்தில், ஒற்றைத் தலைமை குறித்தும் விவாதிக்கப்பட்டது. அந்த விவாதம் ஒரு ஆரோக்கியமான முறையில் இருந்தது. அதுதொடர்பாக பெரும்பான்மையான தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், அதிமுகவுக்கு ஒற்றைத் தலைமைதான் தேவை என்பதை வலியுறுத்திக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையானவர்களின் கருத்து என்பது, கட்சியைப் பொருத்தவரை, அதிமுகவைப் பொருத்தவரை, அதிமுக ஒரு வலிமையான இயக்கம் என்ற முறையில், ஒற்றைத் தலைமை அவசியம் என்பதை வலியுறுத்தி பேசினார்கள். அந்த ஒற்றைத் தலைமை யார் என்பது குறித்து தற்போது விவாதிக்கப்படவில்லை. இதுதொடர்பாக கட்சி முடிவு செய்யும்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர், இரட்டைத் தலைமை என்ற நிலையில் இருந்து பொதுக்குழுவுக்கு முன்பாக, தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு, பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் தலைமை தொடர்பாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டது. இந்த கூட்டத்தில், பெரும்பான்மையானவர்கள் கட்சிக்கு ஒற்றைத் தலைமை தேவை என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

காலம் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் உள்ளது. அன்றைக்கு இருந்த நிலை வேறு, இன்றைக்கு இருக்கின்ற நிலை வேறு. இன்று ஒட்டுமொத்தமாக, அதிமுக தொண்டர்களும் சரி, கட்சியின் நிர்வாகிகளும் சரி, பொதுவாகவே எதிர்பார்ப்பது கட்சிக்கு ஒற்றைத் தலைமை தேவை என்பதுதான். காலத்தின் கட்டாயத்தின் அடிப்படையில் அதுதொடர்பாக விவாதிக்கப்பட்டது. இன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையானவர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்."

இவ்வாறு அவர் கூறினார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பொதுக்கூட்டத்திற்கான அழைப்பிதழ் - 2022

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வும் 2022 யூலை மாதம் முற்பகுதியில் நிகழ இருக்கின்றது. நிர்வாக சபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்வது, வழமைபோல முற்கூட்டியே இடம் பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பின் வரும் 11 பதவிகளுக்கு யாப்பின் விதிகளுக்கு ஏற்பத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர்**
**பொருளாளர் மற்றும் 6 நிர்வாகசபை உறுப்பினர்.**

ஆயுட்கால உறுப்பினர்கள் வாக்களிக்கவும், நிர்வாகசபை நியமனத்திற்கும் தகுதியானவர்கள். ஏனைய சாதாரண உறுப்பினர்கள் தகுதி பெறுவதற்கு 3 வருட சந்தாப்பணம் செலுத்த வேண்டும். கோவிட் காரணமாகச் சந்தாவைப் புதுப்பிக்காத அங்கத்தவர்கள் ஒரு வருடத்திற்குப் 15 கனடிய டொலர் படி 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் 2022, 2023, 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை 3 வருட சந்தாப் பணமான டொலர் 45.00 செலுத்தி, அல்லது ஆயுட்கால சந்தாவைச் செலுத்தி வாக்களிக்கும் தகுதியையும், நிர்வாகசபை அங்கத்துவ நியமனத்திற்கான தகுதியையும் பெற்றுக் கொள்ளலாம்.

**சந்தாப்பணம் செலுத்துவதற்கான கடைசித் திகதி: 27-6-2022**
**நிர்வாகசபை அங்கத்தவர் தெரிவுக்கான கடைசித் திகதி: 28-6-2022**

பொருளாளர் வெளிநாடு சென்றிருப்பதால், சந்தாப் பணத்தை நேரடியாக செயலாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களிடம் யூன் மாதம் 27 ஆம் திகதிக்கு முன் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்பவர்கள் மட்டுமே அங்கத்தவ நியமனத்திற்கு தகுதியானவர்கள்.

விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி யூன் மாதம் 28 ஆம் திகதி இரவு 11 மணிக்கு முன்பாக மின்னஞ்சல் மூலம் செயலாளருக்கும், தலைவருக்கும் அனுப்பி வைக்கவும். அதன் பின் கிடைக்கும் நியமனத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022 யூலை மாதம் முற்பகுதியில் நிகழ இருக்கும் பொதுக்கூட்டத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**குரு அரவிந்தன்**
தலைவர்
kuruaravinthan@hotmail.com

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
செயலாளர்
lnagamany@yahoo.com

**கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்**
Tamil Writers' Association of Canada

---------------------------------------------------------------

NOMINATION TO CTWA BOARD OF DIRECTORS FOR AGM

Post applied for: (Committee Member):

……………………………………………………………………

Full Name of Nominee: Date:

Name of Proposer: Date:

Seconded by: Date:

Signature of Secretary: Date:

(For CTWA Members who paid their subscription only)
Please Email to Secretary and President on or before June 27th 2022.
kuruaravinthan@hotmail.com lnagamany@yahoo.com

# ஒட்டாவாவில் இடம்பெற்ற லிபரல் ஒன்று கூடலில் கன்சர்வேடிவ் தலைமை வேட்பாளரான பியர் பொய்லிவ்ரேயை கடுமையாக விமர்சித்த துணைப் பிரதமர் கிறிஸ்டினா



கடந்த திங்கட்கிழமையன்று ஒட்டாவாவில் இடம்பெற்ற லிபரல் கட்சியின் ஒன்றுகூடலில் பிரதான உரையாற்றிய கனடாவின் தற்போதைய நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், மத்திய கன்சர்வேடிவ் கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரான பியர் பொய்லிவ்ரேயை கடுமையாகத் தாக்கிப் பேசினார். நாட்டின் பொருளாதாரம் தொடர்பான எந்தவித அறிவும் இல்லாத அவர் தற்போதைய கனடாவின் மத்திய வங்கியின் ஆளுனரை தான் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பெற்றால் பதவியிலிருந்து அகற்றுவேன்" என்று சில நாட்களுக்கு முன்னர் பேசியது தொடர்பாகவே துணைப்பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், இவ்வாறு அவரை கடுமையாக கண்டித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற இந்த லிபரல் ஒன்றுகூடலுக்கு பிரதான உரையாற்றவிருந்த பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் மீண்டும் "கோவிட்" நோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ளதால் மேற்படி ஒன்று கூடலில் கனடாவின் துணைப் பிரதமர் அவருக்குப் பதிலாக உரையாற்றினார்.

மேற்படி ஒன்று கூடலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் பாராளுமன்ற







உறுப்பினர்கள் மற்றும் தற்போதைய அமைச்சர்கள் என பலரும் கலந்து கொண்டனர். சில தமிழ் பேசும் அன்பர்களும் அங்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கு உரையாற்றிய துணைப் பிரதமர் கிறிஸ்ரியா பிரிலாண்ட் அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில், கன்சர்வேடிவ் கட்சியின் முன்னணி வேட்பாளரான பியர் பொய்லிவ்ரே - மத்திய வங்கி மீதான தாக்குதல்களுக்காகவும், அவர் பிரதமரானால் அதன் ஆளுநரான டிப் மாக்லெம் அவர்களை பதவி நீக்கம் செய்வதாகவும் கூறியுள்ளதை அவர் கடுமையாக விமர்சித்தார்.

"பணவீக்கத்தை இலக்கிற்குள் கொண்டு வருவதற்கான பணியை மத்திய வங்கி தொடங்கியுள்ளது, மேலும் பணவீக்கம் நிலைபெறாமல் இருக்க தேவையான கருவிகள் மற்றும் நிபுணத்துவம் எமது மத்திய வங்கியிடம் உள்ளது" என்று அவர் கூறினார். மேலும் தனநபர் வருமான ஆதரவை வழங்குவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பிற நடவடிக்கைகளை அவர் அடிக்கோடிட்டுக் காட்டவும் தவறவில்லை.

மேலும் திங்கட்கிழமையன்று நடைபெற்ற ஒன்றுகூடலில் உரையாற்றியபோது, கொன்சர்வேர்ட்டிவ் தலைமை வேட்பாளரை நேரடியாக பெயரிடாமல், கிறிஸ்ரியா பிரிலாண்ட் அவர்கள் வங்கி மற்றும் அதன் கவர்னர் மீதான தனது விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தனது கீச்சகப்பதிவில் கன்சர்வேடிவ் கட்சியின் முன்னணி வேட்பாளரான பியர் பொய்லிவ்ரே பயன்படுத்திய அதே வார்த்தைகளைப் பயன்படுத்தி, "நிதியியல் துறையில் கல்வியறிவற்றவர்" அவர் என்று துணிச்சலாகத் தெரிவித்தார்.

"உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் ஏற்ற இறக்கத்தின் தாக்கம் நிறைந்த இந்த நேரத்தில், கனடாவின் அடிப்படை நிறுவனங்களை குறைத்து மதிப்பிடுவது மற்றும் விமர்சனங்களுக்கு உட்படுத்துவது - கனடாவின் வங்கி உட்பட துறைகளில் மிகவும் பொறுப்பற்ற வகையில் அவர் விமர்சனம் செய்து வருகின்றார் என்றும் கிறிஸ்ரியா பிரலாண்ட் மேலும் தெரிவித்தார்.

இங்கே காணப்படும் படங்களில் அங்கு கலந்து கொண்ட கனடா உதயன் குழுமத்தினர் மற்றும் "ரூபம்" தொலைகாட்சி குழுவினரையையும் அவர்களோடு கனடாவின் அமைச்சர்களான **Honourable Bill Blair** மற்றும் **Honourable Helena Jaczek** மற்றும் முன்னாள் பாராளுமன்ற சபாநாயகருமான ீநவநச ஆடைடமைநெ அவர்கள் ஆகியோரோடு எடுத்துக்கொண்ட படங்களையும் காணலாம்.

படங்கள்: கெவின்



# நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு தடை தவிசாளர் நிரோஷை மீளவும் மன்றில் முன்னிலையாக பணிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு தடைகளை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டே வழக்கு மீள முன்னெடுக்கப்பட முடியும் என கடந்த வருட ஆரம்பத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்த நிலையில் வழக்கு மீளவும் எதிர்வரும் புதன்கிழமை (15.06.2022) மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்பிரலில் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமத்திற்குத் தடை ஏற்படுத்தியதாக மேலும் சிலரை இணைக்கவுள்ளதாகவும் மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இக் கிணற்றில் பிரதேசத்தை பிரதேச சபை தொடர்ச்சியாக அரச பெறுகைகேள்விக்கோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கி வந்துள்ளது. அவ் இடத்திலேயே தொல்லியல் திணைக்களம் செயற்பட்டுள்ளனர். குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் இவ் வழக்கை சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தினைத் பொலிஸார் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

நிலாவரையில் பிரதேச சபை பல முதலீடுகளைச் செய்துள்ளது. தொல்லியல் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரே மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிபெற்றேதொல்லியல் திணைக்களம் செயற்படும் என உத்தரவாதமளித்துள்ளார். ஆனால் இங்குபிரதேச சபை ஒன்றின் தவிசாளர் எனஅக் கருத்தினை வலியுறுத்துகையில் அரசகருமத்திற்கு தடை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது என கடந்த வருடம் ஏப்பிரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையில் முன்வைத்தனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபையின் தலைவர் என்றவகையில் தவிசாளார் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரசகடமைக்கு தடைஏற்படுத்தியதாகக் கருத முடியாது. நிர்வாக ரீதியாக இரு அரசநிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையினைகுற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது எனவே இவ்வழக்கினைதள்ளுபடி செய்யவேண்டும் என மன்றி முன்வைத்தனர்.

தனியாராக இருந்தாலேன்ன அரசதாபனமாக இருந்தாலேன்ன பிரதேசசபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தினையும் செய்ய முடியும் என்பதும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

அவ் வழக்கினை கடந்த வருடம் விசாரித்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, பொலிசார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து இவ் வழக்கினை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுவழக்கினைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார். பிரதேசசபைத் தவிசாளர் இவ்வழக்கில் மேலதிக விசாரணைகள் தேவைப்படின் தவிசாளர் ஒத்துழைக்கவேண்டும் எனவும் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் மீளவும் இவ் வழக்கிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேக நபராக அடையாளப்படுத்தி நாளை புதன்கிழமை (15.06.2022) மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து கடந்த வருடம் நிலாவரையில் சந்தேகத்திற்கிடமான முறையில் அத்திவாரம் போன்று கிடங்குகளை வெட்டிய நிலையில் அங்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்களை அடுத்து பொலிஸ் நிலையத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் இணக்கத்திணை ஏற்படுத்துதல் என அழைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகளினால் தவிசாளர் நிலாவரையில் தலையிடக்கூடாது என வலியுறுத்தப்பட்ட நிலையில் தவிசாளர் அதனை ஏற்க மறுத்திருந்தார். இந் நிலையிலேயே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசு ஊழியர்களுக்கு இனி வாரந்தோறும் வெள்ளிக்கிழமை விசேஷ விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது



இலங்கை நாட்டில் அரசு துறைகளில் வேலை பார்க்கும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் அடுத்தவாரம் முதல் விசேஷ விடுமுறை ஆனது வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்கள் தற்போது தீயாய் பரவி வருகிறது.

கொரோனா வைரஸ் பரவல் உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் மிகவும் அதிகஅளவில் அச்சுறுத்தியது. பொது மக்களை உடல்நல ரீதியில் மட்டுமின்றி பொருளாதார ரீதியிலும் மோசமடைய வைத்தது என்று தான் கூற வேண்டும். அந்த வகையில், தற்போது கடுமையான நிதி நெருக்கடியில் தத்தளித்து வருகிறது, இலங்கை. இலங்கை அரசு சுற்றுலா தலங்கள் மூலமாக தான் அதிக அளவில் பணத்தினை ஈடு செய்து வந்தது. ஆனால், கொரோனா பாதிப்பின் காரணமாக மக்கள் யாருமே வெளியிடங்களுக்கு செல்ல முடியாத சூழல் உண்டானது. அதன் எதிரொலியாக இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாவசிய பொருட்களின் விலை சிகரத்தை தொட்டது என்று தான் கூற வேண்டும். இதனால் பொங்கிய பொது மக்கள் அரசிற்கு எதிராக பல வன்முறை போராட்டங்களில் ஈடுபட்டனர். நாட்டினை பார்த்து கொள்ள வேண்டிய ராஜா பக்ஷே நாட்டினை விட்டே தப்பித்து விட்டார். இந்நிலையில், நிருபர்களிடம் பேசிய அந்த நாட்டின் அமைச்சர் தினேஷ் குணவர்தன அரசு ஊழியர்களின் விசேஷ விடுமுறை குறித்து பேசியுள்ளார்.

அதன்படி, நாட்டில் அதிகப்படியான எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டு வருகிறதாகவும், இதனால் அரசு துறைகளில் பணிபுரியும் பணியாளர்கள் வேலை பார்க்க வந்து போவது கூடுதல் செலவு ஆகும். அதனால், இதனை தவிர்க்கவும், எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வாக வெள்ளிக்கிழமை தோறும் விசேஷ விடுமுறை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த வாரம் முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# உ.பி-யில் "புல்டோசர்" நடவடிக்கையால் மாணவர் அமைப்பின் தலைவி அப்ரீன் பாத்திமா வீடு இடிப்பு





இஸ்லாமியர்களின் இறை தூதரான முகமது நபிகள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்ததால் பாஜகவிலிருந்து நீக்கப்பட்ட அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் நூபுர் சர்மாவை கைது செய்ய வலியுறுத்தி கடந்த வாரம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. இதில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் பிரயாக்ராஜ், சஹாரன்பூர், பிஜ்னோர், மொராதாபாத், ராம்பூர், லக்னோ ஆகிய 6 மாவட்டங்களில் வன்முறை வெடித்தது தொடர்பாக 130-க்கும் மேற்பட்டவர்களை போலீசார் கைது செய்தனர்.

குறிப்பாக, பிரயாக்ராஜ் பகுதியில் ஏற்பட்ட வன்முறையை முன்னின்று நடத்தியதாக "வெல்.:.பேர் பார்ட்டி ஆ.:.ப் இந்தியா" அமைப்பின் தலைவர்களில் ஒருவரான ஜாவீத் முகமது கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக, ஜாவீத் முகமது வீட்டில் சோதனை மேற்கொண்ட போலீசார், வீட்டில் சட்டத்திற்கு புறம்பான வகையில் ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்ததாகவும், ஆட்சேபனைக்குரிய கருத்துகள் அடங்கிய போஸ்டர்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்தனர்.

அத்துடன், சனிக்கிழமை இரவு ஜாவீத் முகமதுவின் மகளும், சிஏஏ எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய முகமாக அறியப்பட்டவருமான அ.:.ப்ரீன் பாத்திமாவுக்கு, "விதிமுறைகள் மீறி உங்களது வீடு கட்டப்பட்டுள்ளது. அதனால் ஞாயிற்றுக்கிழமை உங்களது வீடு இடிக்கப்படும்" என்று உத்தரப் பிரதேச அரசு நோட்டீஸும் அனுப்பியது. இதனைத் தொடர்ந்து அ.:.ப்ரீன் பாத்திமாவின் வீடு ஞாயிற்றுக்கிழமை புல்டோசரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

பழிவாங்கும் நடவடிக்கையாகவே அ.:.ப்ரீன் பாத்திமாவின் வீட்டை உத்தரப் பிரதேச அரசு இடித்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அ.:.ப்ரீன் பாத்திமாவுக்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் பலரும் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், அ.:.ப்ரீன் பாத்திமாதான் கலவரங்கள் ஏற்பட அவருடைய தந்தைக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறார் என்று உத்தரப் பிரதேச போலீசார் தெரிவித்துள்ளனர். ஆனால், அதற்கான எந்த ஆதாரத்தையும் போலீசார் வெளியிடவில்லை. வலுவான ஆதாரங்கள் கிடைப்பின் அ.:.ப்ரீன் பாத்திமா மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜேஎன்யூ மாணவரான இவர், அங்கு மாணவ அமைப்பின் கவுன்சிலராக இருந்துள்ளார். மேலும், அலிகார் பல்கலைக்கழகத்தில் மாணவப் பிரிவு தலைவராக இருந்திருக்கிறார். தற்போது "வெல்பேர் பார்டி ஆப் இந்தியா"வின் மாணவர் பிரிவு தேசியச் செயலாளராக உள்ளார்.

கடந்த சில வருடங்களாக இந்தியாவில் இஸ்லாமியர்களின் உரிமைகள் மறுக்கப்படும்போதெல்லாம் அப்ரீன் பாத்திமா தனது எதிர்ப்புக் குரலை பதிவு செய்து வருகிறார். சிஏஏ-வில் தொடங்கி ஹிஜாப் வரை அவரது எதிர்ப்புக் குரல் தொடர்கிறது.

அ.:.ப்ரீன் பாத்திமாவும், அவருடைய சகோதரியான சுமையாவும் இணைந்து அலகாபாத் இஸ்லாமிய பெண்களுக்காக பெண்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர். இந்த அமைப்பில் 70-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

கைது குறித்து அப்ரீன் பாத்திமா கூறும்போது, "அலகாபாத் காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட எனது தந்தை ஜாவீத் முகமது, தாய் பர்வீன் பாத்திமா மற்றும் சகோதரி சுமையா பாத்திமா ஆகியோரின் பாதுகாப்பு குறித்து கவலையுடன் இருக்கிறேன். எந்த அறிவிப்பும் இல்லாமல் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கடைசிவரை அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கோட்வாலி காவல் நிலையம் சென்றபோது, எனது குடும்பத்தினர் அங்கு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும் காவல்துறை அதிகாரிகள் மறுத்துவிட்டனர்" என்றார்.

சிஏஏ எதிர்ப்பு, ஹிஜாப் சர்ச்சை என தொடர்ந்து தனது எதிர்ப்பை பதிவு செய்து வந்த அப்ரீன் பாத்திமா தற்போது உத்தரப் பிரதேசத்தில் யோகி அரசின் புல்டோசர் நடவடிக்கைகளின் காரணமாக ஓர் எதிர்ப்பு முகமாக மாறியிருக்கிறார் என்று சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக சரத்பவாரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி



ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக, மம்தா பானர்ஜி கூட்டும் கூட்டத்தில் காங்கிரஸ் பங்கேற்க முடிவு செய்துள்ளது. பொது வேட்பாளராக சரத்பவாரை நிறுத்துவது பற்றி கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் அடுத்த மாதம் (ஜூலை 24-ந்தேதி) முடிவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க அடுத்த மாதம் 18-ந்தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

போட்டி ஏற்பட்டு ஓட்டுப்பதிவு நடக்கும் பட்சத்தில் ஜூலை 21-ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஜூன் 15ல் (புதன்கிழமை) தொடங்குகிறது. இன்னும் சில தினங்களில் பா.ஜனதா கட்சி வேட்பாளரை அறிவிக்க திட்டமிட்டுள்ளது. இதில் அனைத்து கட்சிகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படுத்த பா.ஜனதா தலைவர் நட்டா, மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் ஆகிய இருவரையும் பிரதமர் மோடி பணியில் அமர்த்தி உள்ளார். அவர்கள் இருவரும் பா.ஜனதாவின் தோழமை கட்சித் தலைவர்களிடம் பேசி வருகிறார்கள்.

அதுபோல சில எதிர்க்கட்சித் தலைவர்களிடமும் அவர்கள் பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளனர். என்றாலும் 2024-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை களம் இறக்க காங்கிரசும், பிற எதிர்க்கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

மம்தா கூட்டும் கூட்டம்

இதுகுறித்து டெல்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் உள்ளிட்டோர் ஒன்றுகூடி ஆலோசனை நடத்த திட்டமிடப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே, திரிணாமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்காள முதல் மந்திரியுமான மம்தா பானர்ஜி, தி.மு.க. உள்ளிட்ட மாநில கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளைச் சேர்ந்த 22 தலைவர்களுக்கு ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்தார். அவர் தனது கடிதத்தில் ஜூன் 15-ம் தேதி (இன்று) ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி இன்று நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் தங்கள் கட்சியின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் மல்லிகார்ஜுன கார்கே, ஜெய்ராம் ரமேஷ், ரந்தீப் சிங் சுர்ஜிவாலா உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

சரத்பவார் பொதுவேட்பாளர்?

இந்நிலையில், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரை எதிர்க்கட்சிகன் பொது வேட்பாளராக களம் இறக்க முயற்சிகள் நடந்து வருகின்றன.

இதுதொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான மல்லிகார்ஜுன கார்கே கடந்த வாரம் சரத் பவாரை சந்தித்துப் பேசி-னார். பிறகு மகாரா'டிர முதல்-மந்திரி உத்தவ் தாக்கரேயையும் சந்தித்து ஆலோசனை நடத்தினார். சரத்பவார் அனைத்து கட்சிகளுடன் நல்ல அணுகுமுறையில் இருப்பதால் அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தலாம் என்று சோனியா விரும்புகிறார். எனவே ஜனாதிபதி தேர்தல் தேதி அட்டவணை வெளியிடப்பட்டதும் அவர் முதன் முதலில் சரத் பவாருடன் போனில் பேசினார்.

அதுபோல இடதுசாரி கட்சி தலைவர்களும் சரத்பவாருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். சரத்பவாரை பொது வேட்பாளராக நிறுத்தலாம் என்று முடிவு செய்து காங்கிரஸ்ரூகம்யூனிஸ்டு கட்சி தலைவர்கள் மற்ற எதிர்க்கட்சிகளிடம் ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

குறிப்பாக மேற்கு வங்காள முதல் - மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியிடம் காங்கிரஸ், கம்யூனிஸ்டு தலைவர்கள் தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

மம்தாவின் சாய்ஸ்

ஆனால், மம்தா பானர்ஜி தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்.

இதற்காகவே அவர் டெல்லியில் 22 எதிர்க்கட்சி தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த கூட்டத்தில் அவர் தனது விருப்பத்தை வெளிப்படுத்துவார் என்று தெரிகிறது. குறிப்பாக சமீபத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த முன்னாள் பா. ஜனதா தலைவரும், முன்னாள் மத்திய நிதி மந்திரியுமான யஷ்வந்த்சின்காவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடச் செய்ய வேண்டும் என்று மம்தா பானர்ஜி விரும்புகிறார். ஆனால் அவரது திட்டத்துக்கு எதிர்க்கட்சிகளின் ஒருமித்த ஆதரவு கிடைக்கவில்லை.

பா.ஜனதாவில் இருந்து வந்த ஒரு-வரை பொது வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்று காங்கிரஸ், இடதுசாரிகள் திட்டவட்டமாக கூறிவிட்டன.

சரத்பவாரின் தயக்கம்

இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக களம் இறங்க தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் தயக்கத்தை வெளியிட்டுள்ளார். அவர் தனது கட்சி மூத்த தலைவர்களுடன் பேசுகையில், "பொது வேட்பாளராக போட்டியிட எனக்கு விருப்பமில்லை" என்று கூறியுள்ளார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பட்டியலில் நான் இல்லை என்றும் அவர் தெளிவுபட கூறி உள்ளார்.

81 வயதாகும் சரத் பவார் தனக்குப் பதில் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்தச்செயலாம் என்று கூறி வருகிறார். குறிப்பாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான குலாம்நபி ஆசாத்தை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று சரத்பவார் விரும்புகிறார். தனது விருப்பத்தை அவர் காங்கிரஸ் தலைவர்களிடம் தெரிவித்து உள்ளார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் டெல்லியில் இன்று கூடி ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பாக ஆலோசனை நடத்த உள்ளன.

இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பற்றி ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டு விடும் என்று தெரிகிறது. காங்கிரஸ், இடதுசாரிகள், சிவசேனா உள்பட பல கட்சிகள் சரத்பவாரையே ஆதரிக்கின்றன. எனவே அவர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக தேர்வு செய்யப்படுவாரா என்பது தெரிந்து விடும்.

சரத் பவாருக்கு பெரும்பாலான கட்சிகள் ஆதரவு அளிக்கும் பட்சத்தில் மம்தா பானர்ஜி, சந்திர சேகர ராவ், நவீன் பட்நாயக் போன்ற தலைவர்களும் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சரத் பவாரை முன் நிறுத்தினால் மட்டுமே அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஓர் அணியில் ஒன்று திரட்ட முடியும் என்று சோனியா கருதுகிறார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் மறுத்து வரும் நிலையில் அவரை மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி இன்று (ஜூன் 14) மாலை சந்தித்துப் பேசினார். டெல்லியில் நடந்த இந்த சந்திப்பின்போது குடியரசுத் தலைவர் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட வேண்டும் என சரத் பவாரிடம் மம்தா பானர்ஜி கேட்டுக் கொண்டார்.



# இலங்கை ஒட்டாண்டியாகப் போனாலும் பருவாயில்லை அதனை சிங்கள - புவுத்த தீவாக மாற்றுவதில் பேரினவாதிகள் குறியாக இருக்கிறார்கள்

- கனடா நக்கீரன்



உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள். தமிழ்மக்கள் மத்தளத்தின் நிலையில் உள்ளார்கள்.

இலங்கை வரலாறு காணாத பொருளாதார, அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. நாடு உத்தியோக பூர்வமாக ஒட்டாண்டி நாடாக அறிவிக்கப்பட்டு விட்டது. மக்கள், மண்ணெண்ணை, வாகன எரிபொருட்களுக்கு மணித்தியாலக் கணக்கில் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள். விவசாயிகள், மீனவர்கள் தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும் டீசல், மண்ணெண்ணை இல்லாததால் தொழில் செய்ய முடியாமல் அல்லாடுகிறார்கள். மக்கள் மூன்று நேர உணவுக்குப் பதில் இரண்டு நேரம் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தியாவும் சீனாவும்தான் இலங்கை மூழ்கிவிடாது நிதி மற்றும் அரிசி, பால்மா போன்ற பொருள் உதவிகளை வழங்கிவருகின்றன. இந்த நாடுகளது உதவியில்லாவிட்டால் இலங்கை மக்கள் முழுப் பட்டினியோடு வாழ வேண்டி இருந்திருக்கும்.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் அ.டொலர் 51 பில்லியனாகும். கடந்த ஏப்ரில் மாதத்தில் இந்த ஆண்டில் திருப்பிக் கொடுக்க வேண்டிய அ.டொலர் 7 பில்லியன் கடனை திருப்பி அடைக்க முடியாது என இலங்கை அறிவித்தது.

இன்றைய நிலையில் ஒரு 10 அல்லது 15 பில்லியன் டொலர் கடன் மேலதிகமாகக் கிடைத்தாலே இலங்கை மீண்டு விடும். இதுவரை இந்தியா கொடுத்த 3 - 4 அ.டொலர் 4 பில்லியனை இலங்கைக்கு கொடுத்துள்ளது. வேறு நாடுகள் இந்தளவுக்கு உதவி செய்யவில்லை. இது இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கை தோல்வி அடைந்ததைக் காட்டுகிறது.

பணக்கார நாடான அமெரிக்கா அ.டொலர் 6 மில்லியனை தருவதாகச் சொல்லியுள்ளது. அரசியல், மனிதவுரிமை போன்றவற்றில் இலங்கை முன்னேற்றத்தைக் காட்டினால் மட்டுமே நிதியுதவி வழங்க முடியும் என அமெரிக்காவின் இராசாங்க அமைச்சர் அண்டனி ஜே.பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

இப்படி இலங்கை உத்தியோக பூர்வமாக ஒட்டாண்டியாகி விட்ட நிலையில் சிங்கள - பவுத்த பேரினவாதிகள் மட்டும் பவுத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் வட கிழக்கில் நிறுவும் முயற்சியில் மட்டும் தொடர்ந்து கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

குருந்தூர்மலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்து வைக்கும் நிகழ்ச்சி கடந்த யூன் 12 இல் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் இடம்பெற இருந்தது. அதனையொட்டி தென்னிலங்கையில் இருந்து நூற்றுக் கணக்கான பவுத்த பிக்குகள், பவுத்தலோக நற்பணி மன்றத்தினர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் பேருந்துகளில் வந்து இறங்கினார்கள். இந்த நிகழ்ச்சியை சிறிலங்கா இராணுவம் ஒழுங்குபடுத்தியிருந்தது.

ஏற்கனவே முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, இராணுவத்தினரின் பூரண ஒத்துழைப்போடு "கபோக்" கல்லினாலான புத்தர் சிலை ஒன்றைப் பிரதிஷ்டை செய்வதற்கும், அங்குபுதிதாக நிர்மாணிக்கப்பட்ட பவுத்த விகாரையின் கலசத்திற்குரிய சிறப்பு பூசை வழிபாடுளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் இடம் பெற்றிருந்தன.


இந்த முயற்சி தமிழ் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. குருந்தூர்மலை தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. அவற்றுக்கு அமைவாக, குருந்தூர்மலையில் எவ்வித மதக் கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படக் கூடாதென முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டார்கள்.

அங்கு தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க வருகைதந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் கலந்துரையாடினார். குருந்தூர்மலையையும் பார்வையிட்டார். அதன்போது கருத்துத் தெரிவித்த அனுரமானதுங்க - குருந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல் ஆய்வின் மூலம் கிடைத்த எச்சங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காகப் புனர்நிர்மாணம் செய்யும் வேலைளையே தாம் முன்னெடுப்பதாகவும், அங்கு புதிதாக கட்டுமானங்கள், கட்டடங்கள் எதனையும் தாம் கட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமது திணைக்களத்துக்கும், அங்குள்ள பவுத்த பவுத்த தேரர்களுக்கும், இராணுவத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை எனவும் என்னப்பன் குதிருக்குள் இல்லை என்று சொன்னவன் பாணியில் தெரிவித்தார். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் தெரிவித்த கருத்திற்கு மாறாக முன்பிருந்ததைவிட குருந்தூமலையில் பாரிய அளவில் பவுத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள குருந்தூர் மலையில் பெருமளவான பவுத்த தேரர்களும் முப்படையினரும் வழிபாடுகளுக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

குருந்தூர்மலையைச் சூழ உள்ள வயல்நிலங்கள் தொல்லியல் திணைக்களத்துக்கு உரியது எனக் கூறி பவுத்தபிக்கு ஒருவர் தமிழ் மக்களை வயல் செய்ய விடாது தடுப்பது தொடர்பிலும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவ்வாறு பவுத்த பிக்குகள் தடுப்பதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என அவர் பதிலளித்திருந்தார்.



உண்மையில் குருந்தூர்மலையில் விகாரை கட்டும் பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது. கடந்த மே 10, 2021 இல் குருந்தாவ அசோக புராதன பவுத்த விகாரையின் சிதைவுகள் இருப்பதாகத் தெரிவித்து அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இரவிரவாக பிரித் ஓதப்பட்டு பவுத்த விகாரை ஒன்றைப் புதிதாக அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. குருந்தூர்மலை அகழ்வாராய்ச்சிகள் தொடர்பில் வெளிப்படை தன்மை பேணப்படாது உள்ளூர் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கடந்த நான்கு மாதங்களாக தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்போது போலவே அப்போதும் குருந்தூர்மலையில் பவுத்த விகாரை கட்டுவதற்கு அத்திவாரம் போடப்பட்ட போது முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமைப் படை அதிகாரி மற்றும் நூற்றுக்கணக்கான பவுத்த தேரர்கள், தொல்லியல் திணைக்களத்தினர் கலந்து கொண்டனர். அந்த இடத்தில் தோரணங்கள், அலங்காரங்கள், பவுத்த கொடிகள, பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன.

குருந்தூர்மலையில் கோவிட்-19 சுகாதார விதிமுறைகளிற்கு மாறாக தேரர்கள், இராணுவத்தினர் கூடி, மத நடவடிக்கைகள் ஈடுபட்டதற்கு எதிராக கரைத்துறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் முல்லைத்தீவு காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். எனினும், காவல்துறை அந்த முறைப்பாட்டை முழுமையாக பதிவு செய்யாமல், பாதியிலேயே நிறுத்திக் கொண்டு விட்டதாக கரைத்துறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் பல இடங்கள் தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கின்ற இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

குருந்தூர்மலையை மட்டுமல்ல நெடுங்கேணி, ஒலுமடு பாலமோட்டை கிராமத்தில் இருந்து கிட்டத்தட்ட 3 கிமீ தொலைவில் உள்ள வெடுக்குநாறி மலையையும் தொல்பொருள் திணைக்களம் சொந்தம் கொண்டாடுகிறது. சுமார் 3000 ஆம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மலையானது பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது. பண்டய காலத்தில் நாகர்கள் இங்கு வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. முந்நூறு மீற்றர் உயரமான வெடுக்குநாறி மலை அடிவாரத்தின் கீழ் தமிழ்ப் பிராமி கல்வெட்டுக்கள் மற்றும் வட்டெழுத்துக்கள் போன்றவற்றைக் காணமுடியும். மலையின் உச்சியில் ஆதி லிங்கேஸ்வரர் எனும் சிவனுடைய இலிங்கம் அமைந்துள்ளது.



மே 18, 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் வட கிழக்கு மாகாணங்களை சிங்கள மயப்படுத்தல் மட்டுமின்றி பவுத்த மயப்படுத்தும் வேலையும் மும்மரமாக இடம் பெற்று வருகிறது. இந்தப் பணியை மார்ச் 2020 இல் சனாதிபதி கோட்டாபய அவர்களால் நியமிக்கப்பட்ட செயலணி செய்து வருகிறது. இந்தச் செயலணியின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. குருந்தூர்மலை பற்றி இந்தச் சனாதிபதி செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேத்தானந்த தேரர் என்ன சொல்கிறார்?

"குருந்தகம என்பதே தற்போது குருந்தூர் மலையாகியுள்ளது. இதனை எம்மால் எண்பிக்க முடியும் என்கிறார். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படுகிற தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 99 விழுக்காடு பவுத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவை ஆகும்.

"வடக்கு - கிழக்கில் காணப்படும் ஆயிரக்காணக்கான தொல்பொருள் இடங்கள் தொடர்பில் நான் பல சந்தர்ப்பங்களில் ஆராய்ந்திருக்கிறேன். அவற்றில் 99 விழுக்காடு பவுத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவை ஆகும். இவ்வாறிருக்க குருந்தூர்மலை விவகாரத்தில் வடக்குக் கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் தவறான நிலைப்பாடுகளை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ளனர்.

"குருந்தகம" என்ற இடமே இப்போது குருந்தூர்மலை ஆகியுள்ளது. நான் இந்த இடத்துக்கு மூன்று தடவைகள் சென்று சென்றிருக்கிறேன்.

1905 ஆம் ஆண்டு ஒரு ஆங்கிலேயர் ஒருவரால் செய்த ஆராய்வின்போதும் இது பவுத்த மரபுரிமைக்கு உரியது என எண்பிக்கப்பட்டது.

அதற்கமைய இந்த இடத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. அத்தோடு பொலநறுவை இராசதானி காலத்தில் பவுத்த பவுத்த மன்னர்களால் இந்த இடம் புனர் நிருமாணம் செய்யப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே குருந்தர்மலை என்ற குருந்துகம பவுத்த விகாரை என உறுதியாகக் கூறிக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் காணப்படுகின்ற மலைகள் பவுத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். அவற்றில் பல விகாரைகள் இடிக்கப்பட்டுக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன."

பண்டைய தமிழர்கள் பவுத்த சமயத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். பவுத்தம் தமிழ்நாட்டில் 2 ஆம் நூற்றாண்டில் இருந்து 9 ஆம் நூற்றாண்டுவரை செல்வாக்கோடு இருந்திருக்கிறது. அய்ம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை மற்றும் குண்டலகேசி ஆகிய இரண்டும் பவுத்த சமயத்தை சார்ந்தவை. 11ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வீரசோழியம் பவுத்தம் சார்ந்த தமிழ் இலக்கண நூல் ஆகும்.

பக்தி இயக்க காலத்தில் தமிழ் பவுத்தர்கள் அடக்குமுறைக்கு ஆளானார்கள். தமிழ்நாட்டில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டனர். அவர்களில் பலர் இலங்கைத் தீவின் வட கிழக்குப் பகுதிகளில் குடியேறினார்கள். அப்படிக் குடியேறியவர்கள் தங்கள் வழிபாட்டுக்கு விகாரைகளைக் கட்டினார்கள். திரியாவில் காணப்படும் பவுத்த விகாரை இரண்டு தமிழ் வணிகர்களால் கிபி 8 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

இன்று வட கிழக்கில் காணப்படும் பவுத்த சமய எச்சங்கள் பவுத்த சமயத்தவர்களுக்கு உரியது. இதில் பவுத்த நாகர்களும் அடங்குவர்.

இலங்கைத் தீவு முழுதையும் சிங்கள - பவுத்த மயப்படுத்துவதே சிங்கள - பவுத்த பேரினவாதிகளின் குறிக்கோளாக இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையை இழந்து விட்டார்கள். திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாவது இடத்துக்குத் (32.01 விழுக்காடு) தள்ளப்பட்டு விட்டார்கள். அம்பாறை மாவட்டத்தில் மூன்றாவது (23.23 விழுக்காடு) இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். மட்டக்களப்பு மட்டும் (72.8 விழுக்காடு) எஞ்சியிருக்கிறது.

இலங்கைத் தீவு ஒண்டாண்டியாகப் போனாலும் பருவாயில்லை அதனை ஒரு சிங்கள - பவுத்த தீவாக மாற்ற வேண்டும் என்பதில் சிங்கள - பேரினவாதிகள் குறியாக இருக்கிறார்கள்.

# அமெரிக்காவின் சீற்றத்திற்கு ஆளான ராஜபக்சக்கள்

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**




இலங்கையில் எந்தளவிற்கு மக்கள் அரசியல்வாதிகளால் பிளவுபடுத்தப்பட்டுள்ளார்களோ அதே போன்றுதான் ஊடகங்களும் பிளவுபட்டுள்ளன அல்லது பட்டுள்ளனர். ஊடகங்கள் பிளவுபட்டு நிற்பதால் உண்மையான செய்திகளும் நியாயமான விமர்சனங்களும் பன்னாட்டுக் கருத்துக்களும், அரசின் நிலைப்பாடும் மக்களுக்குச் சென்றடைவதில்லை. இது மும்மொழி ஊடகங்களுக்கும் பொருந்தும்.

அவ்வகையில் கடந்த வாரம் - குறிப்பாகச் சொல்ல வேண்டுமாயின் கடந்த வெள்ளிக்கிழமை (10 ஜூன்) மாலை அமெரிக்க அரசின் மிகவும் முக்கியமானதொரு அறிக்கை வெளியானது. அது அடுத்த நாள் சனிக்கிழமை இலங்கையில் அவதானிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அது கவனிக்கப்பட்டதா அல்லது கண்டும் காணாமல் இருந்ததா என்பது அந்த புத்த பகவானுக்கே வெளிச்சம்.

அமெரிக்க செனட்டின் வெளியுறவு குழுவின் தலைவர் ராபர்ட் மெனெண்டிஸ் வெளியிட்டிருந்த அந்த அறிக்கையை மேலோட்டமாகப் பார்க்கும் போது, அதற்கும் இலங்கைக்கும் பெரியளவில் தொடர்பில்லை, அது குவாட் அமைப்பு என்று அறியப்படும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர்களுக்கு எழுதப்பட்ட கடிதமாகவேத் தோன்றும். அண்மையில் இந்த நான்கு நாடுகள் பங்குபெற்ற ஒரு மாநாடு தொடர்பில் அவர்களுக்கு ராபர்ட் மெனெண்டிஸ் எழுதியிருந்தார். அதில் இந்த நான்கு நாடுகளும் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அவர்கள் மேலும் கூடுதலாக ஈடுபட வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால் கடிதத்தில் அது முக்கியமான விஷயமில்லை.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இணையப் பாதுகாப்பு, வான்வெளி பாதுகாப்பு, மிகவும் நுட்பமான மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில், மேலும் கூடுதல் ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் தடுப்பூசி தயாரிப்பு மற்றும் பரிமாற்றம், காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பது ஆகியவற்றில் இணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அதிலும் குறிப்பாக இந்திய - பசிபிக் பிராந்தியத்தில் இந்த நான்கு நாடுகளும் புதிதாக ஏற்படுத்தியுள்ள கடல்சார் விழிப்புணர்வு மற்றும் கூட்டுறவு குறித்தும் பேசிய அவர் மிகவும் முக்கியமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், அண்டைநாடுகளுக்கு மேலும் உதவி செய்ய வேண்டும், அதை இலங்கையிலிருந்து தொடங்க வேண்டும் என்று கூறியிருந்தார்.





ஆனால் ஏன் இலங்கை? அதற்கான அடிப்படை காரணம் அவர்களுடைய பொது எதிரி என்று அறியப்படும் சீனா மற்றும் இலங்கையுடனான அதன் நெருக்கம் என்பது அறிந்தவொன்றே.

கடந்த 2004 ஆம் ஆண்டில் ஆசிய சுனாமி ஏற்பட்ட போது எப்படி இந்த நான்கு நாடுகளும் இணைந்து செயல்பட்டனவோ அதே போன்று தற்போது இலங்கையில் தற்போது நிலவும் மனிதாபிமான நெருக்கடியிலும் கவனம் செலுத்துமாறும் வேண்டியுள்ளார். இந்த நான்கு நாடுகளும் இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி வெடித்துச் சிதறி பெரியளவில் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தி அது பிராந்திய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று கவலை வெளியிட்டுள்ளார். ஆனால் அதிலும் பார்க்க அவர் அடுத்த பத்தியில் ராஜபக்சக்களையும் அவர்களது அரசையும் மிகக் கடுமையாகச் சாடியிருந்தார்.

"ராஜபக்சக்களின் கீழ் இலங்கை நிதிச் சீரழிவு மற்றும் மனிதாபிமான அவலத்தின் விளிம்பில் உள்ளது. மகிந்த ராஜபக்ச தனது நாட்டி நேரடியாக இலங்கையின் கடன் வலையில் தள்ளிவிட்டார், கோத்தாபய ராஜபக்ச அரச கடன் பத்திரங்களுக்கான தொகையைத் திருப்பியளிக்க விவேகமான எந்த பொருளாதார நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் கிளர்ந்தெழுந்து மாற்றத்திற்கான நேரம் வந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்".

அமெரிக்க செனட்டின் வெளியுறவு குழுவின் தலைவர் ராபர்ட் மெனெண்டிஸ் வெளியிட்டிருந்த அந்த அறிக்கை மிகவும் காட்டமானது. இலங்கை நிலையை அமெரிக்கா எப்படி பார்க்கிறது; எந்தளவுக்கு ராஜபக்ச அரசு மீது அமெரிக்கா மோசமான எண்ணத்தையும் அவநம்பிக்கையையும் கொண்டுள்ளது என்பதை இந்தக் கடிதம் வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது. சீனாவுடன் பல ஆண்டுகளாக இலங்கை அரசு கொஞ்சி குலாவுவதை அமெரிக்கா எப்போதுமே கடுப்புடனேயே பார்த்துள்ளது என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனநாயக அரசு மற்றும் அதன் தலைவர்கள் மீது பெயரிட்டு இப்படியான விமர்சனங்கள் வெளியிடுவது அரிதாகவே இருக்கும்.

அபிவிருத்தி என்கிற போர்வையில் சீனாவின் கடன் கொள்கை என்பது "ஒட்டகமும் கூடாரமும்" கதை தான் எப்போது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் இன்று பல ஆப்ரிக்க நாடுகள் படும் நிலை. எடுத்துக்காட்டாக இன்று உகாண்டாவின் உள்ளூர் ஆட்கள் யாரும் கோழிப் பண்ணை வர்த்தகத்தில் ஈடுபட முடியாது. நாட்டின் மிகப்பெரிய விமான நிலையமான எண்டபே விமான நிலையம் சீனாவின் கைகளுக்குச் சென்றுவிட்டது. பல ஆப்ரிக்க நாடுகளில் இன்று உள்ளூர் ஆட்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை, இயற்கை வளங்கள் சீனாவின் கையில், வேலைக்கும் அங்கிருந்தே ஆட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனர். இந்த நிலையை நோக்கித்தான் இலங்கையும் சென்று கொண்டிருக்கிறது. மூன்று தசாப்தங்கள் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் என்கிற காரணத்தைக் காட்டி நாட்டின் தேவைக்கு பன்மடங்கு அதிகமான இராணுவத்தை உருவாக்கி அவர்களுக்குத் தீனிபோட சீனாவிடமிருந்து பல்லாயிரம் கோடி டாலர்கள் கடன். அந்த போரை ஆதரித்த நாடுகளும் அதை அப்போது கண்டுகொள்ளவில்லை. போருக்குப் பிறகு தேவைக்கும் அதிகமாக அபிவிருத்தி என்கிற போர்வையில் மேலும் மேலும் கடன் வாங்கியது இலங்கை. அதிலும் பெரும்பாலான கடன்கள் சீனாவிடமிருந்து. இப்போது வாங்கிய கடனை அடைக்கவும் வழியில்லை, மேலதிகமாக கடனை வாங்கவும் வழியில்லாத நிலையில் நாட்டில் நிலை "ஆப்பை பிடுங்கிய குரங்கு" போலுள்ளது. வேறு வழியின்றி கொழும்பு துறைமுகத்தின் பசையுள்ள பகுதியை சீனாவிற்கு தாரைவார்த்துவிட்டது அரசு. அது பிராந்திய பாதுகாப்பிற்கு பெரிய அச்சுறுத்தலாக அமையும் என்று ஏற்கெனவே இந்தியாவும் அமெரிக்காவும் தெரிவித்திருந்தன. ஆசியாவின் சீனாவைக் கட்டுப்படுத்திக் கையாள வேண்டுமென்றால் அதற்கு இந்தியாவின் துணை அவசியம் என்பதை உலக நாடுகள் அறிந்துள்ளன. அப்படியான நிலையில் சீனாவும் பொருளாதார ரீதியாக பலவீனமாகவுள்ள நாடுகளுக்கு உதவுவது போல் அவற்றை தனது பிடியில் கொண்டுவரும் உத்தியை சீனா கையாண்டு வருகிறது. அதாவது மறைமுகமாக நாடு பிடிப்பது.



இப்போது அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழுவின் தலைவர் எழுதியுள்ள அந்த கடிதத்தில் இலங்கைக்கு மேலும் நெருக்கடிக்குள் விழாமல் இருப்பதற்காக இந்தியா கடன்களும் மனிதாபிமான உதவிகளையும் செய்து ஆக்கபூர்வமாக ஈடுபட்டு வருகிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை அமெரிக்காவும் நீண்டகால பொருளாதார ஆதரவை வழங்கத் தயாராகி வருகிறது எனவும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்க உதவி கிடைக்கும் என்பது உறுதியாகிறது என்றாலும், சீனா விலக்கி வைக்கப்பட வேண்டும், அதற்கு முதற்படியாக ராஜபக்சக்கள் நீக்கப்பட வேண்டும் என்கிற செய்தி மிகவும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு உணவு உதவிகளை ஜப்பான் வழங்கி வருவதையும் பாராட்டியுள்ள அமெரிக்கா குவாட் அமைப்பிலுள்ள இந்த நான்கு நான்கு நாடுகளும் இலங்கைக்கு மிகவும் தேவையான எரிபொருட்கள் மற்றும் இதர பொருட்களை அளித்து மேலும் மனிதாபிமான உதவிகளைச் செய்ய முடியும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஜப்பானும் ஆஸ்திரேலியாவும் இணைந்து இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் மனிதாபிமான மற்றும் பேரிடர் நிவாரண வழிமுறைகளைக் காத்திரமாக முன்னெடுக்க முடியும் என்கிறது. இலங்கையில் நிலவும் கடுமையான உணவு நெருக்கடியும் இந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது இலங்கைக்குத் தேவையான நிதி மேலாண்மை மற்றும் பொருளாதார அடிப்படைகளைக் கட்டியெழுப்பி அது நிலைத்திருக்க இந்த நான்கு நாடுகளும் ஆதரவளிக்கும் என்றும் ராபர்ட் மெனண்டிஸ் குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

அது மட்டுமின்றி ராஜதந்திர ரீதியாக, இலங்கையில் இடம்பெற்ற மற்றும் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்கள் விஷயத்திலும் ஒன்றாக நிற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் அதன் ஆணையரின் அறிக்கை இந்தாண்டு அளிக்கப்படும் போது நான்கு நாடுகளும் ஒரே நிலையில் இணைந்து நின்று குரல்கொடுக்க வேண்டும் என்றும் அவரது அறிக்கை வலியுறுத்தியுள்ளது. ராஜதந்திர ரீதியிலான ஒற்றுமை பொறுப்புக்கூறலுக்கு குவாடின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி பன்னாட்டு மனித உரிமைகள் சட்டம் மதிக்கப்படுவதை உறுதிசெய்யும் என்றும் அதிமுக்கியமான அந்தக் கடிதம் கூறுகிறது.

இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ராஜபக்சக்களின் ஆட்சி தமக்கு ஏற்புடையதல்ல, அவர்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதை அமெரிக்கா அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளது. தமது உதவி தேவையென்றால் மக்கள் ராஜபக்சக்களை தூக்கி எறிய வேண்டும், அதற்கு தமது ஆதரவு உண்டு என்பதையே அந்தக் கடிதம் குறிப்பிடுவதாக கருத முடியும்.

சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் வெளியேறுங்கள் அல்லது வெளியேற்றப்படுவீர்கள் என்பதே அமெரிக்கா விடுக்கும் செய்தியாகவுள்ளது. இதேவேளை இலங்கை பொருளாதாரம் வளர்வதற்கு அமெரிக்கா 120 மில்லியன் டாலர்கள் கடன் வழங்கி ஆதரவளிக்கும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. தமது பன்னாட்டு வளர்ச்சி நிதி கழகத்தின் மூலம் இந்த கடன் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த கடனுதவி சிறிய மற்றும் இடைநிலை வர்த்தகங்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும், அதன் மூலம் அவர்கள் சமத்துவத்தைப் பேணி, புதிய வேலை வாய்ப்புகளை எதிர்காலத்தில் உருவாக்குவார்கள்" என்று அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார். இலங்கையின் கமர்ஷியல் வங்கி மூலம் இதில் 100 மில்லியன் டாலர்கள் அளிக்கப்பட்டு அவை சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு கடனாக வழங்கப்படும், அதிலும் பெண்களால் நடத்தப்படும் வர்த்தகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தாங்கள் சொல்ல வேண்டியதை அமெரிக்கா மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டது. "ராஜபக்சக்களே, நீங்கள் வெளியேறுங்கள் மற்றதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், அப்படிச் செய்ய மறுக்கும்பட்சத்தில் மக்கள் மூலம் நீங்கள் நீக்கப்படுவீர்கள்" என்பதே அந்த செய்தி.



சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் திருமணம் நின்றுவிடும் என்று கனவு காணும் "ஒத்து ஊதும் ஊடகங்கள்" இந்த கடிதம் மற்றும் செய்தியை மக்களிடமிருந்து மறைத்தாலும், ஊதுகிற சங்கு ஊதப்பட்டுவிட்டது.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

# காலிமுகத்திடலில் காணப்படும் மக்கள் அதிகாரத்தைப் பரிசோதிப்பது?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



"அவருடைய மத அடையாளம் காரணமாக அவரை துன்புறுத்துவதில் ஒரு பங்கை வகித்த அதே மருத்துவ கட்டமைப்புக்கு தனது சம்பள நிலுவையை திரும்பிக் கொடுத்ததன் மூலம் மருத்துவர் ஷாபி எல்லாவற்றுக்குள்ளும் அதிகம் அன்பான ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தியிருக்கிறார். இன்றைய பொசன் போயா நாளில் அவர் எங்களுக்கு பகவான் புத்தரின் செய்தியை அனுப்பியிருக்கிறார்"...இவ்வாறு ருவிற்றரில் பதிவிட்டிருப்பவர் பேராசிரியர் சரோஜ் ஜெயசிங்க. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஒரு மருத்துவ நிபுணர்.

மருத்துவர் ஷாபி சிகாப்தீன் குருநாகல் போதனா மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணராக இருந்தவர். குருநாகல் போதனா வைத்தியசாலையில் சட்டவிரோத கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஷாபி சிஹாப்தீன் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார். அவர் சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்ததாகவும். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. எனினும் குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தால் ஷாபி விடுவிக்கப்பட்டார். அவ்வாறு விடுவிக்கப்பட்ட பின் அவருக்கு வழங்கப்பட்ட சம்பள நிலுவைத் தொகையான 2.67 மில்லியன் ரூபாயை அவர் குருநாகல் ஆஸ்பத்திரிக்கே திரும்பவும் தானமாக கொடுத்துவிட்டார். எந்த மருத்துவ கட்டமைப்பு அவர் கீழ்த்தரமாக அவமதிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்ட போது அவரை பாதுகாக்கத் தவறியதோ அதே மருத்துவ கட்டமைப்பின் முகத்தில் அறைவது போல அவர் தனது சம்பள நிலுவையைத் தானமாக வழங்கி இருக்கிறார். ஒரு பொசன் நாளன்று ஒரு முஸ்லீம் மருத்துவர் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகளுக்கு கௌதம புத்தரின் போதனை ஒன்றை செயலில் காட்டி இருக்கிறார்.

ஆனால் இதுபோன்ற அகிம்சா வழிமுறைகளில் இருந்து இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பு கற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகம்தான். ஏனெனில் கடந்த வாரம் குருந்தூ ர் மலையில் அமைந்திருக்கும் ஆதி சிவன் ஆலய வளாகத்தில் ஒரு புதிய தாதுகோப கலசத்தைக் கட்டியெழுப்பும் வேலைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருக்கத்தக்கதாக அதை மீறி அரச உபகரணங்களான தொல்லியல் திணைக்களமும் படையினரும் பிக்குகளின் உதவியோடு அதைக் கூட்டாக முன்னெடுத்தார்கள். தமிழ் மக்களின் எதிர்ப்புக் காரணமாக அம்முயற்சி தடுக்கப்பட்டிருக்கிறது.

ஒருபுறம் பொருளாதார நெருக்கடி. உலகில் அத்தியாவசிய பொருட்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் எரிபொருள், சமையல் எரிவாயு போன்றன இலங்கைத்தீவில் லக்சறி பொருட்களாக மாறி இருக்கின்றன. ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் ஏறிக்கொண்டே போகிறது. இன்னொருபுறம் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக சிங்கள மக்கள் காலிமுகத்திடல்,கண்டி போன்ற இடங்களில் கிராமங்களை அமைத்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானதொரு பின்னணியில்தான் அரசின் உபகரணங்கள் ஆகிய தொல்லியல் திணைக்களம், அரசபடைகள் போன்றன ஒரு மரபுரிமை யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கின்றன. அதாவது அரசாங்கம் அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தத் தயாரில்லை என்று பொருள். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம் ஜெனிவாவில் 50வது மனித உரிமைகள் கூட்டத் தொடரில், கடந்த திங்கட்கிழமை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் என்ன பேசினார் என்பது. "மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன்.....இந்த பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும். இதேவேளை, இந்த சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம்". என்று பீரிஸ் கூறியிருக்கிறார். அதாவது போர்க்குற்றங்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறத் தயாரில்லை என்று பொருள். இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயாரில்லை என்பது அதன் தர்க்கபூர்வ விளைவுகளைப் பொறுத்தவரை நல்லிணக்கத்துக்கு தயார் இல்லை என்றுதான் பொருள். ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னரும் இது விடயத்தில் அரசுக் கொள்கை மாறவில்லை என்று பொருள்.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில்தான் கடந்தகிழமை முன்னிலை சோசலிசக் கட்சியின் உயர்மட்டக்குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது. காலிமுகத்திடலிலும் ஏனைய இடங்களிலும் போராடும் தரப்புகளின் மத்தியில் முன்னிலை சோசலிச கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட மாணவர் அமைப்பும் காணப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின் காலிமுகத்திடல் போராட்டம் ஒப்பீட்டளவில் சோரத் தொடங்கிவிட்டதாக கருதப்படும் ஒரு பின்னணியில், வடக்கு கிழக்கிலிருந்து அதிக தொகை தமிழ் மக்கள் காலிமுகத்திடலில் வந்து தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்று முன்னிலை சோசலிசக் கட்சி எதிர்பார்க்கின்றது. காலிமுகத்திடலிலும் கண்டியிலும் போராடிக்கொண்டிருக்கும் தரப்புக்களோடு ஏன் தமிழ் மக்கள் பெருமெடுப்பில் இணையவில்லை என்பதற்குரிய விளக்கத்தை காலிமுகத்திடலில் வந்து தமிழ் மக்கள் கூற வேண்டும் என்று அக்கட்சி எதிர்பார்க்கின்றது.

காலிமுகத்திடலில் திறக்கப்பட்டிருப்பது அரசுக்கு எதிரான ஒரு போராட்டக் களம். அங்கே சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பல்வேறு அரசியல் நிலைப்பாட்டைக் கொண்ட சக்திகளும் கூடுகின்றன. அவரவர் தமது நிலைப்பாட்டை, அதிருப்தியை, ஆதங்கத்தை, விரக்தியை, கோபத்தை கொட்டித் தீர்க்கும் ஓர் இடமாக அது காணப்படுகிறது. இலங்கைத் தீவில் அரசாங்கத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போராடலாம் என்ற நம்பிக்கையை பலப்படுத்தும் ஒரு வெளி அது. எனவே அங்கே தமிழ் மக்கள் வரவேண்டும். தங்களுக்குள்ள குறைகளை அங்கே கூறவேண்டும். தமது நிலைப்பாட்டை அங்கு பகிரங்கமாக தெரிவிப்பதன் மூலம் தமிழ் மக்கள் அந்தக் களத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குமார் குணரட்னம் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. வடக்கு கிழக்கிலிருந்து தொகையான மக்கள் அந்தப் போராட்டக்களத்துக்கு வருவார்களாக இருந்தால் அது ஒரு புதிய பரிமாணத்தை அடையும் என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் அதிகாரத்தை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். கோட்டா கோ கம போன்ற போராட்ட கிராமங்களை தொடர்ந்து பரவலாக விஸ்தரிப்பதன் மூலம் மக்கள் அதிகார சபைககளை நாடாளுமன்றத்திற்கு வெளியே உருவாக்க வேண்டும் என்றும், அவ்வாறு மக்கள் அதிகாரம் பலம் பெறும் பொழுது அரசியல்வாதிகள் வழிக்கு வருவார்கள் என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களோடு உரையாடும் பொழுது முன்னிலை சோஷலிஸ கட்சியானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறது என்று குமார் குணரட்னம் தெரிவித்தார். ஆனால் சுயநிர்ணய. உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதைக் குறித்து அவர் தெளிவாகச் சொல்ல தயங்கினார். ஏற்கனவே ஊடகங்களுக்கு அவர் வழங்கிய செவ்விகளிலும் அதைக் காணமுடிகி-றது.

சிங்கள மக்களை ஒரு தீர்வை நோக்கி தயார்படுத்த வேண்டும் என்றும், அதற்காக தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று தேவை என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின் போராட்டத்தில் ஒருவித தொய்வு ஏற்பட்டிருப்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்தப் போராட்ட கிராமத்தை தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மக்கள் எழுச்சிகளின் விளைவாகத்தான் மகிந்த பதவி விலகினார், பஸில் பதவி விலகினார், ஒரு புதிய பிரதமர் வந்திருக்கிறார், கடந்த இரு மாத காலப்பகுதிக்குள் அமைச்சரவை இரண்டு தடவைகளுக்கு மேல் மாற்றப்பட்டிருக்கிறது. போராட்டங்களின் பலனாகத்தான் இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் கூறுவது சரிதான். தென்னிலங்கையில் கடந்த இரு மாதங்களுக்கு மேலான காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எல்லாவற்றுக்கும் மக்கள் எழுச்சிதான்
மூலகாரணம். ஆனால் அந்த மக்கள் எழுச்சிகளின் கனிகளில் பெரும்பாலானவற்றை ரணில் விக்கிரமசிங்க சுவீகரித்துக் கொண்டு விட்டார் என்பதனை அவர் ஏற்றுக்கொண்டார். அந்த மாற்றங்களை ஏன் தமிழ் மக்கள் விலகி நின்று ஒரு சாட்சியாகவே அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை தமிழ் செயற்பாட்டாளர்கள் அவருக்கு விளங்கப்படுத்தினார்கள். தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது அமைப்பு மாற்றம் அதாவது சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல. மாறாக அடிப்படை மாற்றம், அதாவது, கட்டமைப்பு மாற்றத்தையே என்று அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

காலிமுகத்திடலில் போராடும் எல்லா அமைப்புகளையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள வைப்பதில் சவால்கள் உண்டு என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார். அவ்வாறான ஒரு கோரிக்கையை முன் வைப்பது இப்பொழுது காலத்தால் முந்தியது என்றும் அவர் கருத்து தெரிவித்தார். அதாவது சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான இரத்தம் சிந்தும் அனுபவங்களின் பின்னரும் அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் போராடிக்கொண்டிருக்கும் தரப்புகளில் மிகச் சில அமைப்புக்களைத் தவிர பெரும்பாலானவை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்பதே கோட்டா கோ கம யதார்த்தம் ஆகும்.

தென்னிலங்கை அரசியலில் ஆகப் பிந்திய யதார்த்தம் அது. அதைத் தமிழ் மக்கள் எதிர் கொள்ள வேண்டும். காலிமுகத்திடலில் தமிழ் செயற்பாட்டாளர்கள் தமது நிலைப்பாடுகளை எதனோடும் எவரோடும் சமரசம் செய்யாமல் வெளிப்படுத்த வேண்டும்.தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைக்க வேண்டிய ஒரு களம் அதுவென்று குமார் குணரட்னம் போன்றவர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாகவும் கூர்மையாகவும் வெளிப்படுத்தி விட்டார்கள். இந்நிலையில் நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் அதிகார மையங்களை உருவாக்கப் போவதாக கூறும் தரப்புக்கள் அதற்கு முன்னோடியாக உருவாக்கி வைத்திருக்கும் ஒரு போராட்டக் கிராமத்திலும் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாகவும் சமரசத்துக்கு இடமின்றியும் முன்வைக்கவேண்டும். குமார் குணரட்னம் கூறுகிறார் அது மக்கள் அதிகார மையம் என்று. அங்கிருப்பது சிங்கள மக்களின் அதிகாரமா? அல்லது தமிழ்மக்களின் அதிகாரமும் தானா? என்பதனை ஒரு முறை பரீட்சித்து பார்த்தால் என்ன?





# தோட்டத் துறை வீதியில் இறங்கினால் இலங்கையின் மூச்சும் நின்றுவிடும்

**- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்**

- தெழிலாளர்களுக்கும் காணி பகிர்ந்தளியுங்கள்
- தொழிற்சங்கத் தலைமைகளே தெழிலாளர்களைக் காப்பாற்ற ஓரணியில் திரண்டெழுங்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகஸ்ட் மாதத்திற்குள் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என ஏற்கனவே எச்சரித்துள்ளதுடன் ஒரு வருடத்திற்கு உரம் உட்பட அனைத்து விவசாய உள்ளீடுகளையும் இறக்குமதி செய்வதற்கு நாட்டிற்கு 600 மில்லியன் தேவைப்படும் எனக் குறிப்பிட்டள்ளார். ஐந்து மாதங்களுக்குப் போதுமான ஒரு மில்லியன் கிலோ அரிசியை இறக்குமதி செய்வதற்கு தற்போதைய விலையில் சுமார் 400 முதல் 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன.

உரத்தடை காரணமாக இந்த வருடத்தில் ஏழு மாதங்களுக்கு மாத்திரமே இலங்கையில் போதுமான அரிசியை உற்பத்தி செய்ய முடியும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். உரத் தடைக்கு முன்னர் இலங்கையில் நுகர்வுக்குத் தேவையான அரிசி உற்பத்தி செய்யப்பட்டது ஆனால் மற்ற தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடரை எதிர் கொள்ளும் முகமாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தப் பேரிடருக்கு எதிரான போரில் மலையக மக்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்களா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

- கொரணாவுக்கள் சாதனை

கொரணா காலத்தில் நாடே ஸ்தம்மிதமடைந்திருந்த வேளை தோட்ட மக்கள் மரணத்தைத் தழுவிய போதும் அந்த மரணத்தின் மீது நின்று நாட்டின் அந்நியச் செலவாணிக்காக உழைத்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்.

1965 இல் மொத்த ஏற்றுமதி வருவாயில் 90 வீதத்துக்கும் அதிகமாகவும் 1970 களின் பிற்பகுதியில் 70 வீதத்து க்கும் அதிகமாகவும் தோட்டத்துறையே பங்களிப்பு செய்தது.

தேயிலை தொழிற்துறை 2021 ஆம் ஆண்டில் மொத்தம் 228 228 Million Kgs தேயிலையை ஏற்றுமதி செய்தது. இதன்மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு சுமார் 1320 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் பெற்றது.

உற்பத்தியைப் பொறுத்தவரை இலங்கை கடந்த ஆண்டு 300 Million Kgs என்ற எண்ணிக்கையை பதிவு செய்ய முடிந்தது. உரப் பிரச்சினை தோட்ட பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்த போதிலும் கொரணா மரணத்தின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தோட்டத் தொழிலாளாகளினால் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தேசிய ரீதியிலான முடிவுகளின் போது தோட்டத் தொழிலாளர்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

- தொழிலாளர் படை

தோட்டத்துறையில் மொத்தமாக 1 இலட்சத்து 72 ஆயிரத்து 357 பேர் தெழிலாளர்களாக பணிபுரிகின்றனர். தோட்டத்துறையில் 22 தனியார் கம்பெனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் 1 இலட்சத்து 61 ஆயிரத்து 557 பேரும் அரச நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிலுத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்ட ஆக்க கூட்டுத்தாபனம் ஆகிய இரு தோட்டத் துறைகளிலும் 11 ஆயிரத்து 587 பேர் பணிபுரிகின்றனர். மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு சுமார் ஒரு மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- 37 ஆயிரம் ஹெக்டர் காணி தரிசாக உள்ளது

பெருந் தோட்டத்துறையில் சுமார் 37 ஆயிரம் ஹெக்டர் காணி பயன்படுத்தப்படாமல் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது 9 ஆயிரம் ஹெக்டர் காணியில் இன்றைய பொருளாதார நெருக்கடியை நோக்காகக் கொண்டு பயிர் செய்வதற்காக அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.

உண்மையில் இந்த 9 ஆயிரம் ஹெக்டர் காணி என்பது ரயில் பாதைகளின் இருமருங்கிலும் அமைந்துள்ள காணிகளாகும். இந்தக் காணிகளில் பெருந் தோட்டத் துறை சார்ந்த தனியார் கம்பெனிகளால் பயிர்ச் செய்கைக்கென பயன்படுத்தப்பட்ட காணிகளாகும் தற்போது இக் காணிகள் தரிசாகக் கிடக்கின்றன. இந்தக் காணிகளை ஜனாதிபதி கோத்தாபய மற்றும் அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் படைத்தரப்புக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்தது. ஏதோ காரணத்தினால் இந்தக் காணி பகிர்வு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளே தற்போது பயிர்ச் செய்கைக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் யாருக்குப் பகிர்ந்தளிக்கப்படப் போகின்றது என்பது இதுவரை அறிவிக்கப்படவில்லை.

- காணி அபகரிப்பு

இதற்கும் அப்பால் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கப்பட்ட தோட்டங்களின் காணிகளில் இதவரை ஏறத்தாழ 22244 ஹெக்டர் நிலம் சட்ட விரோதமாக அபகரிக்கப்பட்டள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாவலப்பிட்டி தோட்டப்பகுதியில் 1100 ஏக்கர் காணி தரிசாகக் கிடப்பதாகவும் அக்காணியில் பாற் பண்ணை அமைப்பதற்கென தனியாருக்கு வழங்க இருப்பதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்தார். அமைக்கப்பட உள்ள பாற்பண்ணையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அமைச்சரும் ஏன் மலையகப் பிரதிநிதிகளும் கூட நாடாளுமன்றத்தில் அறிவித்தனர்.

அந்தக் காணிகளை காலம் காலமாக அதே தோட்டங்களில் உழைத்துவருகின்ற தொழிலாளர் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்து தேசிய பொரளாதாரத்தின் பங்காளராக ஆக்குவதற்கு அரசியல்வாதிகளுக்கோ அரச கட்டமைப்பிற்கோ மனமில்லை.

மலையக அரசியல்வாதிகளுக்குக்கூட தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க திராணி இல்லை.

தங்களது சுய நலன்களுக்காகவும் அமைச்சுப் பதவிகளுக்காகவும் பிரிந்து நின்று மலையக மக்களின் வாக்குகளை தேசியக் கட்சிகளுக்கு ஆட்சி அமைக்க வாரிக் கொடுக்கும் மலையக அரசியல்வாதிகளால் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதில் காட்டும் அக்கறை வேகம் என்பன மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இருப்பதில்லை.

- "கிங் மேக்கர்" அரசியல்

1988 ஆம் ஆண்டு இலங்கை அரசியலில் நடைபெற்ற சம்பவம் ஒன்றினை இங்கு பதிவு செய்ய விரம்புகின்றேன்.

ஆப்போதைய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் கொழும்பில் உள்ள "ரேஸ்கோஸ் அவெனியில்" உள்ள மாடிக் குடியிருப்பில் வாழ்ந்து வந்தார். அந்த மாடிக் குடியிருப்புக்குப் பின்னால் உள்ள வாசஸ்தலத்தில் அப்போதைய பிரதம மந்திரியான ரணசிங்க பிரேமதாசாவின் நெருங்கிய நண்பரான அரங்கலகே வசித்து வந்தார். அவருடைய அழைப்பை ஏற்று நானும் நண்பர் ஒருவரும் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தோம். அவருடனான சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது பிரதமர் ரணசிங்க பிரேமதாசவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் எங்களை தனது வீட்டிலேயே இருக்குமாறு கூறிவிட்டு அலரி மாளிகைக்கு அவசரமாக கிளம்பிப் போனார். ஒரு சில மணித்தியாலங்களின் பின் எங்களை வந்து சந்தித்த அவர் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சர் தொண்டமான் அவர்களின் ஆதரவைப் பெற்றாக வேண்டும். அது குறித்து அவருடனான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் பணித்தள்ளார் என்றார். இதுபற்றி நேரடியாகவே அவருடன் பேசினால் என்ன என்று நாம் அவரிடம் வினவினோம்.

நாம் மூவரும் அமைச்சர் எஸ்.தொண்டமான் அவர்களை சந்திப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்றோம். அந்தக் காலகட்ட அரசியல் பிரதமர் ரணசிங்க பிரேமதாசவுக்கும் அமைச்சர் ஸெ். தொண்டமானுக்கும் இடையில் ஒரு சுமுகமான உறவு இருக்கவில்லை. என்ன நடைபெறும் என்பது தெரியாத நிலையில் நாம் மூவரும் அமைச்சரை சந்திக்க சென்றோம். தோர்தலில் உதவுவது குறித்தும் சந்திப்பு குறித்தும் திரு அரங்கலகே அவரிடம் எடுத்துக் கூறினார். அதனை செவிமடுத்த அமைச்சர் சந்திப்பது தேர்தலில் உதவுவது என்பதற்கு முதல் "நாடற்றோருக்குப் பிரஜா உரிமை வழங்கும் சட்டமூலத்தை நாடாளு மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு ஆவண செய்வதாக இருந்தால் தேர்தலில் ஆதரவளிக்கத் தயார். இந்த உறுதி மொழியை வழங்கினால் சந்திப்பதற்கும் தயார்" என்று தெரிவித்தார்.

அந்தச் செய்தியுடன் திரு அரங்கலகே பிரதமரைச் சந்தித்ததையடுத்து பிரதமர் அமைச்சரைத் தொடர்பு கொண்டு உறுதி மொழியை வழங்கியதுடன் அன்று இரவே இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

அவ்வேளையில் "நாடற்றோருக்குப் பிரஜா உரிமை" வழங்குவதை அப்போதைய அமைச்சர்களான அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்கா போன்றோர் கடுமையாக எதிர்த்து நின்றனர். பிரதமர் ரணசிங்க பிரேமதாச அமைச்சர் அத்துலத்முதலியைக் கொண்டே "நாடற்றோருக்கான பிரஜா உரிமை" சட்டமூலத்தை நாடாளுமன்றில் கொண்டுவர வைத்து நிறைவேற்றினார். இவ்வாரான "கிங் மேக்கர்" அரசியலே மலையகத்திற்குத் தேவை. மாறாக அமைச்சுப் பதவிகளுக்கான அரசியல் அல்ல என்பதை மலையகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

- தொழிலாளர்களுக்கு எதிராக வழக்குகள்

தோட்டக் காணிகள் அபிவிருத்தி என்ற போர்வையிலும் பல்வேறு தேவைகளுக்காகவும் அபகரிக்கப்படும் போது தோட்டத் தொழிலாளர்கள் காணிகளைக் கையகப்படுத்தியுள்ளதாக அவர்களுக்கு எதிராக பல வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதாக சட்டத்தரணி இ.தம்பையா தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். அந்தளவுக்கு தோட்டத்துறை சார்ந்தோரை தேசிய நீரோட்டத்துடன் இணைத்துக் கொள்வதற்கான எந்தவொரு வேலைத் திட்டத்தையும் இலங்கை ஆட்சியாளர்கள் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் பிரகடனப்படுத்தப்படாத தேசியக் கொள்கையாக கொண்டுள்ளனர்.

- நீட்வூட் தோட்ட வேலை நிறுத்தம்

தோட்டத் தொழிலாளர்களை சொந்தக் காலில் நிற்க வைப்பதற்கான எந்த ஒரு வேலைத் திட்டமும் அரசாங்கத்திடமும் இல்லை தொழிற்சங்கங்களிடமும் இல்லை.

1990களில் ஹப்புத்தலை நீட்வூட் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிக்கையை முன் வைத்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இந்த வேலை நிறுத்தம் முழுக்க முழுக்க நீட்வூட் தோட்டத் தொழிலாளர்களினாலும் தோட்டக் கமிட்டிகளாலும் தீர்மானம் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை உடைத்துவிட பல்வேறு சக்திகள் முயற்சித்தன. இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவெனில் குறிப்பாக தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடக்கிவிட பகீரதப்பிரயத்தனங்களை மேற் கொண்டன. பேச்சுவார்த்தைக்கென கொழும்புக்கு அழைக்கப்பட்ட தோட்டக் கமிட்டி தலைவரும் கமிடடி உறுப்பினர்களும் கொழும்பில் வைத்து வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு பயமுறுத்தப்பட்டனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் சுமார் 6 மாதங்கள் நடைபெற்றன. இறுதியில் தொழிலாளர்கள் வெற்றிபெற்று சம்பள உயர்வையும் பெற்றனர்.

இந்த வெற்றிக்குப் பின்னால் இருந்தது தொழிலாளர்களின் ஒற்றுமை மாத்திரமல்ல தொழிலாளர் குடும்பங்களில் பெரும்பாலானவர்கள் பொருளாதார ரீதியில் சொந்தக்காலில் நின்றமையாகும். அதாவது பெரும்பாலான தொழிலாளர் குடும்பங்கள் தோட்ட வேலையுடன் மரக்கறி செய்கையிலும் ஈடுபட்டுவந்தமையால் சம்பள உயர்வு போராட்டத்தில் வெற்றி பெற்றனர்.

இப்பொழுதாவது தோட்டத் தொழிலாளர்களை சொந்தக் காலில் நிற்பதற்கு வழி செய்யுங்கள் என்பதுதான் தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்களுக்காக உழைக்க முன்வந்துள்ள மலையக தொழிற்சங்கத் தலைமைகளுக்கு மலையகத்தின் சார்பில் விடுக்கம் கோரிக்கையாகும்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வுப் போராட்டத்தில் தொழிற்சங்கத் தலைமைகளான நீங்கள் பிளவுபட்டு நின்று தொழிலாளர்களை தோற்கடித்துவிட்டீர்கள். தனக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டுமென்றவாறு நடந்து கொண்டு தொழிலாளர்களின் வயிற்றில் அடித்து விட்டீர்கள்.

ஆனால் சந்தா விடயத்தில் ஓரணியில் திரள முன் வந்தீர்கள்.

தற்போது தொழிலாளர்களின் வயிற்றில் அடி விழத் தொடங்கிவிட்டது. தொழிற்சங்கத் தலைமைகளே தெழிலாளர்களைக் காப்பாற்ற ஓரணியில் திரண்டெழுங்கள். இல்லையேல் அவர்களது சவங்களின் மீதுதான் தெழிற்சங்க அரசியலை நடத்த வேண்டிவரும். நீங்கள் முன் வராவிட்டால் தொழிலாளர்களே தலைமையேற்று காணி பகிர்ந்தளிக்குமாறு வீதியில் இறங்க வேண்டி வரும். தொழிலாளர்கள் வீதியில் இறங்கினால் அந்நியச் செலவாணியின் இறுதி மூச்சும் நின்றுவிடும்.

Email : vathevaraj@gmail.com / Mobil : 0094 777304145

# Discover the flavour of a legendary Sinha Stout from the exotic island of Sri Lanka




Lions have fascinated mankind since time immemorial. They form an integral symbol of strength and clan identities for tens of thousands of years. The mystery and allure of the king of the jungle pervaded civilizations for centuries and in the late 19th century, deep within central Sri Lanka, British explorer, Sir Samuel Baker, discovered a lion that would one day enliven palates around the world – but, it remained a secret.

Whilst on a hunting trip in the cool climes of Sri Lanka's (then Ceylon) salubrious central hills of Nuwara Eliya, situated 6000 feet above sea level, legend says Baker took aim at a magnificent stag in the distance. Baker hit his target, and as he strode to retrieve his price, he was struck with awe at the beauty and abundance that surrounded him including a sparkling spring flowing down to the lake below. There, Sir Samuel Baker set up what would become the Ceylon Brewery in 1881.

Since then, the Ceylon Brewery – now Lion Brewery (Ceylon) PLC,– produced golden brews that for long remained some of the best kept secrets from the rest of the world. Visitors to the golden isle and its dwellers savoured the exclusive flavours for decades, before Lion ventured out to the world in 1981 – more than a century after its inception.




Upon its discovery by global beer connoisseurs, its flagship product, Lion Lager, is now exciting drinkers around the world. With a unique flavour stemming from its century-old recipe, Lion Lager is now available at selected Beer Stores under the brand name Sinha Lager in Canada. The beer is available in 6 packs and retails for $17.45 for a 6 pack.

But the jewel in the crown of this King is its famous Stout – the indisputable king of dark beers. Lion Stout, known as Sinha Stout in Canada, is for long considered the best kept secret in beer. The traditional dark stout comes with sweet notes of chocolate, toffee, mocha, caramel and roasted barley, and trapped by its dense creamy head offers drinkers a burst of flavour that keeps them coming back for more.

The late Beer Hunter, Michael Jackson, officially endorsed this Stout as 'the best in the world'. During a visit to Sri Lanka, in 1986 to track down this cask-conditioned stout, Jackson savoured this legendary beer and fell in love with it immediately. This was definitely 'love at first sip'. What adds a real tang to this tale is that Jackson did not seek any form of compensation for his endorsement or review – he loved it so much.

It's difficult to detail the richness of a Sinha Stout. It is a flavour that must be indulged for a palatal experience that is unparalleled. Over the years Sinha Stout has earned the privilege of converting countless lager faithful towards dark beer, and it is all down to the most unique and rich flavour of this beer – what was once the best kept secret in beer. Now that the secret is out, it is waiting to be discovered by Canadian beer enthusiasts. Sinha Stout is available at selected LCBO outlets around Ontario.

Tipplers love this Stout. So-muchso, it enjoys a 97-99 rating on ratebeer.com and has acquired a loyal consumer base in many European markets for its distinct taste profile. It's not just the consumers, even quality agencies love Lion/Sinha Stout, winning multiple Gold Awards continuously from the prestigious Monde Selection over several years. The Lion Brewery works in partnership with Carlsberg AG, and is compliant with the latter's Global Quality Management System.

It happens it was a cocktail competition that drew the late Beer Hunter Michael Jackson to Sri Lanka back in the day. Sinha Stout was used in the competition, and mixing was evidently popular from the olden days. Jackson recounts his experience as below.

"The (Lion) brewery's principal product is lager, but it made a pale ale until the 1960s, and it still produces a stout. This pattern is typical in former British colonies. As golden lagers became more popular, the bronze or copper "middle" color vanished, but a black porter or stout survived for those who wanted something truly dark. All beers were stronger in colonial times, and these old black brews typically had between 6.0 and 9.0 per cent alcohol by volume.

Sinha Stout, a wonderfully sweet but assertive tropical gem, is bringing the rich heritage of Sri Lankan flavour to Canada's discerning drinkers. This legendary dark beer is presently served in 26 countries, brewed untouched by hand using nothing but the finest ingredients from around the world said Stefan Atton, Vice President International Business for Lion Brewery (Ceylon) PLC. True to the nation's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence. In Sri Lanka, the company represents brands from Carlsberg, Diageo, Brown-Forman, AB InBev and Warburn demonstrating its commitment to working with world-leading brands and serving nothing but the best.

Sinha Stout is a favourite on Sri Lanka's golden sun-bathed beaches, and even in the cool climes of the hills within which it was discovered. It is a beer that keeps connoisseurs coming back for more, with its soft, fresh and extraordinary chocolatey mocha character. Reach out for a Sinha Stout, a beer that is exotic as the island within which it was born.

Enjoy the best kept secret.

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து தங்குமிட வசதி காலை உணவு பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
Contains: Barley, Sulphites
Contient : Orge, Sulfites
SINHA
LAGER
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
SINHA
1881
SINHA
LAGER
IMPORTED
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

# MORTGAGES & REFINANCES

WE WILL GET THE MORTGAGE FOR

- LOW INCOME
- BAD CREDIT
- CONSUMER PROPOSAL



அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!

PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS



WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU

Shan Thayaparan

Mortgage Architect M08009140

MORTGAGE ARCHITECTS

416-826-7426

shan@shan123.com

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன், அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா

JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**



உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின் மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும் வேண்டுகிறோம்.

**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com


JULY 9
SATURDAY
@ 6:00PM
PRABHA
MAGISHA
RACHEL
SABEASAN
RAJITHA KIRUBAN
SHARMILA
AKALIYA THARMAKULARAJAH
Mega Tuners
FUNDRAISER EVENT
விடியலைத்தேடி 2022
PRIMA
DANCE SCHOOL
EST. 2011
வெள்ளி விழா
25th
ANNIVERSARY
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
இடம்
Ayyappan Temple
635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8
VIBRANT
HOSPITALITY
GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality
Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
Majestic City
The Biggest South Asian
Indoor Mall in North America.
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Leasing Opportunity
Crish Sivakolunthu (Project Manager)
647 218 3698 or 416 291 3555



# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்




**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

**905-201-8900**





## கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments


உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700,**
**Scarborough, ON. M1P 4X4**



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2022

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினான்காவது முறையாக நிகழும் மங்களகரமான சுபகிருது வருஷம் வைகாசி மாதம் ஏழாம் நாள் (ஆங்கிலம்20-05-2022)வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 30ம் நாள் (ஆங்கிலம் 12-06-2022)ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 13-06-2022 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
சிவாகமநிதி, அஹோரசிவம் சாண்டில்ய
சிவஸ்ரீ சோம பிரணவ சிவாச்சாரியர்
London U.K
**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
"சிவாகமரத்தினம்" சிவஸ்ரீ S. மதன் குமார் சிவம்
(தமிழ்நாடு, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

19-05-2022 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 20-05-2022 | வெள்ளி | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 21-05-2022 | சனி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | தம்பிஜயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 22-05-2022 | ஞாயிறு | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 23-05-2022 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 24-05-2022 | செவ்வாய் | திரு. மேனுஷன் தவச்செல்வன் திருஞானம் குடும்பம் (புங்குடுதீவு) | திரு. நாதன் குடும்பம் திரு. கதிர்காமநாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 25-05-2022 | புதன் | திரு. இராசையா நகுலேஸ்வரி குடும்பம் | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | கப்பல் திருவிழா |
| 07 | 26-05-2022 | வியாழன் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 27-05-2022 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 28-05-2022 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா குடும்பம் சோமாஸ்கந்தன் கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 29-05-2022 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. சந்திரபோஸ் குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 30-05-2022 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா குடும்பம் -தாவடி | மயில் வாகனம் |
| 12 | 31-05-2022 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | ஓர் அன்பர் | கற்பகதரு வடிவம் |
| 13 | 01-06-2022 | புதன் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 02-06-2022 | வியாழன் | ஓர் அன்பர் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 03-06-2022 | வெள்ளி | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 04-06-2022 | சனி | திரு. ஸ்ரீதரன் குடும்பம் தவராசா குடும்பம் -கிளிநொச்சி | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 05-06-2022 | ஞாயிறு | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 06-06-2022 | திங்கள் | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | நர்த்தன வடிவம் |
| 19 | 07-06-2022 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 08-06-2022 | புதன் | திரு. சிபின் சுந்தர் குடும்பம் கனடா | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 09-06-2022 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் விமலநாதன் சத்தியவதி குடும்பம் கிளிநொச்சி | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 10-06-2022 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 11-06-2022 | சனி | திரு. சு. கிருஷ்ணபகவான் குடும்பம்-கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 12-06-2022 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS Kumar - Canada | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 13-06-2022 | திங்கள் | தீர்த்தத் திருவிழா - பத்மராஜா சிவசக்தி குடும்பம்-அனலைதீவு | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 14-06-2022 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 17-06-2022 | வெள்ளி | ஸ்ரீநிவாஸ் கிருஷ்ணா கஸ்தூரி குடும்பம் விஜயவாடா, இந்தியா | | மாலை: வைரவர் மடை |
| 28 | 18-06-2022 | சனி | திரு. நடராஜா ஸ்ரீரங்கன் குடும்பம் - (V S N Sons Express Ltd.) | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி ஒன்றாவது தடவையாக ஜூலை மாதம் 21, 22, 23ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சாந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
சிவப்பிரகாசம் வாஞ்சிநாதன் - செல்லத்துரை வீரமணி
சக்திவேல் கார்த்திகேயன் - வெங்கடேசன் மதன்ராஜ்
அபிராமசுந்தரம் ராஜேஷ் - முனிரத்தினம் முனிராஜ்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்.)




VIVEKA

**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

# ஈழத்துத் திருக்கோவில்கள்

1002



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## முத்துலிங்கசுவாமி கோயில் (சிவன்கோயில்) கதிர்காமம்

*“இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்*
*பிறவாகித் திறமான பெரு வாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா*
*கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே”*

முத்துலிங்கசுவாமிகோயில் (சிவன்கோயில்) அருளும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது. இலங்கையின் அம்பாந்தோட்டைப் பகுதியில் திசமகாரகம என்ற பிரதேசத்திலிருந்து 19 கி.மீற்றர் தொலைவிலுள்ள காட்டுப்பகுதிக்குள், மாணிக்ககங்கை ஆற்றங்கரையில், வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலயம் அமைந்துள்ளது. கதிர்காமப்பிரதேசம் நீர்வளம், நிலவளம், மலைவளம் அனைத்தும் ஒருங்கே கொண்டது. இப்பிரதேசத்தை கதிர்காமம் என்று தமிழர்களும், கதரகம, தெவியன்கே ரட்ட (கடவுளுடைய ஊர்) என்று சிங்களவர்களும் அழைப்பர். இக்கோயில் இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களும் வணங்கும் தலமாக விளங்குகின்றது.

கதிர்காமத்தில் மாணிக்ககங்கையின் மறுகரையில் இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலமாகிய பள்ளிவாசலும் காணப்படுகின்றது. இங்குள்ள வழிபாட்டுக்குரிய முக்கிய இடம் சலவைக்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலிலிருந்து சற்றுத் தூரத்தில் விபீஷணரின் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் விபீஷணரோடு, ஸ்ரீராமர், சீதை, இலட்சுமணர், அனுமார் ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இங்கு விபூதியே பிரசாதமாக வழங்கப்படுகின்றது. இவை தவிர பார்வதிகோயில், பத்து அவதாரங்களைக் குறிப்பிடும் தசாவதாரக் கோயில், வள்ளி கோயில், வள்ளி தெய்வானை சமேத முருகன் கோயில், லட்சுமி நாராயணர் கோயில், ஆஞ்சநேயர் கோயில், புத்தர்கோயில், கண்ணகி கோயில் என்பவற்றொடு, முத்துலிங்கசுவாமி கோயில் என அழைக்கப்படும் சிவன் கோயிலும் அமைந்துள்ளது.

புராண இதிகாச வரலாற்றுப் பெருமை கொண்ட கதிர்காமம், சுவாமி கல்யாணகிரி என்ற முத்துலிங்க சுவாமிகளின் அனுபூதி பெற்ற பின்னரே அருள்பெற்ற தலமாக சிறப்புப்பெற்றது. இவர் கி.பி 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி 17 ஆம் நூற்றாண்டின் மற்பகுதியிலும் வாழ்ந்தவர். பல்லாண்டு காலமாக மறைந்திருந்த இவ்வாலயத்தை இவரே கண்டுபிடித்தாரென்பர். வடநாட்டைச்சேர்ந்த சுவாமி கல்யாணகிரி (முத்துலிங்கசுவாமிகள்) கதிர்காமத்திலே பன்னிரண்டு ஆண்டுகள் தங்கி கடுந்தவம் புரிந்துள்ளார். இவர் தவம் செய்த காலத்திலே ஒரு வேடுவச் சிறுவனும், சிறுமியும் சுவாமிகளுக்கு பணிவிடை செய்துள்ளனர். முருகனே இவ்வாறு பணிவிடைசெய்தாரென உணர்ந்த சுவாமிகள் முருகனைப் போற்றியுள்ளார்.

முத்துலிங்க சுவாமிகள் தாம் அனுபூதிமூலம் பெற்ற செல்வத்தை சமாதி அடைவதற்கு முன்பாக, தங்கத் தகட்டில் இயந்திரமாகப் பதிப்பித்து, பிரதிஷ்டை செய்தார். இவ்வியந்திரம் கதிர்காமத்தில் முருகப்பெருமானின் மூலஸ்தானத்திலே பேழையினுள் வைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் சக்தி வாய்ந்தது. முத்துலிங்கசுவாமிகளின் சமாதி, முருகன் ஆலயத்திற்கு அருகா-மையிலேயே உள்ளது. முத்துலிங்க சுவாமிகளுக்குப்பின் இவரது சீடர், ஸ்ரீ ஜயங்கிரிசுவாமிகள், கதிர்காமக்கந்தனுக்குச் சேவை செய்தார். இவரின் பின் குடிபாவா என்பவரும் கதிர்காமக்கந்தனுக்குச் சேவை செய்து, கி.பி 1898 இல் சமாதியடைந்தார்.

கதிர்காமத்தில் நான்கு திசையும் இறைவனை எழுந்தருளப்பண்ணி வணங்கிவருகின்றனர். இந்தவகையிலே, முத்துலிங்கசுவாமி கோயில் (சிவன்கோயில்), கதிர்காமத்தின் மேற்குத் திசையிலே அமைந்துள்ளது. இக்கோயில், கதிர்வேற்பிள்ளை பொன்னையா கந்தையா வழித்தோன்றலில் வந்தவர்களால் பரிபாலனம் செய்யப்பட்டது. இவர்களின் பின், பாலா என அழைக்கப்பட்ட திரு. குமாரசிங்கம் அவர்களால், முத்துலிங்கசுவாமி கோயில் பரிபாலிக்கப்பட்டது. இவ்வாலயம் 1974 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது.

முத்துலிங்கசுவாமிகோயிலின் மூலஸ்தானத்தில் இறைவன், மறைபொருளாக எழுந்தருளி அருள்புரிகின்றார். இங்கும் மௌனபூசையே இடம்பெறும். அத்தோடு தினமும் அக்கினி வளர்க்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்திலே மூன்றுநேரப் பூசைகள் மிகச் சிறப்பாக இடம்பெறுவதோடு, மகாசிவராத்திரி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. முத்துலிங்கசுவாமிகோயில் உட்பட கதிர்காமத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும், சனிக்கிழமையன்று காலைப்பூசை நடைபெறாது. பதிலாக, அனைத்துத் தெய்வங்களுக்கும் எண்ணெய் முழுக்குடன் கூடிய அபிஷேகம் இடம் பெறும்.


முத்துலிங்கசுவாமிகள் கோயிலின் முன்புறத்திலே, விநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். இவ்விநாயகர்பற்றி வழக்கிலே ஒரு வரலாறு கூறப்படுகின்றது. இவ்விநாயகப்பெருமான் மாணிக்கங்கையிலே தோற்றம் பெற்றதனைக்கண்ட பக்தர்கள், அதனை எடுத்துப் பூசித்துவந்தனர். இவ்விநாயகர் மாணிக்கக் கல்லாகக் காணப்பட்டமையால், அதனை சிலர் விற்க முயன்றபோது, விநாயகர் கருங்கல்லு நிறமாக மாறினாரென்றும் கதையொன்று வழக்கிலே நிலவுகின்றது. இவ்வாலயத்தினைச் சுற்றிவர பரிவார மூர்த்திகள் காணப்படுகின்றனர். இவ்வாலயத்தின் பின்புறத்திலே பிள்ளையாரும், நாகம்மாளும் எழுந்தருளியுள்ளனர்.


கதிர்காமத்திலுள்ள தெய்வானை அம்மன் ஆலயத்திலே கொடியேற்றம் நிகழும்பொழுது, அதேநேரத்தில் முத்துலிங்கசுவாமி கோயிலிலும் கொடியேற்றம் நிகழும். முத்துலிங்கசுவாமிகள் கோயிலின் கொடியானது, கதிர்காமத்திலுள்ள மடாதிபதிகளை நினைவுபடுத்துமுகமாக, செம்மஞ்சள் நிறத்திலே அமைந்துள்ளது. இதே தினம் மாணிக்கப்பிள்ளையார் மற்றும் முருகன்கோயில்களில் பச்சைப்பந்தல்போடும் வைபவம் இடம்பெறும். இக்கோயிலும் ஞானியர் சமாதியடைந்த இடமாக விளங்குவதால் அருளொளி பெற்றுக் காணப்படுகின்றது.

*வளரும்...*

MURALI BUS LTD. 29 years
416.455.3514


56 SEATER COACH BUS WWW.MURALIBUS.CA
Canada & US Anywhere • Aiport Service On Time

T1
EAST COAST
July 1st - 7th
4 Province Tour
* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach
$1100
(each person)
(4 people in a room)
(4 மாகாணங்கள்)

*Quebec *Nova Scotia
*New Brunswick
*Prince Edward Island (P.E.I)

T2
Montreal Tour and
Val Morin Temple
தேர் திருவிழா

July 16 and 17th
Saint Joseph Church - Lunch Buffet
Premium Outlet Shopping
(4 people in a room)
$230

T3
New York City, Washington DC, Pittsburgh
July 30th, 31st
August 1st, 2nd


4 people in a room
New York City: Times Square, Ground Zero, Statue of Liberty
Washington: White House, Capitol Hill, Air & Space Museum
Pitsburgh: வெங்கடேஸ்வரர் ஆலயம், Grove City Shopping
3 இரவுகள் தங்குமிட வசதியுடன் ஒருவருக்கு $550 மட்டுமே!
4 நாட்கள் சுற்றுலா

முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com
Vaccination is mandatory (at least 2 doses)

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198




# பலாலிக்கு விமானம் சேவை "வரும் ஆனால் வராது"

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

**பொ**துவாக நான் இரவு நித்திரைக்குச் செல்லும் முன்னர் நாட்டு நடப்பு செய்திகளையும் நகைச்சுவை நிகழ்ச்சியும் பார்ப்பது வழமை. அப்படித்தான் அன்று இரவும்-செய்தியும்-நகைச்சுவையும். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் இயக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடுகள் செய்வதாக ஆரவாரமாக செய்திகள் வெளியானது. இதைக் கண்டவுடன் அதுவும் நகைச் சுவை ஒளிபரப்போ என்ற ஐயம் எனக்குள் எழுந்தது.

ஏனெனில் 2022-06-13ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் விமான சேவைகள் அமைச்சர் விரைவில் பலாலி வருவதாகத் தெரிவிக்கப்பட்ட ஒற்றை விடயத்தை வைத்து அடுத்த வாரமே விமானம் கிளம்புவது போன்ற ஆரவாரச் செய்திகள் வெளிவருகின்றன.


பலாலி விமான நிலையத்தில் இருந்து திருச்சிக்கு விமான சேவை இடம்பெறுவது ஒன்றும் புதிய விடயமாக இல்லாதபோதும் மீண்டும் திருச்சிக்காவது சேவை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

2019-10-17 அன்று யாழ்ப்பாணம் மக்களிற்குக் கிட்டிய ஒரு அரும்பெரும் சொத்தான பலாலியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தற்போதைய அரசினால் இரகசியமான முறையில் முழுமையாக மூடுவது கண்டும் அரசோடு ஒட்டி நின்றவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர்.

இலங்கையின் சர்வதேச விமான நிலையமாக யாழ்ப்பாணம் விமான நிலையம் 2019-10-17 மீண்டும் புதுப் பொலிவுடன் ஆரம்பித்து வைக்கையில் 2015ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட பெரும் முயற்சியின் அறுவடை ஒன்று அன்று பெறப்பட்ட மகிழ்ச்சி நிச்சயம் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களிற்கு மட்டுமல்ல வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை 2014ஆம் ஆண்டு தொடங்கியது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மாவை. சேனாதிராஜா அப்போது யாழில் இந்தியத் துணைத் தூதுவராக இருந்த மகாலிங்கத்திடம் முதன் முதலாக இந்த கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கையினை உரிய முறையில் இந்திய அரசுவரை அவர் கொண்டு சென்றார். பிறகு இந்தியப் பிரதமர்வரை கூட்டமைப்பால் இது கொண்டு செல்லப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதனையடுத்து 2015ஆம் ஆண்டு குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசு இணக்கம் தெரிவித்து அதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டினையும் மேற்கொண்டபோதும் அப்பணிகள் யாவும் மிகவும் இரகசிய-மாகவே இடம்பெற்றன. இருநாட்டு விடயம் என்பதால் நீண்டகாலம் இரகசியம் காக்க முடியவில்லை. அதனால் 2015இன் இறுதியில் விடயம் வெளிவந்ததும் அப்போதைய மைத்திரி அரசும் ஆரம்பத்தில் பச்சைக்கொடியே காட்டியது. இருப்பினும் கொழும்பு அதிகாரிகள் இதற்குத் திட்டமிட்டு முட்டுக்கட்டை போட்டனர். "வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது" என்ற மனத்தடையும் வன்மமும் அவர்களிடையே எப்போதும் இருந்ததுண்டு. வடக்கு வளர்ந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருந்தனர்.



பின்னர் 2015ல் கூட்டமைப்பு இந்தியாவிடம் மட்டுமன்றி இலங்கையின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடமும் விமான நிலைய அபிவிருத்திக்கு கடும் அழுத்தம் கொடுத்தனர். இதனால் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இலங்கை அரசு ஒப்புதல் வழங்கியது. இதனையடுத்து இந்தியா அதற்கான ஆயத்தப் பணிகளை முன்னெடுத்து சீரான மீளாய்வுகளையும் செய்தது.

இதனையடுத்து அபிவிருத்திக்கான பணியை முன்னெடுத்து இந்தியாவிற்கான விமான சேவையை ஆரம்பிக்க எண்ணி 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி இந்தியக் குழுவொன்று பலாலி விமான நிலையம் வந்து ஆய்வில் ஈடுபட்டனர். இவ்வாறு ஆய்வில் ஈடுபட்ட சமயம் அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன் பங்கிற்கு கருத்து என்கிற வகையில் ஒரு முட்டுக்கட்டையைப் போட்டார். அதாவது விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் அப்பகுதி மக்களின் நிலங்களை இராணுவம் முழுமையாக அபகரிக்கும் சாத்தியம் உள்ளது என்றார். இருப்பினும் அருகில் உள்ள குறுகிய நிலத்துடன் மட்டும் இந்தியாவிற்கான சேவையே ஆரம்பிக்க முடியும் என இந்தியக் குழு அறிக்கையிட்டது. (இந்தக் குழு யாழ்ப்பாணம் வந்தபோது 5 நிமிடம் உரையாற்றும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியது).

பிறகு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. "பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து யாழில் இருந்து நேரடி சேவைகளை மேற்கொண்டால் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருமானத்தில் வீழ்ச்சியடைவதோடு அதனை அண்டித் தொழில் புரியும் தெற்கின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்படும்" எனக் காரணம் காட்டி பணிக்கு தடை விதிக்கப்பட்டதோடு இந்தியா இதற்கான பணியை மேற்கொள்வதனால் முழுமையாக தமது வருமானம் இழக்கும் எனவும் தெற்கில் தெரிவித்தனர். 2017 நிறைவடைந்து 2018ஆம் ஆண்டிலும் பணியை முன்னெடுக்கும் சாத்தியம் இல்லாமலேயே இருந்தது. இந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் விமான நிலைய அபிவிருத்திக்கான வரைபடம் மட்டுமன்றி அதன் மாதிரி வடிவமும் இந்தியாவினால் தயார் செய்யப்பட்டது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட மாதிரி வடிவம் மற்றும் வரைபடங்களிற்காக மட்டும் இந்திய அரசினால் அன்று ஒரு கோடிக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டமை இன்றுவரை பலர் அறிந்திராத உண்மை.

இக்காலப் பகுதியில்தான் இலங்கை சிவில் விமான சேவை அதிகாரிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை பிரதமர் ரணில் தலைமையிலான அரசிற்கு ஏற்பட்டது. ஏனெனில் அப்போது பிரதமருக்கு ஆட்சியை தொடர கூட்டமைப்பு தேவைப்பட்டது. கூட்டமைப்போ பலாலி விமான நிலையம் வந்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. இதனால் பிரதமர் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற வாக்குறுதி வழங்கியதோடு பணியைத் தொடர அதிகாரிகளை கோரினார்.

அரைமனதோடு சிவில் விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தாலும் இந்திய அரசின் நிதியில் முன்னெடுத்தால் தமது பிடி தளர்வடையும் எனக் கருதி முதல் கட்டமாக இலங்கை அரசின் பணத்திலேயே யாழ்ப்பாணம் விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாகத் தரம் உயர்த்தும் பணியை மேற்கொள்ளவும் இரண்டாம் கட்டமாக இடம்பெறும் பாரிய அபிவிருத்திக்கு இந்திய அரசின் உதவியைப் பெறவும் பிரமர் இணக்கம் தெரிவித்து அதற்கான ஆணையை வழங்கினார். அந்தளவிற்கு கூட்டமைப்பு அன்று தேவைப்பட்டது அல்லது ரணில்-மைத்திரி ஆட்சிக்கு கூட்டமைப்பு முட்டுக்கொடுத்தது.

இலங்கையின் 5வது சர்வதேச விமான நிலையம் என்ற பெயரை யாழ்ப்பாணம் விமான நிலையம் பெற்றுக் கொண்டது. இதனையடுத்து 2019ம் ஆண்டு யூலை மாதம் முதல் 2.26 பில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2019-10-17 முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாகத் திறந்து வைக்கப்பட்ட சமயம் உலகில் கொரோனா தாக்கம் பரவ ஆரம்பித்தபோது இலங்கையிலும் பரவியது இதனால் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச விமான நிலையங்கள் பூட்டப்படும்போது கட்டுநாயக்கவும் பலாலியும் மூடப்பட்டன.

ஆனால் கட்டுநாயக்க வழமைக்குத் திரும்பியபோது யாழ்ப்பாண விமான நிலையமோ மெல்ல மெல்ல மூடுவிழாவை நோக்கிச் சென்றது. யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்காக நியமனம் செய்யப்பட்ட அனைத்துப் பணியாளர்களும் முழுமையாக மத்தள விமான நிலையத்துடன் இணைக்கப்பட்டு விட்டனர். இங்கிருந்து பல உபகரணங்களும் கட்டுநாயக்காவிற்கும் மத்தளவிற்கும் இரகசியமாக நகர்த்தப்பட்டது. இதன் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு சாவு மணி அடிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

இத்தனைக்கும் மத்தியில் பலாலி விமான நிலையத்தின் 2ம் கட்ட அபிவிருத்திக்காக இந்திய அரசு 300 கோடி ரூபாவை வழங்க தயாராகவே உள்ளது. விமான சேவை இடம் பெறாத காலத்தில் பணியை இலகுவாக ஆரம்பித்திருக்க முடியும், ஆனால் இலங்கை அதிகாரிகளோ அல்லது தறபோதைய அமைச்சர்களோ திட்டமிட்டு விமான நிலையத்தை நிரந்தரமாக மூட இடம்பெறும் சதிக்கு துணை போனார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.



அதேவேளை தமிழ் மக்களின் வாக்கில் தேர்வாகி அரசிற்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர். பலாலியின் விமான நிலையம் செயல்பட்டால் அது தமது வெற்றி, விமான நிலையம் மூடப்பட்டால் அது கூட்டமைப்பில் தோல்வி என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தவும் காய்கள் நகர்த்தப்படுகின்றன என்று சில தகவல்கள் கூறுகின்றன.

இதேநேரம் 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் இயங்கிய யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கான விமான சேவை இடம்பெற்றபோதும் விமான நிலையக் கட்டணம் யாழ்ப்பாணம் மற்றும் கட்டுநாயக்கா ஆகிய இரண்டிற்கும் விதிக்கப்பட்டதனால் கொழும்பில் இருந்து சென்னை செல்லும் விமான கட்டணத்தை விட அதிகரித்த கட்டணமாகவும் கொழும்பில் இருந்து சென்னை சென்று சென்னையில் இருந்து கொழும்பு திரும்பும் பயணி 30 கிலோ பொருட்கள் அனுமதிக்கப்பட்டபோதும் பலாலிக்கு வரும் பயணிக்கு 20 கிலோ மட்டுமே அனுமதிக்கப்பட்டது குறித்து எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலைமையில் மீண்டும் விமான நிலையம் 26 ஆம் திகதி திறக்கப்படும் என 2020-12-19 அன்று இதே அமைச்சர் தெரிவித்தார். அது எந்த 26 என்கிற கேள்வி தொக்கி நிற்கிறது.

இவை அனைத்திற்கும் மத்தியில் 1957 ஆம் ஆண்டுகளிலேயே திருச்சிக்கு விமானம் சென்ற விமான நிலையம் மூடப்பட்டு கிடப்பதோடு மீண்டும் திருச்சிக்கு விமானம் விடுவதே பேசு பொருளாக உள்ளது. அதுவும் நடக்குமா என்பதும் கேள்விக் குறியாகவே உள்ளது. ஏனெனில் யாழ்ப்பாணம் விமான நிலையம் இயங்குவதனை இலங்கை சிவில் விமானப் போக்கு வரத்து அதிகார சபை விரும்பவில்லை என 2018 ஆம் ஆண்டே கூறப்பட்டது. அதே ஆட்சியாளர்கள் இருக்கும் காலத்தில் விமான நிலையம் இயக்கப்படுமா அல்லது நாடகமா என்பது கேள்வியாக இருந்தாலும் இன்று இந்தியா இல்லையேல் இலங்கை இல்லை என்னும் நிலைமை பொருளாதார ரீதியில் உருவாகி வரும் சூழலில் இந்தியா முயன்றால் வடக்கின் விமான நிலையத்தை திறக்க முடியும் என்பதே யதார்த்தமாகவுள்ளது. இதற்கு இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்குமா என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பு. விமான நிலைய செயல்பாடு குறித்து அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றாரே தவிர அரசோ அல்லது அமைச்சரவை தீர்மானமோ இதுவரை இல்லை.

கடந்த 1958 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவத்தை தனது அனுபவப் பகிர்வாக உதயனிடம் தெரிவித்த மட்டுவிலைச் சேர்ந்த 84 வயதான ஆங்கில ஆசிரியரின் கூற்றானது பலரை வியப்பில் ஆழ்த்தும். யாழில் கல்வி கற்ற பிறகு இந்தியாவின் திருவனந்தபுரம் கல்லூரியிலும் பின்னர் சென்னையிலும் கல்வி கற்ற காலத்தில் பலாலியில் இருந்து திருச்சிக்கு விமானம் பயணித்துள்ளது. அதற்கான கட்டணம் 60 (அறுபது) ரூபா மட்டுமே. அந்த 60 ரூபாவினையும் மீதப் படுத்தும் நோக்கில் மட்டுவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பேருந்தில் பயணித்து யாழில் இருந்து மன்னாரிற்கு ரயில் மூலம் சென்று தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரம் படகில் பயணித்து அங்கிருந்து புகையிரதம் மூலம் திருவனந்தபுரம் செல்வதற்கு அன்று மொத்தமாகவே 19 ரூபா மட்டுமே செலவு ஏற்பட்டது என்ற அவர், மன்னார் - இராமேஸ்வரத்திற்கான கப்பல் கட்டணமாக 3 ரூபா 50 சதம் மட்டுமே அறவிடப்பட்டது என்றார்.

இதேநேரம் பலாலி விமானநிலையம் ஆரம்பிக்கப்பட்டு 1983 இன கலவரத்துடன் மூடி பின்னர் 1985 திறந்து இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த போது அவர்கள் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1990 ஆம் ஆண்டு 2ஆம் கட்ட ஈழப்போரின்போது மூடப்பட்டு 1997ஆம் ஆண்டு முதல் யாழில் இருந்து கொழும்பிற்கான பயண மார்க்கமாகவும் காணப்பட்டது. இவ்வாறு மாறி மாறி மூடுவதும் திறப்பதும் பலாலிலியில் உள்ள யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் சாபக்கேடாகவே உள்ளது. அது மீண்டும் ஒரு பேசுபொருளாக எழுந்துள்ள நிலையில் அதனை வடிவேலு பாணியில் கூறினால் அது "வரும்... ஆனால் ... வராது".



# மேகதாது அணை கட்டும் விவகாரம்; அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கான திட்டங்களை தமிழக அரசு வகுக்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்



மேகதாது அணைக்கு காவிரி ஆணையக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டால், அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தெளிவான திட்டத்தை தமிழக அரசு வகுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “தமிழக அரசு பல்வேறு வழிகளில் தெரிவித்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், நடைபெற உள்ள கூட்டத்தில் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிப்பது பற்றி விவாதிக்கும் முடிவில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உறுதியாக இருப்பது கவலையளிக்கிறது. மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்திற்கு எதிரான சூழ்ச்சியாகவே இந்த நடவடிக்கை தோன்றுகிறது.மேகதாது அணை விவகாரத்தில் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் செயல்பாடுகள் தொடக்கம் முதலே ஐயத்திற்கு அப்பாற்பட்டதாக இல்லை. மேகதாது அணை விவகாரத்தில் கடந்த சில வாரங்களாக நடக்கும் நிகழ்வுகள் அனைத்துமே நாடகத்தனமாகவே தோன்றுகின்றன.

2019ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் மேகதாது அணை குறித்த விவாதம் தொடர்ந்து இடம் பெற்று வந்தது. தமிழகத்தை சேர்ந்த பாமக கட்சி உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்பாலும், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் தமிழக அரசு சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாலும் அந்த முயற்சி தொடர்ந்து முறியடிக்கப்பட்டு வந்தது.கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழகத்தின் எதிர்ப்பை மீறி மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள காவிரி ஆணையம் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், இப்போது மேகதாது அணை குறித்து விவாதிக்க காவிரி ஆணையத்திற்கு அதிகாரம் இருப்பதாக மத்திய சட்ட அமைச்சகம் ஆலோசனை வழங்கியிருப்பதாகக் கூறி, நடைபெறவிருக்கும் கூட்டத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்கப் போவதாக அறிவித்தது தான் தமிழகத்திற்கு எதிரான சூழ்ச்சியின் முதல் அத்தியாயம் ஆகும். இவ்வாறு நம்புவதற்கு ஏராளமான சந்தர்ப்ப சாட்சியங்கள் உள்ளன.காவிரி ஆணையத்தின் முடிவுக்கு எதிராக தமிழகத்திலிருந்து முதல் குரலை எழுப்பியது பாமக தான். இந்த விஷயத்தில் பாமகவின் குரலையே தமிழக அரசும் எதிரொலித்தது. மேகதாது அணை குறித்து விவாதிப்பதற்கான அதிகாரம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு இல்லை என்பதை விளக்கி ஆணையத்திற்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியது; உச்சநீதிமன்றத்திலும் இது தொடர்பாக புதிய மனு ஒன்றை தாக்கல் செய்தது.

மேகதாது அணை விவகாரத்தை நேர்மையுடன் அணுக வேண்டும் என்ற எண்ணம் காவிரி ஆணையத்திற்கு இருந்திருந்தால், இது குறித்து உச்சநீதிமன்றம் முடிவெடுக்கும் வரை காத்திருந்திருக்க வேண்டும். ஆனால், காவிரி ஆணையம் அதை செய்யவில்லை.மாறாக, மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் விஷயத்தில் கர்நாடக அரசை விட, காவிரி ஆணையம் தான் அதிக தீவிரத்தையும், அவசரத்தையும் காட்டுகிறது. நடைபெறவுள்ள காவிரி ஆணையத்தின் கூட்டத்தில் மேகதாது அணை குறித்து விவாதிப்பதை தவிர்க்கும்படி மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு ஆணையிடக் கோரி பிரதமருக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதியும் கூட, இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்தே தீருவோம் என்று காவிரி ஆணையம் பிடிவாதம் பிடிப்பதன் நோக்கம், மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடகத்திற்கு எப்படியாவது அனுமதி அளித்தாக வேண்டும் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?கர்நாடக அரசியலில் காவிரி விவகாரம் எப்போதும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று தான்.

கர்நாடகத்தில் அடுத்த 6 மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்படவிருப்பது, மேகதாது அணை கட்டுவதற்காக கர்நாடக அரசின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது, மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்று கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை தொடர்ந்து முழங்கி வருவது ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது அடுத்து என்ன நடக்கும்? என்பதை யூகிக்க முடியும். மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு காவிரி மேலாண்மை ஆணையம் ஒப்புதல் அளித்தால், அதனடிப்படையில் புதிய அணைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத் பலமுறை கூறியிருக்கிறார்.அதையும், மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் விஷயத்தில் காவிரி ஆணையம் காட்டும் ஆர்வத்தையும் வைத்துப் பார்க்கும் போது, இந்த விவகாரத்தில் அடுத்து நடக்கவிருப்பதை எளிதில் கணிக்க முடியும். இதை உணர்ந்து இந்த விவகாரத்தில் தமிழக அரசு இன்னும் கூடுதல் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டும்.

ஆணையத்தில் அங்கம் வகிக்கும் பிற காவிரி பாசன மாநிலங்களான கேரளம், புதுச்சேரி ஆகியவற்றின் ஆதரவைத் திரட்டி கூட்டத்தில் மேகதாது அணை குறித்த விவாதத்தை தடுக்க வேண்டும்; விவாதம் நடத்தப்பட்டாலும் கூட, மேகதாது அணைக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் காவிரி ஆணையத்திற்கு இல்லை என்பதை சான்றுகளுடன் எடுத்துக் கூறி புதிய அணைக்கு அனுமதி அளிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.இந்த முயற்சிகள் அனைத்தையும் கடந்து மேகதாது அணைக்கு காவிரி ஆணையக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டால், அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தெளிவான திட்டத்தை தமிழக அரசு வகுக்க வேண்டும். தமிழகத்திற்கு சோறு படைக்கும் காவிரி பாசன மாவட்டங்கள் வறண்டு விடாமல் இருப்பதையும், அங்குள்ள விவசாயிகள் வாடி விடாமல் இருப்பதையும் உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.'' என்று அன்புமணி கூறியுள்ளார்.

# அதிமுக பொதுச் செயலர் பதவியை கைப்பற்ற ஓபிஎஸ், பழனிசாமி தீவிரம்

அதிமுக பொதுச் செயலர் பதவியைக் கைப்பற்ற ஓபிஎஸ், பழனிசாமி ஆகியோர் தீவிரம் காட்டி வருகின்றனர். இருவரிடமும் கட்சியின் மூத்த தலைவர்கள் திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர்.முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி இடையே அதிகாரப் போட்டி நிலவுகிறது. 2017 முதல் இருவரிடையே பனிப்போர் இருந்தாலும், பெரிதாக பிரச்சினை எழவில்லை.

இந்நிலையில், வரும் 23ம் தேதிஅதிமுக செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. கட்சிக்கு ஒற்றைத் தலைமை, மீண்டும்பொதுச் செயலர் பதவி பேச்சு எழுந்துள்ள நிலையில், இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பெரும்பாலான மாவட்டச் செயலர்கள் ஒற்றைத்தலைமையை வலியுறுத்தினர்.இதையடுத்து, பொதுச் செயலர் பதவியைக் கைப்பற்றும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இரு தரப்பினரின் ஆதரவாளர்களும் ஓபிஎஸ், பழனிசாமி ஆகியோரை சந்தித்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஓபிஎஸ் இல்லத்தில் துணை ஒருங்கிணைப்பாளர் ஆர்.வைத்திலிங்கம், எம்எல்ஏ மனோஜ் பாண்டியன், முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், முன்னாள் எம்எல்ஏ அசோக், முன்னாள் எம்.பி.கோபாலகிருஷ்ணன், எம்.பி. ஆர்.தர்மர், மாவட்டச் செயலர்கள் தேனிமுகமது சையத்கான், நெல்லை கச்சை கணேச ராஜா உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.அதேபோல, பழனிசாமியை மூத்த நிர்வாகிகள் தளவாய் சுந்தரம்,பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, மாவட்டச் செயலர் வெங்கடேஷ்பாபு உள்ளிட்டோர் நேற்று சந்தித்து, ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. இதற்கிடையே, பழனிசாமியிடம் நேற்று ஆலோசனை நடத்தியமுன்னாள் அமைச்சர்கள் சீனிவாசன், ஆர்.பி. உதயகுமார் ஆகியோர் நேற்று காலை ஓபிஎஸ் இல்லத்துக்கும் வந்து ஆலோசனை



நடத்தினர். அவரை சமாதானப்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தைநடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்களிடம் ஓபிஎஸ்க்குபொதுச் செயலர் பதவி வழங்க வேண்டுமென அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தார்களாம்.

இதற்கிடையில், நேற்று இரவு முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி, முன்னாள் எம்.பி. சிட்லப்பாக்கம் ராஜேந்திரன், எம்எல்ஏ மரகதம் குமரவேல், புதுச்சேரி கிழக்கு மாநிலச் செயலர் ஏ.அன்பழகன் உள்ளிட்டோரும் பழனிசாமியை சந்தித்துள்ளனர். பின்னர் பா.வளர்மதி செய்தியாளர்களிடம் கூறும்போது, ‘‘தொண்டர்கள் எதிர்பார்ப்பது ஒற்றைத் தலைமை.செயற்குழு, பொதுக்குழுக் கூட்டத்தில் இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. தொண்டர்கள் விரும்பும் ஒருவர்தான் தலைமைக்கு வருவார்'' என்றார்.இதற்கிடையே, இரு தரப்பு சார்பிலும் சென்னை பசுமை வழிச் சாலை உள்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

பசுமை வழிச் சாலையில் ஓபிஎஸ்க்கு ஆதரவாக ஒட்டப்பட்ட போஸ்டரை பழனிசாமி ஆதரவாளர்கள் கிழித்ததாகக் கூறி, ஓபிஎஸ் ஆதரவாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீஸார் அவர்களை சமாதானப்படுத்தி, அங்கிருந்து அனுப்பிவைத்தனர். இன்றும் இரு தரப்பினரிடையே பேச்சுவார்த்தை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.அமைதிகாக்க வேண்டும்: ஓபிஎஸ்இதற்கிடையில், சென்னையில் உள்ள ஓ.பன்னீர்செல்வம் வீட்டின் முன் நேற்று காலை முதலே அவரது ஆதரவாளர்கள் திரண்டு, கோஷமெழுப்பி வந்தனர். நேற்று இரவு வீட்டிலிருந்து வெளியே வந்த ஓபிஎஸ், தொண்டர்களை சந்தித்தார். அப்போது ‘‘அதிமுகவின் ஒற்றைத் தலைமை ஓபிஎஸ்;துரோகிகளிடம் கட்சியை ஒப்படைக்காதீர்கள்'' என தொண்டர்கள் கோஷமெழுப்பினர். அப்போது, ‘‘அதிமுக தொண்டர்கள் தயவுசெய்து அமைதி காக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று ஓபிஎஸ் கேட்டுக்கொண்டார்.

## ‘‘அதிமுகவில் ஒற்றைத் தலைமை தேவையில்லை'' ஓபிஎஸ்

அதிமுகவில் இரட்டைத் தலைமையே தொடர வேண்டும் என்று விரும்பும் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், “ஒற்றைத் தலைமை தேவையில்லை” என்று தன் தரப்பு காரணங்களை அடுக்கியுள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தித் தொலைக்காட்சி சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு நானும், எடப்பாடி பழனிசாமியும் இணைந்து பொது ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பொறுப்பின் கீழ் கட்சியை வழிநடத்தி வருகிறோம். நாங்கள் இணைய வேண்டுமென தொண்டர்கள் விரும்பினார்கள். அப்படி ஒரு சூழல் அப்போது உருவாகி இருந்தது.

அந்தச் சூழலில் 'இரட்டைத் தலைமை என்பது சரிவருமா?' என கேட்டேன். 'அது சரிவரும்' என தொண்டர்கள் சொன்னார்கள். 'இருவரும் இணைந்து பணியாற்றினால் நன்றாக இருக்கும்' என தெரிவித்தார்கள். அதன்படி இந்த ஆறு ஆண்டு காலமாக இருவரும் இணைந்து பணியாற்றி வருகிறோம். பொதுச் செயலாளர் பொறுப்பு என்பது மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு மட்டுமே உரித்தானது. அவர்களைத் தவிர வேறு யாருக்கும் அது சேராது" என்று தெரிவித்துள்ளார்.

# கமல் படத்தில் முதன்முறையாக இணைந்து இசையமைக்கும் இளையராஜா - ஏஆர் ரஹ்மான்



கமலின் புதிய படத்தில் இளையராஜா மற்றும் ஏஆர் ரஹ்மான் இருவரும் இணைந்து இசையமைக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. விக்ரம் படத்தின் பிளாக்பஸ்டர் வெற்றியால் மிகவும் மகிழ்ச்சியில் இருக்கிறார் கமல்ஹாசன். தயாரிப்பாளராகவும் நடிகராகவும் பெரும் வெற்றி பெற்றுள்ளது அவரை குஷிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கமல் அடுத்ததாக மலையாள இயக்குனர் மகேஷ் நாராயணன் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்க உள்ளார். மகேஷ் நாராயணன் கடைசியாக பஹத் நடிப்பில் வெளியாகியுள்ள "மாலிக்" படத்தை இயக்கியிருந்தார்.

"மாலிக்" படத்தின் இயக்குனர் மகேஷ் நாராயணன் கமல்ஹாசன் மற்றும் மணிரத்னம் கூட்டணியில் வெளியான "நாயகன்" படம் தான் மாலிக் படத்திற்கு இன்ஸ்பிரேஷனாக அமைந்ததா பல முறை தெரிவித்துள்ளார். மேலும் மகேஷ் நாராயணன் கமல் ஹாசன் நடித்து வெளியான விஸ்வரூபம் படத்தில் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மகேஷ் நாராயணன் அடுத்து கமல் உடன் கூட்டணி அமைக்கிறார். இந்த படம் தேவர்மகன் படத்தின் தொடர்ச்சி போன்ற கதைக்களத்தில் உருவாகிறதாம். தற்போது படம் குறித்த முக்கிய அப்டேட் என்னவென்றால் இந்தப் படத்தில் முதன்முறையாக இளையராஜா மற்றும் ஏஆர் ரஹ்மான் இருவரும் இணைந்து இசையமைக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. தேவர் மகன் படத்திற்கு இளையராஜா இசையமைத்திருந்தார்.

எனவே அதன் தொடர்ச்சியாக உருவாகும் இந்தப் படத்திற்கும் இளையராஜா இசையமைத்தால் நன்றாக இருக்கும் என அவரையும் படத்தில் இணைய கேட்டுக் கொண்டதாக கோலிவுட் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருவரும் இணைந்து பணியாற்றினால் அது வரலாற்றில் முக்கிய சம்பவம் தான். அதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. பெரும்பாலும் இது சாத்தியமாக அதிகம் வாய்ப்பு இருப்பதாகவே கூறப்படுகிறது.

# சின்ன கலைவாணர் விவேக் நினைவாக பச்சாபாளையத்தில் வனப்பூங்கா



தமிழ் சினிமாவில் சின்னக்கலைவாணர் என்று ரசிகர்களால் அழைக்கப்படுபவர் நடிகர் விவேக். கே. பாலசந்தர் மூலமாக சினிமாவில் அறிமுகமாகி தனது தனித்துவ நடிப்பாலும், நகைச்சுவையாலும் நீங்காத இடம் பிடித்தவர். வெறும் நகைச்சுவை மட்டும் செய்யாமல் தன் நகைச்சுவையோடு பல பகுத்தறிவு, முற்போக்கு கருத்துக்களை ரசிகர்களிடம் கொண்டு சேர்த்தவர். கருத்து சொல்வதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் பல நல்ல விஷயங்களையும் செய்தவர் விவேக். அதில் ஒன்றுதான் மரம் நடுதல். அப்துல் கலாம் மீது தீவிரமான பற்று உடைய விவேக் அவரது நினைவாக தமிழகம் முழுவதும் ஒரு கோடி மரங்களை நடும் திட்டத்தை தொடங்கினார். அந்தத் திட்டத்தின் கீழ் ஏகப்பட்ட மரங்களை நட்டும், மரங்கள் நடுவது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார்.

தொடர்ந்து பல்வேறு நல்ல விஷயங்களில் ஈடுபட்டுவந்த அவர் கடந்த 2021ஆம் ஆண்டு மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். அவரது உயிரிழப்பு அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. தமிழ்நாடு அரசு, அவர் வாழ்ந்த வீதிக்கு அவரது பெயரையும் வைத்து கௌரவித்தது.

இந்நிலையில், நடிகர் விவேக் மரணம் அடைந்ததை தொடர்ந்து அவரது நினைவாக ஜநு ர்யீல என்ற பெயரில் ஒரு வனப்பூங்காவை அமைக்க சிறுதுளி அமைப்பு திட்டமிட்டது. பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட பச்சாபாளையம் சென்ட்ரல் எக்சைஸ் காலனியில் ஒரு ஏக்கர் பரப்பளவில் இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறுதுளி அமைப்பின் 19ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடிகர் விவேக்கின் நினைவாக அமைக்கப்பட உள்ள இந்த வனத்துக்கு பூமி பூஜை பச்சாபாளையத்தில் இன்று நடந்தது. விழாவில் பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி தலைவர் சாந்தி, சிறுதுளி அமைப்பின் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து சிறுதுளி அமைப்பின் நிர்வாகிகள் கூறுகையில், "நடிகர் விவேக் இயற்கையை பெரிதும் நேசித்தவர். ஏராளமான மரங்களை வளர்த்து மக்களிடம் சுற்றுச்சூழல் ஆர்வத்தையும், விழிப்புணர்வையும் விதைத்தவர். சிறுதுளி அமைப்புடன் இணைந்து பல்வேறு சூழல் பணிகளை கோவையில் செய்துள்ளாரஅவரின் நினைவாக ஒரு ஏக்கரில் ஜநு ர்யீல வனம் என்ற பூங்கா அமைக்கப்படுகிறது. வெகுவிரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் இதை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்" என்றனர். முன்னதாக பாடகர் எஸ்பிபிக்கும் இந்த அமைப்பு வனப்பூங்கா அமைத்தது. அதனை விவேக்தான் திறந்துவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் சினிமாவில் இதுவரை ரூ. 300 கோடி வசூலித்த படங்கள்



தமிழ் சினிமா, இந்திய சினிமா மக்களால் அதிகம் கவனிக்கப்படும் ஒரு துறை. இதில் முன்னணி நடிகர்களாக இருக்கும் ரஜினி, கமல், அஜித், விஜய் படங்கள் வசூலில் பெரிய சாதனைகள் செய்துள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் இருந்து விஜய், அஜித், கமல், சூர்யா என முன்னணி நடிகர்களின் படங்கள் வெளியாகிஉக்கிறது. இவர்களது படங்களில் கமல்ஹாசனின் விக்ரம் திரைப்படம் படு வேகமாக வசூல் சாதனை செய்து வருகிறது.

வெளியாகி 10 நாட்களில் உலகம் முழுவதும் ரூ. 300 கோடி வரை வசூலித்து சாதனை செய்தது, இன்னும் படம் பெரிய அளவில் வசூலிக்கும் என சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது. தமிழ் சினிமாவில் பாக்ஸ் ஆபிஸில் அதிகம் வசூல் சாதனை செய்த படங்கள் என்றால் ரஜினியின் படங்கள் தான் நிறைய உள்ளன. அவரது படத்தை தாண்டி விஜய், அஜித் படங்கள் இருக்கும்.

தற்போது உலகம் முழுவதும் ரூ. 300 கோடி வசூலித்த தமிழ் படங்களின் விவரம் வெளிவந்துள்ளது. அதில் சமீபத்தில் வெளியான கமல்ஹாசனின் விக்ரம் திரைப்படமும் இடம்பெற்றுள்ளது.

# கடந்தவையும் கடப்பவையும் (35)

**- உமா மோகன் -**

*அவனைப்போல் செல்லிற்கும் குண்டிற்கும் அகப்பட்டு*
*அரவமே தெரியாது மறைந்த மாணவர்கள் மிக அதிகம்*

*பெற்றவரும் சிலசமயம் உற்றவரும் தானன்றி*
*மற்றவர்கள் எவர் அவரை நினைப்பார்கள்? - பூஸ்!*

*பள்ளி அனுபவத்தில் அகப்பட்டான் என்பதனால்*
*சொல்லும் போது சேர்ந்து கொண்டான்*

*அல்லவெனில் இவனும் தான் - அன்று*
*இல்லாது போனாரின் கணக்கெடுப்பில் ஒரு இலக்கம்*

*இவ்வளவே மறைந்த மாணவர்க்கு மரியாதை - இது*
*எம்மினத்து மாணவர்க்கு மட்டுமல்ல*

*காலாகாலமாய் ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு*
*ஆதிக்கத்தில் இருக்கப்பட்டவரால் இழைக்கப்படும் கொடுமைகள்தான்*

*கனடாவின் கதையும் ஒன்று சான்றதற்கு,*

*நூற்றி முப்பது ஆண்டுகட்கு முன்பாக*
*வேற்று நாட்டவர் ஆட்சியால் - பூர்வீக*

*குடிகளாய் இருந்தவர் புறக்கணிக்கப்பட்டார்கள் - அவர்*
*குழந்தைகளும் தனிமைப்படுத்தப்பட்டார்கள் - அவர்கட்கு*

*வாழிடப்பள்ளிகள் அமைக்கப்பட்டன - வேற்று*
*மொழியோடு மேலைப் பண்பாடும் புகுத்தப்பட்டது - அங்கு*

*கிறிஸ்தவ மதம் பரப்ப - பிள்ளைகளும்*
*வலுக் கட்டாயமாய் அதில் இணைக்கப்பட - அது*

*வன்முறையின் வலுவுக்கு வழிவகுக்க - பின்*
*எண்ணற்ற பிள்ளைகள் புதையுண்டார்*

*ஆண்டுகள் பலகழிந்தும் - இன்னும்*
*தோண்டுவதை நிறுத்தவில்லை என்கிறார்கள்*

*இரண்டு ஆயிரத்து எண்ணூற்றைத் தாண்டியதாம்*
*பெயர்ப் பட்டியல் என்கிறது இவ் அரசு*

*காலம் கடந்த கதை ஆச்சு ஆயினும்*
*வேகம் குறையாது வேண்டுகிறார் நீதியை - இன்று*

*பொறுப்பாய்ப் பதில் கூறும் பெரும் பொறுப்பு*
*போப் பாண்டவர் அவர்களுக்கு*

*என்ன செய்வார் அவர்?*

*வத்திக்கானில் இருந்து வரப்போறாராம்*
*மன்னிப்புக் கேட்பதற்கு - அவ்வளவே*


*இவ்வளவு பள்ளிக் குழந்தைகளின் ஆத்மாவும்*
*இவ் ஒரு சொல்லில் அமைதி கொள்ளும் போலும்*

*எங்களுக்கும் அப்படியோ!*

*சித்தார்த்தர் பரம்பரையில் யாரேனும் வருவாரோ - நடந்தது*
*அத்தனைக்கும் ஒருசொல்லில் பதில் தருவாரோ- யார் அறிவார்?*

(தொடரும்)


AGA Beauty Academy presents
VIBRANT HOSPITALITY GROUP
TITLE SPONSOR
L
Latika Gold House
SASI & PRIYA
(647) 996-5922
Miss Tamil Universe
2022
LIVE SHOW & DINNER
POWERED BY
RE/MAX
CR
CAMMERSON PATHMARATNAM
416-578-0123
June 26th, 2022
Registration at 3:00 pm.
Program starts at 4:00 pm
Hilton Toronto / Markham Suites Conference Centre
8500 Warden Avenue, Markham ON L6G 1A5, Canada
Come and be the witness of the coronation of 2022 Miss Tamil Universe
416.677.5511 | misstamiluniverse@gmail.com | misstamiluniversal.com




அறிவித்தல்

## மொன்றியலில் இலங்கைத் உயர்ஸ்தானிகராலயம்வழங்கும் நடமாடும் சேவை

இலங்கைத் உயர்ஸ்தானிகராலயம் மொன்றியல் மக்களுக்கான சேவைகளை வழங்கும் நோக்கில் தமது நடமாடும் சேவைகளைக் **Corporation de Gestion des Loisirs du Parc, 419 St-Roch, Montréal (Quebec) H3N 1K2** என்ற முகவரியில் வழங்குகின்றது.

**காலம்: யூன் 26, 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி முதல் 4:00 மணி வரை**.

கீழ்க்காணும் சேவைகளை அங்கு மக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- புதிய கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள்
- இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பங்கள்
- ஆவணங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்
- பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ் போன்றவற்றைத் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு அல்லது பிரஞ்சு மொழிக்கு மொழிபெயர்த்தல்
- இலங்கைக் குடியுரிமை கொண்ட பெற்றோருக்குக் கனடாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பைப் பதிவு செய்தல்
- இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்வுச் சான்றிதழை உறுதிப்படுத்துதல்
- ஓய்வூதியம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குதல்
- இலங்கை வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரம் தொடர்பான கடிதங்களை வழங்குதல்
- மேலும் தேவையான உயர்ஸ்தானிகராலயச் சேவைகள்

விண்ணப்பங்கள் பிற்பகல் 3:00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யூன் 24ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக 6132338449 6132337821 என்ற தொலைபேசி எண்களில் அழைத்து உங்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

குறிப்பு:
சேவைகளை நாடி வருவோர் கோவிட் தொற்றுகாலத்துக்குரிய கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதோடு, முகக் கவசமும் அணிந்து வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

“ராஜயோகம்”

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புகளுக்கு: 0091-9840160068 / 9940431377


# இவ்வார ராசிபலன்

## 17-06-2022 வெள்ளி தொடக்கம் 23-06-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு, நிலமும் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W





**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம் இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,6
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்திரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை, ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z

(தொடர்ச்சி ___ பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(___ பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையகடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S





**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவினர் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத வி'யங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவி, நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# கனடாவின் தேசிய பழங்குடி மக்களுக்கான தினத்தை பிரம்ரன் மாநகரம் அங்கீகரித்துள்ளது

## City of Brampton Recognizing National Indigenous Peoples Day



கனடாவில் தேசிய பழங்குடி மக்களுக்கான தினத்தை பிரம்ரன் மாநகரம் அங்கீகரித்து. அத்தோடு அதற்கான ஒரு கொண்டாட்டத்தையும் ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் யூன்மாதம் 22ம் திகதி இதற்கான கொண்டாட்டத்தையும் நடத்தவுள்ளது.

பிரம்ரன் மாநகரத்தில் வாழும் அனைத்து மக்களையும் பிரம்ரன் மாநகர சபை இந்தக் கொண்டாட்டத்தைக் கண்டு களிக்குமாறு அன்புடன் அழைக்கின்றது.

BRAMPTON **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

### ப்ராம்ப்ட்டன் நகரில் தேசிய பழங்குடி மக்களுக்கான தினத்தை அங்கீகரித்தல்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 9, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரமானது, ஜூன் 22 மதியம் 12 மணி முதல் மாலை 8 மணி வரை கென் வில்லான்ஸ் சதுக்கத்தில் தேசிய பழங்குடி மக்களுக்கான தினத்தை அங்கீகரிக்க உங்களை அழைக்கிறது. தேசிய பழங்குடி மக்களின் சொந்த வியாபாரச் சந்தையுடன், அந்தி சாயும் நேரக் கொண்டாட்டம், பார்ன் இன் தி நார்த் லிமிடெட் (Born in the North Ltd.,) லிருந்து பிக் ட்ரம் (Big Drum) நிறுவுதல், கணப்புத் தீ அருகில் அரட்டை மற்றும் நேரலை நிகச்சிகளுடன் இவர்களின் சரித்திரம், கலாச்சாரம் மற்றும் ப்ராம்ப்ட்டனின் பலகலைவைத் தன்மையை கொண்டாடுவோமாக.

ஜூன் 21 ஆம் தேதியன்று கனடா நாடு தேசிய பழங்குடி மக்களுக்கான தினத்தை நினைவுகூர்கிறது; இது இவர்களின் சரித்திரம், பாரம்பரியம் மற்றும் ஃபர்ஸ்ட் நேஷன்ஸ் (First Nations) மற்றும் மெட்டிஸ் (Métis) இன் பரவலான தன்மை ஆகியவற்றை அங்கீகரிப்பதற்கேயாகும்.

**பழங்குடி மக்களின் சொந்த வியாபாரச் சந்தை**

ஜூன் 22 அன்று மதியம் 12 மணி முதல் மாலை 8 மணி வரை பாசிமணி மற்றும் கிறிஸ்ட்டல் ஆபரணங்கள், கவிதைகள், ஆடைகள், உபகரணங்கள் கலைப்பொருட்கள் மற்றும் பலவற்றுடன் கூடிய நேரில் வந்து பொருட்களை வாங்கக் கூடிய உள்ளூர் சந்தைக்கு ஆதரவளியுங்கள். சிறுவியாபாரிகள் பற்றிய முழுப் பட்டியலை இங்கு காணுங்கள்: brampton.ca/NIPD.


**அந்தி மாலை கொண்டாட்டம்**

மாலை 6 மணி முதல் 8 மணி வரை, கணப்புத் தீ அருகில் இருந்தபடி நடக்கவுள்ள அரட்டையில் கலந்துகொள்ளுங்கள்; இது நேரில் நடக்கும் நிகழ்ச்சியாகும்; சிப்பேவா ட்ராவெல்லர்ஸ் (Chippewa Travellers) மற்றும் டியான் & ஜான் ஹப்ஃபீல்ட் (Deanne & John Hupfield) ஆகியோரால் நடத்தப்படுவது; பார்ன் இன் தி நார்த் லிமிடெட் (Born in the North Ltd.,) இனால் நடத்தப்படும் பிக் ட்ரம் (Big Drum) எனப்படும் கலை நிறுவுதல் திரை நீக்கம் செய்யப்படுவதைக் கண்டு களியுங்கள்.

**பிக் ட்ரம் (Big Drum) எனப்படும் கலை நிறுவுதல்**

பார்ன் இன் தி நார்த் லிமிடெட் (Born in the North Ltd) இனால் உருவாக்கப்பட்ட 10-அடி விட்டம் கொண்ட பிக் ட்ரம் (Big Drum) நிறுவுதல் என்பது பூமித்தாயின் இதயத் துடிப்பை பிரதிநிதித்துவம் செய்கிறது; இது கொண்டாட்ட கூட்டத்தின் அடையாளச் சின்னமாகும். ஆமைத் தீவு (Turtle Island)

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130



13

## துள்ளி எழுந்து

குளிரூட்டிக்கும் (Air Condition) இதயத்துக்கும் என்ன சம்பந்தம்?

இதயத்துக்கும் சுவாசப்பைக்கும் இடையில் இருக்கும் சம்பந்தம்தான். வீட்டில் இருக்கின்ற எல்லோருக்கும் குளிரூட்டி வேணும். ஆனால் அது என் சுவாசத்தின் எதிரி. கொஞ்ச நேரத்தில் தும்மல் தொடங்கும். மூச்சடைக்கத் தொடங்கும். இழுப்பு சத்தம் கேட்கத் தொடங்கும். மூச்சு விடுவது மிகவும் சிரமமாக (Shortness of Breath) ,ருக்கும்.

குளிரூட்டி வீடு முழுவதற்கும் ஆனது. எங்கள் அறைக்குள் அதனைக் குறைக்க முடியாது. அப்படி முடிந்தாலும் கூட என் துணைவியாருக்கு எல்லாரையும் விட அது அவசியம். """ஒரே வெக்கையாய்க் கிடக்கு ஒரே வெக்கையாய்க் கிடக்கு... படுக்க வழியில்லை.."""" என்று புறு புறுக்கத் தொடங்கி விடுவார்.

என்ன செய்வது என்று ஒருவாறு சகித்துக் கொண்டு இருப்பேன். ஆனால் விடிய எழும்பினால் தொய்வு - இழுப்பு (Wheezing) கூடியிருக்கும். அதற்குரிய மருந்தை ரீகசுநச) உள்ளிழுக்க வேண்டும். ஆகவே இதயமே உனக்குத் தேவையான பிராணவாயு கிடைக்க வழியில்லை. இரவிரவாய் எனக்கு நித்திரையும் இல்லை. என்ரை மனிசி நல்லாய் நித்திரை கொண்டு போட்டு விடிஞ்ச உடனை எழும்பி டொக்டரிட்டை போய் """மூச்சுப் பரிசோதனை (Breathing test) செய்யுங்கோ""" என்று புத்திமதி சொல்லேக்கைதான் ஆக விசர் வரும்.

நான் சொல்லுவன் """எனக்கு இஞ்சையே தெரியுது, இதுக்கு அங்கை ஏன் போய் ஊதிப் பார்க்க வேணும்""" என்று. இதற்குத்தான் சொன்னேன் கலியாணம் பேசும் போது சாதகப் பொருத்தத்தை விட வேறு பொருத்தங்களை பார்க்க வேண்டும் என்று. சாதகப் பொருத்தத்தில் பொருந்தாத வீதங்கள் இப்பிடித்தான் பிரச்சினைகளைக் கொடுக்கும். நான் """குளிராய்க்கிடக்கு""" என்றால் அவ """இல்லை வெக்கையாய்க் கிடக்கு""" என்பா. நான் """வெக்கையாய்க் கிடக்கு""" என்றால் அவ """விறைக்குது""" என்பா. """இது கொஞ்சம் தடிப்பாய்க் கிடக்கு""" என்றால் அவ """மெல்லிசாய்க் கிடக்கு""" என்பா. """குளிராலைதான் ஆஸ்த்மா கூடியது""" என்றால் """சொல்லுக் கேளாமல் அதை இதை சாப்பிட்டதுதான் காரணம்""" என்பா. """இந்த வருத்தங் களிலை இருந்து மருத்துவ விஞ்ஞானம்தான் என்னை காப்பாற்றியது""" என்றால் """தான் கும்பிடுற கடவுள்தான் காப்பாற்றினது""" என்பா. இப்பிடி எங்களுக்குள்ளை நல்ல ஒற்றுமை. உங்கடை குடும்பங்களிலை எப்படியோ தெரியாது.

இப்படிச் சொல்லுவதால் என் துணைவியாரின் தியாகங்களை தயவு செய்து எவரும் குறைத்து மதிப்பிட வேண்டாம். அவ பாவம். எனக்காகவும் குடும்பத்துக்காகவும் கனக்க கஸ்ரப்பட்டவ - கஸ்ரப்படுகிறவ. இது போன்ற சின்ன சின்னப் பிரச்சினைகள் தான் எங்கடை பெரிய பிரச்சினை.

ஆஸ்த்மா வருவதற்கு குளிர் மாத்திரம் காரணமில்லை, ஆகவே மனிசிமாரையோ மனிசர்மாரையோ குறை சொல்லி பயனில்லை என்றொரு வாதமும் இங்கு எழலாம். இதிலும் உண்மை இருக்கிறது. ஏனெனில் ஆஸ்த்மா வருவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. பரம்பரையில் ஆஸ்த்மா இருந்தால் அது வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பதை எனது தந்தையார் அதனால் மிகவும் துன்பப்பட்ட காட்சிகள் என்னைப் பொறுத்தவரையில் உறுதிப்படுத்துகின்றன.

இவற்றை விட சூழல் மாசு, தூசு, குளிர், இரசாயனப் பொருட்கள், புகைத்தல் - புகை பிடிப்போருடன் இருத்தல், தொழிற் கூடங்களின் சூழல்கள், பூனை - நாய் போன்ற செல்லப் பிராணிகளின் மயிர்கள், சில ஒவ்வாத உணவுப் பொருட்கள், நிறமூட்டிகள் என்றெல்லாம் இந்தப் பட்டியல் விரிந்து செல்லும். இவற்றோடு இந்த ஒவ்வாமை (Alergy) ஆளுக்கு ஆள் இடத்துக்கு இடம் வேற்றுமைப்படும் எனும் பொதுப் பண்புகளையும் சிறப்புப் பண்புகளையும் நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இன்றுள்ள மருத்துவ விஞ்ஞானம் இதனை முற்றாக மாற்றமுடியாது என்றும் கட்டுப்படுத்தலாம் என்றும் கூறுவதோடு அவசரத்துக்கு ஒரு மருந்தையும் நீண்ட காலத்துக்கு இன்னொரு மருந்தையும், இரண்டும் கலந்த மருதுகளையும் தருகின்றது. இப்பிடியான ஆட்கள் """கெதியாகச் சாக மாட்டினம். இழுத்திழுத்து கிடப்பினம். அல்லது கிடந்து அழுந்துவினம்""" என்று ஊரில் சொல்வதையும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஈழை - இழுப்புக் காரர் என்று சாத்திரம் சோதிடம் பொருந்தியும் கலியாணம் நடக்காமல் போன சந்தர்ப்பங்களும் ஏராளம்.

ஆகவே ஒருத்தரின் நோய் என்பது அவரது தனிப்பட்ட ஒரு விடயம் என்பதும் அதனை வேறு எவருக்கும் பகிரத் தேவையில்லை மற்றவர்கள் கேட்பது அநாகரிகம் என்பதும் மேற்கத்தைய நாடுகளில் அதிகம் கடைபிடிக்கப்படுவதன் தாரதம்மியங்களையும் புரிந்து கொள்ளத்தான் வேண்டும். பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது என்றொரு பழமொழி. மிக முக்கியமான விடயங்களை வேண்டும் என்று மறைத்துச் சொல்லாமல் இருப்பதும் ஒருவகையில் பொய்தான்.

ஆயினும், இந்த இடத்தில் வள்ளுவர் மிக உறுதியாக நிற்கிறார்.

*பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்*

சரி இதயமே, இப்ப உன் கதைக்கு வந்தால் இப்படியே ஆஸ்த்மா கூடி மூச்சுவிட முடியாமல் மருத்துவ நிலையங்களுக்கு பல தடவைகள் போக வேண்டியும் வந்தது. எனது சுவாசம் ஆஸ்த்மாவால் திணறிய போது என் இதயமே நீயும் துன்பப்பட்டிருப்பாய். அந்தப் புரிதல் ஒன்றுதான் இப்போதைக்கு அவசியம்.

இந்தக் காலங்களில் ஆஸ்த்மா அலைக்கழித்த மாதிரி இதயமே, நீ பெரிய பிரச்சினைகள் எதுவும் தரவில்லை. நல்லபிள்ளையாகவே இருந்தாய். கொஞ்சம் இடம் தந்தால் பிறகென்ன. என் துணைவியாரின் எச்சரிக்கைகளையும் மீறி துள்ளிக் குதிக்கத் தொடங்கிவிட்டேன்.

நான் முன் சொன்னது போல கலை நிகழ்ச்சிகளில் அதிகம் பங்குபற்றத் தொடங்கி விட்டேன். டவுன்ரவுன் றோஸ் அவனியு பாடசாலை (Downtown Rose Avenue school) மண்டபத்தில் தேடகம் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி. அதில் எங்களது இசை நிகழ்ச்சியும் இருந்தது. எங்கள் சொந்தப் பாடல்களே இவற்றில் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் என்னுடன் சாந்தினி வர்மன், எனது மகள் சங்கீதா, ஜீவன்ராம் ஜெயம், ஜெயராஜா ஆகியோர் உடன் பாடினார்கள். மகன் கீர்த்தனன் தபேலா, நடா ஜெயதேவன் கிற்றார். நிகழ்ச்சி பலரும் சுவைக்கும் விதத்தில் நன்றாகவே நடந்து கொண்டிருந்தது.

இப்போது கடைசிப் பாடல். நான் மெட்டமைத்த மஹாகவி உருத்திரமூர்த்தியின் கோடை நாடகத்தில் இடம்பெற்று பின்னால் இசைத்தட்டிலும் வந்த "வெள்ளி சிணுங்கி அழ" எனும் பாடலை நான் பாடத் தொடங்கினேன். இரண்டு கட்டை சுருதியில் பாடல். இறுதிப்பகுதி உச்சஸ்தாயிக்குப் போகும். அதைப் பாடிக்கொண்டிருக்கையில் என் நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது. இதயம் மிக மிக வேகமாக அடிக்கிறது. நாக்கு வரளுகிறது. தண்ணீரைக் குடித்துவிட்டு தொடர்ந்து பாடுகிறேன். சிரமமாக இருக்கிறது. ஆனாலும் வெளித் தெரியாமல் ஒருவாறு சமாளித்து முழுமையாக பாடி முடித்து விட்டேன். பலமான கைத்தட்டு - பாராட்டு கிடைக்கிறது.

எந்தக் கலைஞனுக்கும் காசு கிடைக்காவிட்டாலும் சுவைஞர்களின் பாராட்டுத்தானே இதயமே உன்னை குளிர்விப்பது. அந்தப் பாராட்டுக்களின் பின் அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்த நீ கொஞ்சம் கொஞ்சமாக குளிர்ந்து விட்டாய்.

சிறுகச் சிறுக அந்த நிலையிலிருந்து மீண்டேன். அது எவ்வளவு பாரதூரமான நிலைமை என்பதை நான் அப்போது புரிந்து கொள்ளவில்லை. பின்னாளில் இன்னொரு நிகழ்வில் நான் தொகுப்பாளராகக் கடமையாற்றிய போதுதான் மீண்டும் அந்த நெருக்கடிக்கு நான் உள்ளானேன்.

அதுவரை இதயமே, இப்பிடியான ஒரு நிலைமை உயிராபத்தானது என்பதை நான் அறிந்து கொள்ளவே இல்லை. ஏனென்றால் அது புதுவிதமானது. அந்த அனுபவம், நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாக - ஆனால் விரைந்து சுவாலை விட்டு எரிவதுபோல... அந்த அனல் வெக்கை கூடிக் கொண்டே போகும். இப்படி நெஞ்சுக்குள் உண்டான வேதனை முற்றிலும் வித்தியாசமானது.

முன்னெப்பொழுதும் அனுபவித்து நான் அறியாதது. அதனுடைய உயிராபத்தான தன்மை அப்போது தெரிந்திருந்தால் அந்தப் பாடலை முழுமையாகப் பாடாமல் இடையில் நிற்பாட்டி இருந்திருக்கலாம். பாட்டு முக்கியமோ அல்லது உயிரோடே இருக்கிறது முக்கியமோ...

ஆனாலும் அந்த நேரத்துப் புத்தி என்ன சொல்லி இருக்குமோ அதுவும் தெரியாது. இப்பிடியான சந்தர்ப்பங்களில் புத்தி ஒழுங்காக வேலை செய்யிறேல்லை என்பதுதான் உண்மை.

பல படித்த அறிவாளிகளுக்கு இது நடந்திருக்கு. ஒன்று நடந்திருந்தால்... """அது ஒரு நல்ல சாவு""" என்று சிலர் சொல்லி இருப்பார்கள். படுக்காமல் படுக்கையில் இருந்து மல சலம் கழிச்சு... படுக்கைப் புண்ணாக்கி சீரழிஞ்சு... பெண்சாதி பிள்ளையள் சொந்தக்காரர் """சீ""" எண்டு சொல்லாமல் திடீரென இப்பிடிப் போற சாவுகளை எல்லாரும் நல்ல சாவு எண்டுதான் சொல்லுறவை.

பொதுவாக மாரடைப்பு வகையறாக்கள் இதுக்குள்ளை அடங்கும். "மேடையில் நடித்துக் கொண்டிருக்கேக்கை நான் சாக வேணும்" அல்லது "பாடிக் கொண்டிருக்கேக்கை நான் சாக வேணும்" என்றெல்லாம் சில கலைஞர்கள் பேட்டிகளிலை சொன்னதை நான் கேட்டிருக்கிறன்.

ஏன் இவையள் இப்பிடி ஆசைப்படுகினமோ தெரியேல்லை. அப்பிடி எண்டால் ஒருத்தருக்கும் சொல்லாமல் ஏதேனும் நஞ்சைக் கிஞ்சைக் குடிச்சுப்போட்டு அல்லது சயனைட்டை கடிச்சுப் போட்டு மேடையிலை நடிக்கேக்கை அல்லாட்டில் பாடேக்கை செத்துப் போகலாந்தானே. அப்பிடிச் செத்தால்தான் ஒரு நல்ல கலைஞன் என்று சொல்லுவினமோ தெரியேல்லை.

எனக்கு அப்பிடி ஒண்டும் ஆசை இல்லை...

அட.... எல்லா உயிரும் நீள வாழுறதுக்குத்தானே இந்தப் பாடு படுகுதுகள்.

இவைகளெல்லாம் என் இதயமே, என் சிந்தனைக்கு வந்தன.

இதுபோல என்னை வருத்திய - கடுமைப்படுத்திய அந்த மேடை நிகழ்வும் சில காலத்தின் பின் வந்து சேர்ந்தது.

---

### ஒரு கோப்பை கொஞ்சம் ☕ தேநீர் - 82

***** ***** ***** *****

**கவிஞர் தியாரூ**

தூண்டிலிலே விண்மீன்கள்;
தோள்களிலே வெண்ணிலவு;
காண்கின்ற திசைதோறும்
கதிரவனின் ஒளிமுகங்கள்!
வேண்டுபவை அத்தனையும்
வாழ்வினிலே கைகூடும்;
மாண்புமிகு உள்ளமெனில்
மலைகளுமே மண்டியிடும்!



# அன்பின் தொனி - 655

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன ஜனம்**

**6. வெட்டப்பட்ட ஒரு சுரூபம் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகம்**

மீகா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் தன் தாயை நோக்கி: உன்னிடத்திலிருந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு களவுபோயிற்றே, அதைக் குறித்து என் காதுகள் கேட்க நீ சாபமிட்டாயே, அந்தப் பணம், இதோ, என்னிடத்தில் இருக்கிறது, அதை எடுத்தவன் நான்தான் என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாய் என்றாள். அவன் அந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசைத் தன் தாயினிடத்தில் திரும்பக் கொடுத்தான், அவள்: வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண, நான் என் கையிலிருந்த இந்த வெள்ளியை என் மகனுக்காக முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்தேன், இப்போதும் இதை உனக்குத் திரும்பக் கொடுக்கிறேன் என்றாள். அவன் அந்த வெள்ளியைத் தன் தாய்க்குத் திரும்பக் கொடுத்தான், அப்பொழுது அவன் தாய் இருநூறு வெள்ளிக்காசை எடுத்து, தட்டான் கையிலே கொடுத்தாள், அவன் அதினாலே, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் பண்ணினான், அவைகள் மீகாவின் வீட்டில் இருந்தது. மீகா, சுவாமிக்கு ஒரு அறைவீட்டை நியமித்து வைத்திருந்தான், அவன் ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டுபண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டைபண்ணினான், இவன் அவனுக்கு ஆசாரியனானான். அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான். - **நியாயாதிபதிகள் 17: 1-6**

**7. சாலொமோன் ராஜா தன் மனைவிகள் நிமித்தம் அருவருப்புகளை பின்பற்றினான்**

சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள், அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்தி ரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான். ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட் டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதி னால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன். ஆகிலும் உன் தகப்ப னாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை, உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன். - **1 ராஜாக்கள் 11: 4-12**

**8. ராஜா தன் உயிரைக் காக்க கன்றுக்குட்டிகளை தேவர்களாக்கினான்**

இஸ்ரவேல் ராஜாவாகிய யெரொபெயாம் தமது ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப்போனால், அந்த ஜனங்களின் இருதயம் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் தங்கள் ஆண்ட வன் வசமாய்த் திரும்பி, அவர்கள் என்னைக் கொன்றுபோட்டு, யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் பாரிசமாய்ப் போய்விடுவார்கள் என்று தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆகையால் ராஜாவானவன் யோசனைபண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம், இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான். இந்தக் காரியம் பாவமா யிற்று, ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காகத் தாண்மட்டும் போவார்கள். அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான். யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டிகையையும் கொண்டாடி, பலிபீட த்தின்மேல் பலியிட்டான், அப்படியே பெத்தேலிலே தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டு, தான் உண்டு பண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஸ்தாபித்து, தன் மனதிலே தானே நியமித்துக்கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டினான். - **1 ராஜாக்கள் 12: 26-33**

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# Carefirst Family Health Team


## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான
மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
மொன்றியலில்
புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
"Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1367 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 17, 2022

## யாழ் பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர் என். சண்முகலிங்கனுக்கு உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" பிரதியை கனடா எழுத்தாளர் "வீணைமைந்தன்" சண்முகராஜா வழங்கினார்

அண்மையில் கனடாவில் வெளியாகிய 'உதயன்' இலங்கைச் சிறப்பிதழ் பிரதிகள் கனடாவில் மாத்திரமல்ல தமிழர்கள் வாழும் பல நாடுகளுக்கும் நண்பர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.,



இங்கு காணப்படும் படத்தில்' யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கலை இலக்கியவாதியுமாகிய பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களுக்கு கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ்' பிரதியை உதயன் தொடர் எழுத்தாளர் 'வீணைமைந்தன்' சண்முகராஜா வழங்குவதைக் காணலாம்

அத்துடன் இலங்கையிலும் சில இடங்களிலும் கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ்' அறிமுக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.
.-(படங்கள் லம்பேர்ட் -அமலன் யாழ்ப்பாணம்)

## டர்ஹாம் தமிழ் ஒன்றியத்தால் நடத்தப்பெறும் நிதி சேர் இராப்போசன நிகழ்விற்கான அழைப்பு

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் சமூகத் திட்டங்கள் மற்றும் சுயதொழில் தொழில்முனைவோர் தேவைகளை ஆதரிப்பதற்காக நிதி திரட்டும் இராப்போசன நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரும் அழைக்கப்பெறுகின்றார்கள்.

ஏதிர்வரும் யூன் 25ம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு **Audley Recreation Centre (Banquet Hall) 1955 Audley Road North, Ajax** என்னும் விழா மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இங்ஙனம், டர்ஹாம் தமிழ் ஒன்றியத்தின் நிர்வாகசபையினர்

## கனடாவில் உதயன் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளித்து வரும் பிரதம ஆசிரியர்









அண்மையில் வெளியாகிய 'உதயன்' இலங்கைச் சிறப்பிதழ் பிரதிகளை கனடாவில் பல அன்பர்களுக்கு நேரடியாகக் கையளித்து வருகின்றார் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம்.

கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ்' வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்கள் சிலர் கடந்த 29-05-2022 அன்று நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலவில்லை.

அவ்வாறான வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்களுக்கு இலங்கைச் சிறப்பிதழ்' பிரதிகளை நேரடியாகக் கையளிக்கப்பெறுகின்றன.

அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் கனடா உதயன் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் இரண்டாவது தடவையாகவும் ஒன்றாரியோ மாகாண சபைக்கான மார்க்கம்-தொர்ன்ஹில் தொகுதியின் அங்கத்தவராக அண்மையில் வெற்றியீட்டியுள்ளவருமான திரு லோகன் கணபதி, உதயன் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவர்களும் **Siva & Joy Real Estate Team** வீடு விற்பனை முகவர் நிறுவுனத்தின் பங்காளர்களும் சமூக ஆர்வலர்களுமான திருவாளர்கள் சிவா சண்முகநாதன் மற்றும் ஜோய் செல்வநாயகம், உதயன் பத்திரிகைக்கு தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் **Century 21 Innovative Realty Inc** வீடு விற்பனை முகவர் நிறுவுனத்தின் பங்காளரும் சமூக ஆர்வலருமான திரு சமீம் முகமட், **Home Life Future Realty Inc** நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியும் பிரபல வரி ஆலோசரும் சமூக ஆர்வலருமான திரு செல்வா வெற்றிவேல், கனடா உதயன் பத்திரிகைக்கு தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவுரும் பிரம்ரன் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாவுமாகிய திரு விஜயநாதன், **FRONTLINE COMMUNITY SERVICES** சேவை வழங்கும் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி திருமதி விஜயா குலா ஆகியோர்க்கு 'இலங்கைச் சிறப்பிதழ்' பிரதிகளை கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கையளிப்பதைக் காணலாம்.

## உதயன் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை சிவாச்சாரியப் பெருமக்களுக்கு நேரடியாக வழங்கிய பிரதம ஆசிரியர்



கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" கடந்த 29-05-2022 அன்று நடைபெற்ற விழாவில் வெளியிடப்பெற்றது.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்கள் நண்பர்களுக்கு அதன் பிரதிகளை நேரடியாகக் கையளித்து வருகின்றார் அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் கனடா உதயன் பத்திரிகையின் முதலாவது இதழை 1996ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதியன்று பிரதம ஆசிரியர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கணேச சுவாமிகள் தியாகராஜக் குருக்கள் அவர்களுக்கும் கனடா உதயன் பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவந்த நாட் தொடக்கம் ஆதரவையும் ஆசியையும் வழங்கி வருபவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுக்கும்



"கனடா உதயன்" இலங்கைச் சிறப்பிதழ்" பிரதியை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கையளிப்பதைக் காணலாம்.. படம்: சபேசன்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker